Registered as a Newspaper

PUMP with Standard Accessories Select

NEWTONE Water Pumps

சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான உதிரிப்பாகங்களை கொண்டு தயாரிக்கப்படும்

நீயூரோன் வாட்டர் பம்புகளை வாங்குங்கள்

மலை: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஹு வைகாசி மீ 07 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 14 (20-05-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 55

வெளிநாடுகளில் இருந்து

வடக்கிற்கு வரும் காசோலைகள்

மத்திய தபாலகத்தில் மோசடி!

பதிவுக் கடிதங்களும் கையாடல்

— அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ் —

யாழ்ப்பாணம், மே 20

வெளிநாடுகளில் இருந்து, வட பகுதிக்கு அனுப்பப்படும் காசோலைகள் மிக பெரும் எண்ணிக்கையில் மோசடி செய்யப்படுகின்றன.

இந்த மோசடிகள், கொழும்பு மத்திய தபால் அலுவலகத்திலேயே நடைபெறுவதாக அறிய வந்துள்ளதாம்.

வெளிநாடுகள் பலவற்றிலும் வசிக்கும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள், தங்கள் குடும்பத்தினருக்கு அனுப்பும் பணம் மோசடி செய்யப்படுவது ஏற்கனவே நடந்து வந்தது தெரிந்ததே. ஆனல் இப்போது அது மிகப் பயங்கர வடிவம் எடுத்துள்ளது. பெரும் எண்ணிக்கையான காசோலைகள் மோசடி செய்யப்படுகின்றனவாம்.

இதுபற்றித் தெரிய வருவதாவது:-

வெளிநாடுகளில் உள்ளவர்களில் பலர் தாம் வடபகுதிக்கு அனுப்பும் பணத்தினைக் காசுக் கட்டளைகளாக அல்லது காசோலைகளாக தபாலில் அனுப்புகின்றனர்.

இந்தத் தபால்களைக் கொழும்பு மத்திய தபாலகத்தில் இயங்கும் ஒரு கும்பல் இனங்கண்டு அபகரித்துச் சென்று, போலிக் கையொப்பம் இட்டு, காசோலைகளை மாற்றி வருவதாகக் கூறப்படுகிறது.

பதிவுத் தபாலில் வரும் காசுக்கட்டளைகள் மற்றும் காசோலைகள்கூடக் கையாடப்படுகின்றன எனச் சொல்லப்படுகிறது.

கையாடப்படும் காசோலைகள் மற்றும்காசுக்கட்டளைகளை மாற்றுவதற்கு வசதியாக அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயரில் புதிய வங்கிக் கணக்குகளைக்கூட மோசடிக்காரர்கள் வங்கிகளில் திறப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

கொள்ளையரைப் பிடிக்க முயன்ற இளைஞர் மீது சூடு!

கொக்குவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 20

கொள்ளையரைப் பிடிப்பதற்காக அதிகாலையில் வீட்டுக்கு வெளியே ஓடிவந்தவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

கொக்குவில் அரசடியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் திரிதரன் (வயது 19) என்பவரே இவ்வாறு சூட்டுக்கு இலக்கானவராவார்.

கொக்குவில் ஆனைக்கோட்டை வீதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கொள்ளை முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

வீட்டில் இருந்தவர்கள் கொள்ளையரைக் கண்டு கத்திக் குரல் எழுப்பினர்.

சத்தத்தைக் கேட்டுக் கொள்ளையரைப் பிடிப்பதற்காக மேற்படி இளைஞர் வீட்டுக்கு வெளியே ஓடிவந்ததாகவும்-

அவ் வேளையில் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலில் படுகாயமடைந்த நிலையில் இந்த இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-10-3)

சுபநேரம்

20—05—1989

சுபநேரம்:
02.52 முதல் 04.22 வரை
ராகுகாலம்:
08.52 முதல் 10.22 வரை
வைகாசி விசாக, பூரணைவிரதம்

யாழ் நகரில் வடிகால்களை சீரமைக்க ரூபா 50 லட்சம்!

யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள நீர் வடிகால்களை திருத்தியமைப்பதற்காக 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கழிவு நீர் வடிகால்களில் அனேகமானவை நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் சீர்கெட்டுப் போயிருக்கின்றன.

இவற்றை சீரமைப்பதற்காகவே 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ் நகரத்தில் உள்ள 20 வீதிகளை முன்னுரிமை அடிப்படையில் திருத்தியமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (உ-3)

வாகனங்கள் மீது கல் வீச்சு

யாழ்ப்பாணம், மே 20

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பல வாகனங்கள் புத்தளத்துக்கு அண்மையில் கல்லெறிக்கு இலக்காகின.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

வீதிக்கு குறுக்கே போடப்பட்டிருந்த கட்டைகளை விலத்தி ஓடி வந்த வாகனங்கள் மீதே கற்கள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கல்லெறிக்கு இலக்காகி கண்ணாடி உடைந்த நிலையில் மூன்று தனியார் பஸ்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. [உ-10]

ஆஸ்பத்திரியில் இளைஞர் சடலம்

யாழ்ப்பாணம், மே 20

சூட்டுக் காயத்துடன் சடலம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரியில் இந்தியப் படையினரால் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

உரும்பராயைச் சேர்ந்த அ. சுரேந்திரன் (வயது 30) என்பவரின் சடலமே இது என்று அறியவந்தது. [உ-10]

இத்தாவிலில் துப்பாக்கிச் சூடு

பச்சிலைப்பள்ளி, மே 20

நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் இத்தாவில் வேம்போடுகேணிப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனல் இப்பகுதி மக்கள் இரவோடிரவாக வீடுகளிலிருந்து வெளியேறி அயல் கிராமங்களில் தஞ்சம் புகுந்தனர்.

இதையடுத்து வீதியில் நின்ற உழவு இயந்திரம் ஒன்று பனை முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-117]

புலோப்பளையில் குண்டுச் சத்தம்

பச்சிலைப்பள்ளி, மே 20

நேற்று பிற்பகல் மூன்று மணி தொடக்கம் புலோப்பளையில் குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

மேலதிக விபரங்கள் இடைக்கவில்லை, [ஒ-117]

சிப்பாய் கடத்தப்பட்டார்

காலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் காமன் சில்வா இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலி முகாமில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த சமயம் இவர் கடத்தப்பட்டார். (உ-எ)

வடமராட்சியில் ஹர்த்தால்

வல்வெட்டித்துறை, மே 20

நேற்று வடமராட்சியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனல் வீதிகள் பலவும் வெறிச்சோடிக் கிடந்தன.

'சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன் எஸ். ரி. அகிலன் படுகொலை செய்யப்பட்டதை ஆட்சேபித்தே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-160-70)

பாடசாலைகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், மே 20

கடந்த திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான காலத்தில் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் அனேகமானவை இயங்கவில்லை.

மாணவர்களின் பகிஷ்கரிப்பு நடவடிக்கையினலேயே பாடசாலைகள் செயலிழந்தன. (உ-9)

செய்திச் சாரம்

திங்களன்று கடைகளைப் பூட்ட கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 20

நாளை மறுதினம் திங்கட்கிழமை பௌர்ணமி தினத்தன்று அனைத்து வர்த்தக ஸ்தாபனங்களையும் பூட்டி தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குமாறு யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்கம் கேட்டிருக்கிறது. (உ)

துப்பாக்கி வெடித்து இளைஞர் பலி!

வல்வெட்டித்துறை, மே 20

ரோந்து சென்ற ஜவானின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் அவருடன் அருகில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் மரணமானர்.

கடந்த வியாழக்கிழமை மாலை நெல்லியடியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

உயிரிழந்தவர் எஸ். ஜெயந்தன் (வயது 22) என அடையாளம் காணப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் பின்னர் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்த இளைஞரின் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேற்றுக் காலை 9-30 மணிக்கு மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்து இந்தச் சடலத்தைப் பொறுப்பேற்றனர். (உ-160-70)

டாக்டர் சுட்டுக் கொலை

கொழும்பு, மே 20

மேற்கு மாகாண சபையின் ஐ. தே. க. உறுப்பினரான டாக்டர் சிரில் பெரேரா நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடவத்தையில் உள்ள தனது பல் வைத்திய நிலையத்துக்கு டாக்டர் பெரேரா காரில் சென்று இறங்கிய போது, இருவர் அவரை வழி மறித்துச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர். (உ-எ)

மரணத்தறுவாயில் மார்க்கோஸ்!

ஹவாய் மே 20

பிலிப்பின்ஸின் முன்னுள் ஜனதிபதி பெர்டினன்ட் மார்கோஸுக்கு எந்த நேரத்திலும் மரணம் சம்பவிக்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

இருதயம், சிறுநீரகம் ஆகியன மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் திரு. மார்கோஸ் ஹவாய் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-எ)

குடத்தனையில் இருவர் காயம்

வல்வெட்டித்துறை, மே 20

கடந்த வியாழக்கிழமை நண்பகல் குடத்தனைப் பகுதியில் தாக்குதலுக்கு இலக்கான இருவர் காயமுற்ற நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

கணபதிப்பிள்ளை குணரட்ணம் (வயது 29) கணபதிப்பிள்ளை செல்வராசா (வயது 21) ஆகியோரே மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டவர்களாவர். (உ-160)

ஜீப் கடத்தல்

கொழும்பு, மே 20

விவசாய அபிவிருத்தி அதிகார சபை இயக்குநருக்குச் சொந்தமான பஜேரோ ஜீப் ஒன்றை ஆயுதம் தரித்தவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பன்னிப்பிட்டியா பகுதியில் வைத்துக் கடத்தினர். (உ-எ)

திருமலை கோட்டையில் இந்திய முகாம்

தமிழ் அரச ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி, திருகோணமலை பிரட்ரிக் கோட்டைக்குள் இந்திய இராணுவத்தினரும் தமது முகாம் ஒன்றை உடனடியாக நிறுவுவர்.

கடந்த வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெற்ற புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட மாநாட்டின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

புனர்வாழ்வு துணை அமைச்சர் வின்சன்ட் பெரேரா தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது. [ஒ]

நெடுங்கேணியில் வீடுகள் எரிப்பு; கட்டடங்கள் பலவும் சேதமாகின

இனிமேல் நடவாது பார்க்க அதிகாரிகள் உறுதி

வவுனியா, மே 20

கடந்த சனிக்கிழமை நெடுங்கேணியில் இடம்பெற்ற மோதலின் பின்னர் ஏற்பட்ட அசம்பாவிதங்களினல் சுமார் இருபது வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மகா வித்தியாலய அலுவலக அறை, ஆசிரியர் விடுதி, வைத்திய சாலையின் ஒரு பகுதி ஆகியன சேதமடைந்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கடைகள் பலவும் உடைக்கப்பட்டுள்ளதாகவும், சனி அன்று இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் பொன்னன் உத்தமபுத்திரன் என்பவர் கொலையுண்டதாகவும் நெடுங்கேணி வாசிகள் தெரிவிக்கின்றனர்.

மோதல் சம்பவத்தின் பின்னர் இடம்பெற்ற தேடுதலில் ஒரு பெண்மணி, மலேரியா தடுப்பு இயக்கத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் திரு. தேவநாதன், பாடசாலை மாணவனுன ஜெயரூபன், நா. சாந்தரத்தினம், பொ. பாலகிருஷ்ணன், க. விஞயகமூர்த்தி ஆகியோர் உட்பட வேறு சிலரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இதனிடையில், நெடுங்கேணி மோதலின் பின்னர் மாவட்டத்தின் மூத்த குடிமக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து, சம்பவம் நடந்த இடத்திற்கு இந்திய அமைதிப் படையின் உயரதிகாரிகள் விஜயம் செய்து நிலைமையை

(6-ஆம் பக்கம் பார்க்க)

முதலாம் வகுப்பு முதல் ஆங்கில பாடபோதனை!

நாட்டில் உள்ள சகல அரச பாடசாலைகளிலும் இரண்டாம் வருடம் (முதலாம் வகுப்பு) முதல் ஆங்கிலம் போதிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேபோன்று சிங்களப் பாடசாலைகளில் தமிழ் ஒரு பாடமாகவும்-

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் ஒரு பாடமாகவும் போதிக்க திட்டமிடப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் லொக்கு பண்டார நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். [உ-எ]

ஒரு தலைப்பட்சமாக

ஜே. வி. பி. யுத்த நிறுத்தம் ஒரு வார காலத்திற்கு

கொழும்பு, மே 20

மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் ஒருவார காலம் நடைமுறையில் இருக்கும் என்று ஏ. பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியினல் சிங்கள மொழியில் வெளியிட்டதாகக் கூறப்படும் ஓர் அறிக்கை கொழும்பில் உள்ள செய்திப் பத்திரிகைகள் மற்றும் செய்தி ஏஜென்ஸிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணி தாக்குதல்களை இக் காலத்தில் நடத்தாது. தாக்கப்பட்டால் எமது ஆதரவாளர்கள் எதிர்த் தாக்குதலில் ஈடுபடுவர் - இப்படி முன்னணியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் பற்றி இலங்கை இராணுவப் பேச்சாளர் கருத்து வெளியிட மறுத்துவிட்டார்.

''உத்தியோகபூர்வமாக எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை'' — என்று சொன்ன

(6ஆம் பக்கம் பார்க்க)

தென்மராட்சியில் நேற்று ஊரடங்கு!

யாழ்ப்பாணம், மே 20

சாவகச்சேரி, கொடிகாமம் உட்பட்ட தென்மராட்சியின் சில பகுதிகளில் நேற்று உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

நேற்றுக்காலை ஆறு மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட போதிலும் நண்பகலளவில் இது தளர்த்தப்பட்டதாகத் தெரியவந்தது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் கண்டி வீதியூடான வாகனப் போக்குவரத்துக்கள் அனைத்தும் கிளாலி கச்சாய் ஊடாக நடைபெற்றன.

எனினும் நேற்றுக் காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்பட்ட பஸ்களில் சில இந்த ஊரடங்கு உத்தரவு காரணமாக பயணத்தைத் தொடராமல் இடைவழியில் திரும்பின.

ஊரடங்கு வேளையில் படையினர் தேடுதல் நடத்தியதாகவும் சிலர் கைது செய்யப்பட்டதாகவும் அறியவந்தது. [உ-ஒ-10]

தீயில் கருகி 22பேர் மரணம்

ஹைதராபாத், மே 20

ஆந்திரப் பிரதேசத்தில் 22 பேர் எரிந்து மாண்டனர்.

ஹைதராபாத் அருகே நான்கு கிராமங்கள் தீயினல் பலத்த சேதமடைந்தன.

500க்கு அதிகமான வீடுகள் சாம்பராகின. [உ-எ]

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

முயல்கள் லவ்பேட்ஸ் பல வர்ணங்களிலும் கூடுகளும் கறவைப் பசுக்களும் விற்பனைக்கு உண்டு தொடர்பு: திருமதி K, சாவ்வதி C/o காரோஸ்வா சர்மா, 26. கோயில் வீதி, கொக்குவில். [543]

J V C Video camera R-7C (C C D Pick-Up N V 200 National Video Deck மற்றும் வீடியோ படப்பிடிப்புக்கு தேவையான சகல உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு கா. ஐங்காவேல், நீர்வேலி தெற்கு, நீர்வேலி (10980)

Suzuki G.S 125 விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 120, சுபீபா அப்துல் ஹமீட் வீதி, சோனக தெரு, யாழ்ப்பாணம். (560)

பூரண விளைத்திறன் உடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. Country of Origan Holland பிள்ளையார் 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (555)

ஆனைக்கோட்டையில் ஆலடிக்கு அருகாமையில் பிரதான வீதி முகப்புடன் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு; (தினசரி காலை 9.00 க்கு முன்னர் பிற்பகல் 2.00 க்கும் 4.00 மணிக்கும் இடையில்) 66, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார் பண்ணை. (10996)

வீடு விற்பனைக்கு

கீரிமலை கடற்கரை வீதியில் ஹார்பர்வியூ ஓட்டலுக்கும் சந்திக்கும் இடையில் சகல வசதிகளும் கொண்ட வீடும் ஆறு பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: C/o Taxman, Kannathiddy Junction Jaffna. (554)

காணி விற்பனைக்கு

கோண்டாவில் இருபாலை வீதியில் மின்தறி ஆலைக்கு முன்னால் 20 பரப்புத்தோட்டக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகப் பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- திருமதி வி. சி. சுப்பிரமணியம் C/o இ முருகையா, புகையிரத வீதி, கோண்டாவில் மேற்கு. (545)

நாவற்குழியில் சண்டி வீதியில் அருணா பேக்ஹவுஸ் அருகாமையில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் நாலு பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு:- பண்டிதர் பொன்னுத்துரை, வைரவர் கோவிலடி, மட்டுவில் தெற்கு, சைதடி, நுணுவில். (10995)

கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

Dekalb பிறவுண் சேவல் குஞ்சு 19, 20, 21 ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். 50க்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3 50. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (550)

கோழிக்குஞ்சு விநியோகம்

(Dekalb) பிறவுண் பேடு சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (23-5-89) செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும். பிறவுண் சேவல் குஞ்சுகள் 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ3/50. முன்கூட்டியே பதிவு செய்க. இல:9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (551)

தேவை

பிளேட்டின் மெஷினில் அச்சிடக்கூடிய அனுபவமுள்ள ஒரு மெஷின்மன் தேவை. சிலிண்டர் மெஷினிலும் அச்சிடக்கூடியவர் விரும்பத்தக்கது மெஷினில் அச்சிடுப் பழக விரும்புவர்களுக்கும் இடம் உண்டு நேரில் வரவும். ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [546]

தேவை

ஆங்கிலம் ஓரளவு தெரிந்துள்ள பெண் ஒருகிநேர வேலைக்கு தேவை. தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, கட்டெழுத்து தெரிந்திருப்பின் நல்லது. வேலை செய்ய வசதியான நேரம், எதிர்பார்க்கும் சம்பளம் பிறந்த திகதி படிப்பு ஆகியனவும் அடங்கிய மாழ விபரங்களையும் சொந்தக் கையெழுத்தில் எழுதி 26-5-89 க்கு முன்னர் அனுப்பிவைக்கவும் 526, C/o உதயன், யாழ்ப்பாணம். (558)

எமது அச்சகத்திற்கு கொம்போஷிங். பைன்டிங் அனுபவம் உள்ளவர்கள் தேவை. தங்குமிட வசதி செய்யப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கவும். தொடர்பு: ஜேயல் பிறின்ரேஸ் & பப்ளிஷேர்ஸ், கண்டி வீதி, கிளிநொச்சி. (சி/2605)

இளைப்பாறிய இளம் அரசாங்க உத்தியோகஸ்தருக்கு கௌரவமான தொழில் தேவை. 524, C/o உதயன் யாழ்ப்பாணம். (553)

மணமகள்தேவை

யாழ். இந்து வேளாளர் குலத்தை சேர்ந்த 30 வயது நிரம்பிய அழகிய (ஜேர்மன் சிற்றிசன் இரகபாவமற்ற A/L படித்த மணமகனுக்கு அழகிய பெண் தேவை. படிப்பு ஓரளவு என்றாலும் கவனிக்கப்படும். தொடர்பு: 525, C/o உதயன், யாழ்ப்பாணம். (556)

மணமக்கள் தேவை

உங்கள் பருவ மங்கையர் கழுத்தில் தாலி ஏற வேண்டுமா? மங்களமான அலுவலில் நாட வேண்டிய இடம் மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். கிளை: மாட்டீன் மாஸ்டர், மவுண்ட்காமல் ரோட், குருநகர். (10953)

மணமகன் தேவை

யாழ்ப்பாண கத்தோலிக்க குருகுல மணப்பெண்ணுக்கு 35 41வயதுக்குஇடைப்பட்ட மணமகன் தேவை. போதிய சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [10952]

WANTED

Wanted Daschound or Alsatian Adult Dogs. Also Love - Birds with Cage, write, giving Details- Joachim, 'padua' Pandateruppu. (C/2606)

Wanted Accountant Male or Female

For A leadingfirm Person with at Least 5 year Experience and Accountancy Qualification Apply Before 25/5/89 519, C/o Uthavan Jaffna. [536]

NEW CITY TRADERS

Daytron T. V 12'', 14'' B & W 14'', 20'' கலர் Phillips 20'' Gas cooker, Hotplate, Booster, T. V Antennas Pipe fan& ரேடியோ வீடியோ கசெற் ரெக்கோடர் ஓடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll சுவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [சி/2505]

ஆனந்தா தேயிலை

ஆனந்தா தேயிலையின் புதிய விலை விபரம் 100கிராம் ரூபா 7/50. 50 கிராம் ரூபா 4/-, 15 கிராம் ரூபா 1/50, ஏனைய விபரங்களுக்கு ஆனந்தா ரீ ரேடர்ஸ், சந்தரோடை, சுன்னாகம். (538)

வாடகைக்கு

சகல வசதிகளுடனும் அமைந்த வீடு உடன் வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு த. நாகரெத்தினம், 141/4, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (557)

வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனை மற்றும் நகைகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்: கனகசபை தர்மகுலசிங்கம், ''கணேஸ் வாசா'' வாரிவளவு, காரைநகர் C/o, சித்திரதங்கமாளிகை, 213C கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். [257]

தவறிவிட்டது

104 ஸ்ரீ 7274 இலக்கத்தை உடைய சாளி மோட்டார் சைக்கிளின் லைசன்ஸ்சும், இன்சூரன்ஸ்சும் திருநெல்வேலிச் சந்திக்கும்மனோகரா கியேட்டர் சந்திக்கும் இடையில் தவறி விட்டது. இதனைக்கண்டெடுப்பவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (552)

VACANCY

Vacancy for English Typist OverThirty years. Applications By Post - Joachim, 'Padua' Pandateruppu. (C/2607)

MATRIMONIAL

Variety of horoscopes Brides & Bride-grooms available with full Particulars Details arrangements guaranteed, call over at:- New Mangalya, 14, Vidan's Lane, Colombuthurai west. (544)

தபால் மூலம் கல்வி

தபால்மூலம் ஆங்கிலம் பேச வாசிக்க எழுத அல்லது முழு இலக்கணத்துடன் பயில பயிற்சிகள் நடைபெறுகின்றன. சுய விலாசம் எழுதி முத்திரை யொட்டிய நீளத் தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும். இம்பீரியல் இன்ஸ்ரியூட், 25, மாட்டின் லேன், யாழ்ப்பாணம். (559)

5ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சை

புதிய சிபார்சுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட புலமைப் பரிசிற் பரீட்சைக்கான கணிதமும், தமிழும் விற்பனையாகிறது. ஆக்கியோன் ஆ.ந. இராஜேந்திரன். விலை ரூபா 40 மட்டும். கிடைக்கும் இடங்கள் யாழ். முன்னணி புத்தகசாலைகள். [529]

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமிழ் மொழியில் அதிக புள்ளிகள் பெறவும் வசதியான பாடசாலையில் அனுமதி கோரவும் வழிசெய்யும் கட்டுரைத் தேன் துளி 60. ஆக்கம்: க.சொக்கலிங்கம் M.A. உயர் கல்விப் பதிப்பக வெளியீடு. விலை ரூபா 17/50. புத்தகசாலைகளில் கிடைக்கும். (10883)

SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 22 - 5 - 89 திங்கள், புதன் நாட்களில். நேரம் காலை 6 மணி — 7½ மணி வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். [10838]

TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

கவனிப்பாரற்ற கரந்தன் வீதி

யாழ்ப்பாணம், மே 20

நீர்வேலி கந்தசாமி கோவிலடியிலிருந்து ஊரெழு அம்மன் கோவில் வரையுள்ள கரந்தன் வீதி பாவிக்க முடியாத நிலையில் பழுதடைந்துள்ளது.

இதனால் தமது விவசாயப் பொருள்களை உரிய நேரத்தில் சந்தைப்படுத்த முடியவில்லை என இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். [ச-117]

மாணவர்களின் கருத்தைப் பெற்று ஆண்டு 9 வர்த்தகநூல் தயாரிப்பு

யாழ்ப்பாணம் மே 20

நாடு முழுவதிலும் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது பாடசாலைகளிலும் இருந்து 1500 மாணவர்களின் கருத்தைப் பெற்று ஆண்டு 9 வர்த்தகமும் கணக்கியலும் என்னும் நூல் தயாரிக்கப்படவுள்ளது.

இக் கருத்துக்கணிப்பு வினாக்கொத்து மூலமாகவும் கலந்துரையாடல்மூலமாகவும் பெறப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் கனகரத்தினம் ம. ம. வி. வேம்படி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சுழிபுரம் மெய்கண்டான் ம வி. சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகள் இப்பணியை மேற் கொள்ளுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்று தேசியகல்வி நிறுவகம் அறிவித்துள்ளது.

இம்மதிப்பீடு யாழ் மாவட்டத்தில் இம்மாதம் 23 ஆம் திகதியிலிருந்து 31 ஆம்திகதிகுள் பூர்த்தி செய்யப்படும்.

புனரமைப்பு ரூபா 25,000

திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயப் புனர் அமைப்புக்கு வடக்கு கிழக்கு மாகாணசபை 25, 000ரூபா அன்பளிப்புச் செய்துள்ளது.

இக் காசோலையை அண்மையில் நிதி அமைச்சர் திரு பி.கிருபாகரன் ஆலய நிர்வாகிகளிடம் கையளித்தார். (ச-21)

பாணின் விலையை உயர்த்த காரணம் எதுவுமில்லை

உள்நாட்டு வியாபாரப் பொறுப்பதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், மே 20

1985 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடக்கம் இலங்கை முழுவதும் 450 கிறும் உடைய ஒரு பாணின் விலை ரூபா 3.10 சதம் ஆகும். எனவே 300 கிறும் எடையுள்ள ஒரு பாணின் விலை ரூபா 2.07 சதம் ஆகும். இந்த எடையுள்ள பாணை ரூபா 3.25 சதத்துக்கு விற்கும் பொழுது வியாபாரியும் பேக்கரி உரிமையாளரும் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். இப்படியான செயல் சமூகத்தில் தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பதில் உள்நாட்டு வியாபாரப் பொறுப்பதிகாரி திரு. நா. அருளானந்தம் இம்மாதம் 14 ஆம் திகதி 'உதயனில்' அதிகரித்த விலையில் பாண் 'என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி தொடர்பாக உதயனுக்கு அனுப்பியுள்ள விளக்க அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

''14 - 05 - 89 உதயனில் 'அதிகரித்த விலையில் பாண்' என்ற செய்தியைப் பார்க்க முடிந்தது. இதில் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களமும் இந்த விடயத்தில் பாராமுகமாக இருப்பதாகக் குறை கூறப்பட்டுள்ளது.

இந்தக் கூற்றை தற்போதைய நிலையில் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று என்றே நான் கருதுகிறேன்.

ஏனெனில் சிவில் நிர்வாகத் தடைகள் காரணமாக எம்மால் சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியாத நிலை இருக்கிறது.

பாணைப் போன்றுகோதுமை மாவிற்கும் இப்போது தட்டுப்பாடு இல்லாதபோதும் பேக்கரி உரிமையாளர்கள் பாணின் விலையைக் குறைக்க முன்வரவில்லை.

மாவின் உண்மையான கட்டுப்பாட்டு விலை ஒரு கிலோ ரூபா 7.90 சதம் ஆகும். அதே நேரத்தில் சில கூட்டுறவுச் சங்கங்கள் கூட ஒரு கிலோ மாவை ரூபா 8/-க்கு விற்கின்றன என்பதைக் கவலையுடன் தெரிவிக்க வேண்டியுள்ளது.

இன்றைய நிலைமையில் பாவனையாளர்கள் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான். எங்கு பாண் ரூபா 3.10 சதத்துக்குக் கூடுதலாக விற்கப்படுகிறதோ அங்கு மக்கள் திரண்டு அக்கடைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும் — என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச)

சட்டவிரோத இறைச்சி வியாபாரம் கட்டுப்பாடின்றி நடைபெறுகின்றது

யாழ். இறைச்சி வியாபாரிகள் சங்கம் அறிக்கை

''சட்டவிரோதமான இறைச்சி வியாபாரம் கட்டுப்பாடின்றி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவர்கள் விற்கும் இறைச்சி எந்தப் பரிசோதகரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது என்பது தெரியவில்லை!''

யாழ் மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கம் அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறுகூறப்பட்டுள்ளது.

அங்காடி வியாபாரிகள் இறைச்சியை விற்று வருவதால் பொதுமக்களுக்கு ஏதும் விபரீதமான நோய் ஏற்படுமாயின் அனுமதி பெற்றுள்ள இறைச்சிக்கடை உரிமையாளர்களும் பாதிக்கப்படவேண்டி நேரிடுமோ என அஞ்சுகிறார்கள்.

சட்டத்தையும், மக்கள் சுகவாழ்வையும் விரும்பாத சட்டவிரோதமான இறைச்சி வியாபாரத்தில் ஈடுபடும் அங்காடி வியாபாரிகளைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி சங்கம் தமக்கு முன்னர் அறிவித்தல் தந்த அனைவரையும் கேட்டுக் கொள்கின்றது என அறிக்கை கூறுகின்றது. (க- 51)

முதலாம் வருட நினைவஞ்சலி

திருமதி

அல்பிறட் கத்தரின்

தோற்றம்: 11- 04 - 1929

மறைவு: 20- 05- 1988

எங்கள் இல்லத்தின் திருவிளக்காய் ஒளி வீசி
எங்கள் நல்வாழ்வுக்கு வழி வகுத்து
எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு
இமைப் பொழுதில் எம்மை விட்டு இறைவனடி
சென்றுவிட்ட
எங்கள் மாசற்ற மணி விளக்கே!
ஓயாது உன் நினைவு உறங்காது எம் விழிகள்
ஆறாது எம் கவலை அயராது நினைக்கின்றோம்.
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

கணவர், மக்கள், மருமக்கள்
சகோதரர்கள், பேரப்பிள்ளை, உறவினர்கள்.

புங்குடுதீவு,
10ஆம் வட்டாரம்.

[10948]

ஓராண்டு நினைவஞ்சலி

பொ. சிவஞானசுந்தரம்
(ரமேஸ் மாஸ்டர்)

தாயகத்தில்: 25-8-1961

தியாகத்தில்: 20-5-1988

மனம் மறவா மாஸ்டரே!
மண் காக்கும் பணியில் - தமிழ் மண்ணுக்கு உடல் ஈந்தவனே! உன் அழிப்பு மனித வாழ்வின் முடிவல்ல.
வரலாறு உன்னைத் தோற்கவில்லை.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

பொலிகண்டி.

(601)

தமிழ் மண் மீட்கும் இலட்சிய வேட்கையுடன்
புயலாகி நின்று தன் உடல், பொருள், ஆவி
அனைத்தையும் விடுதலை வேள்வியில்
ஆகுதியான தலைவன் ராதா (க. ஹரிச்சந்திரா) வின்

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

க. ஹரிச்சந்திரா (ராதா)

அன்னையின் மடியில்: 22-12-1956

ஈழத் தாயின் மடியில்: 20-05 1987

எம்மை விட்டு நீ போய் ஆண்டு இரண்டாகியும்,
தமிழ் இதயங்கள் எங்கும் நீ வாழ்வாய் — ராதா;
தம்மையே மண்ணுக்கு ஈந்தவர் புகழ்
தரணியில் என்றும் மறையுமோ? — தினம்
உன்னையே பின் தொடர்ந்தாயிரம் — பேர்கள்
உயிரைத் தியாகம் செய்தனர்.
உன் மரணம் இன்னும் இதயத்துள் ஏற்படுத்துவது —
சோகத்தின் ராகத்தைத் தான்.

தந்தை, சகோதரன்,
சகோதரிகள், உறவினர்,
நண்பர்கள்.

உடையார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[636]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளர் (பகுதி நேரம்) தேவை

உடற்கூறும் தொழிலியலும்
(ANATOMY & PHYSIOLOGY)
இதற்கான விண்ணப்பம் பதிவு பெற்ற தாதிய உத்தியோகஸ்தர் (R. N. O) களிடம் இருந்து கோரப்படுகின்றன.

அதிபர்,
சாயி மெடிக்கல் அக்கடமி,
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்நகர்.

(614)

அறிவித்தல்

நூலகவியற் கருத்தரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள பொதுசன நூலகங்களில் கடமையாற்றும் நூலகர்களின் தொழிற்றுறை அறிவை மேம்படுத்தும் வகையிலான நூலகவியற் கருத்தரங்குடன் கூடிய செய்முறைப் பயிற்சியினை ஜூலை மாத நடுப்பகுதியில் நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் தீர்மானித்துள்ளது. இக் கருத்தரங்கில் கலந்துகொள்ள விருப்பமுடைய பொதுசன நூலகர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு அதற்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இதற்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 75 சத முத்திரை ஒட்டப்பட்டதும், 9'' × 3'' அளவுடையதும், சுயமுகவரி எழுதப்பட்டதுமான சடித உறையை மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;-

உதவி நூலகர்,
பருவ இதழ்ப் பகுதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

நூலகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C/2500)

வருமானம் குறைந்த மகளிருக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்

"யுனிசெவ்" ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 20

யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் வருமானம் குறைந்த பெண்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த 'யுனிசெப்' அமைப்பு முன் வந்துள்ளது.

யாழ் மாநகரசபை எல்லைக்குள் — குறிப்பாகப் பின்தங்கிய வட்டாரங்களில் பெரும்பான்மையான குடும்பங்கள் கஷ்டநிலையில் வாழ்கின்றன என்பதை நேரில் விஜயம் செய்தபோது மதிப்பீடு செய்த 'யுனிசெப்' குழுவினர் அவர்களில் பெண்கள் பணத்தைச் சம்பாதிக்கத் தக்க சிறுதொழில்களை ஆரம்பிக்க உதவவிருக்கிறது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த கிராமமட்டத்தில் சிறு குழுக்களாக மாதர்களை ஒன்றிணைத்து அமைப்பு ஒன்றை உருவாக்கும்படி கேட்டுள்ளது.

அவ்வமைப்பு மூலமாக சுய தொழில் ஆரம்பிக்க நிதி உதவ 'யுனிசெப் முன் வந்துள்ளது. (ஓ-3)

திருவிழா

மன்னார், மே 20

நறுவிலிக்குளம் மாதிரிக் கிராமத்தில் அன்னை வேளாங்கண்ணியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது.

வங்காலைப் பங்குத் தந்தை அருட்திரு. பி. அருளானந்தன் உயிலங்குளம் பங்குத் தந்தை அருட்திரு ஏ. ஸ்ரனி ஆகியோர் பூசையை நடத்தினர். அன்னையின் திருவுருவச் சுற்றுப் பிரகாரமும் இடம் பெற்றது.

அன்று மாலை ஆலயத்தின் விழாவைச் சிறப்பிக்க விளையாட்டுப் போட்டி நடைபெற்றது

விளையாட்டுப் போட்டி நறுவிலிக்குளம் பாடசாலை ஆசிரியர்களின் ஆதரவுடன் நடைபெற்றது (ச)

சிவனுனையே நினைத்தேன்! பவவினைகள் தொலைத்தேன்!!

ராகம்:- தேஷ் தாளம்:- ஆதி

பல்லவி

பவவினையை அறுக்கும் பாலாவி தனிலாடிச்
சிவனுனையே நினைத்தேன் பவவினைகள் தொலைத்தேன்!
— (பவ......)

அனுபல்லவி

வினைதரும் துயரினில் புழுவெனவே துடித்தேன்!
வினையினைத் துடைத்திடும் வழியின்றியே தவித்தேன்!!
— (பவ......)

சரணம்

நூல்களுடன் கோள்கள் மயக்கின்றியே படித்தேன்!
தானத்துடன் தவங்கள் தவறின்றியே முடித்தேன்!!
யாகங்கள் தியாகங்கள் குறைவின்றியே முடித்தேன்!
யாவினிலும் வினைகள் வளர்ந்திடவே துடித்தேன்!!
— (பவ......)

— முருகு

(இன்று 20. 05. 89 திருக்கேதீச்சரம் தீர்த்தத் திருவிழா)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்தியக்கிளை ஒன்று சமீபத்தில் மட்டக்களப்பில் திறந்துவைக்கப்பட்டது. இக்கிளைத்திறப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இங்கிலாந்து சசெக்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி டி. ஆர். எம் வோல்ட்டன் உரையாற்றுவதைப் படத்தில் காண்க.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் திரு. கே. டி. அருட்பிரகாசம் உட்பட பிரமுகர்கள் பலரும் படத்தில் காணப்படுகின்றனர். ((இ-14)

பட்டதாரிகள் நியமனம்

மட்டக்களப்பு, மே 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம் மாதம் முதல் 76 பேர் புதிய பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களில் உள்வாரிப் பட்டதாரிகள் 43 பேரும் வெளிவாரிப் பட்டதாரிகள்33பேரும் அடங்குவர்-

இவர்களுக்கு மாவட்ட ரீதியாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது,

பிரயாண ஒழுங்குகள்

✯ சவூதி அரேபியா

ட்றைவேர்ஸ்	650 S.R.
கிளீனேர்ஸ்	400 S.R. (அல்ராஜ்-கோழி பாம்)
காப்பென்ரேர்ஸ்	650 S.R.
மேசன்ஸ்	700 S.R.
எலக்ரிசன்ஸ்	800 S.R.
வெல்டேர்ஸ்	700 S R.
டீசல் மெக்கானிக்	700 S.R.

✯ குவைத்

கிளீனேர்ஸ் (எயர் போட்)	40 K.D.
ட்றைவேர்ஸ்	45 K.D.
காப்பென்ரேர்ஸ்	45 K.D.
மேசன்ஸ்	45 K.D.

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

தொடர்பு:-
நியூயோர்க் ரவல்ஸ்
K. K. S. வீதி, மல்லாகம்.
[610]

A/L 90

சனி
ஞாயிறு } 11.00
Chemistry
Mr. மகாதேவா
● 'ஒட்சியேற்றலும் தாழ்த்தலும்'

அடுத்து
● 'அசேதன இரசாயனம்' (Inorganic)

ஆரம்பம்:
20-05-1989
[சி 2586]

ஆசிரியர்கள் நேரத்துக்கு பாடசாலைக்கு வரவேண்டும்

கல்வி அதிகாரி வலியுறுத்து

பாடசாலைகள் நேரத்திற்குத் தொடங்க வேண்டும். ஆசிரியர்கள் குறித்த நேரத்துக்கு முன்பாக வரவேண்டும். இதில் அதிபர்கள் முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

அண்மையில் நடைபெற்ற வட்டுக் கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பின் அதிபர்களின் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட ஆங்கிலக்கல்வி அதிகாரி திரு. தியாகராசா மேற்கண்டவாறு கூறினர்.

கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ் கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

திரு. தியாகராசா மேலும் பேசுகையில், ''ஆங்கிலக்கல்வி இன்றைய நிலையில் பல்கலைக் கழகக் கல்விக்கு இன்றியமையாதது. இனிமேல் தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் சித்தியடைய வேண்டிய நிலை ஏற்படவுள்ளது'' என்று கூறினர். (க)

பொறியியல்பயில தெரிவான மாணவனுக்கு ரூ. 5000 நன்கொடை

வட்டக்கச்சி, மே 20

கிளிநொச்சி கனகபுரம் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் ஆரம்பம் முதல் கல்வி கற்று பல்கலைக்கழகத்தில் பொறியியல் பயிலத் தெரிவு செய்யப்பட்ட கு. இந்திரகுமார் என்ற மாணவனுக்கு ஊக்குவிப்புப் பணமாக ரூபா 5000 வழங்கப்பட்டது.

இது தொடர்பான விழாவுக்கு கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமைவகித்து சங்கத்தின் சார்பால் பணத்தை அன்பளிப்புச் செய்தார்.

மேலும் விழாவில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. கே. சோமசுந்தரம் கலந்து கொண்டார்.

இவ்வைபவத்தில் கிராம சேவையாளரும் கலந்து கொண்டார்.

அத்துடன் கனகபுரத்தில் வாழும் ஐந்து விதவைப்பெண்களுக்கு 400 ரூபா வீதம் சங்கத்தினுல் வழங்கப்பட்டது. (இ-163)

சங்காபிஷேகம்

நுவரெலியா, மே 20

இம்முறை வைகாசி விசாகத்திருநாளாகிய [20-05-89] இன்று தலாவாக்கொல்லை ஸ்ரீ கதிரேசப் பெருமானுக்கு ஆயிரத்தெட்டு [1008] சங்காபிஷேகம் நடைபெற உள்ளது.

பூசை, அபிஷேக ஏற்பாடுகளை கோவிலின் பிரதம குரு சிவ ஸ்ரீ சு. முத்துச்சாமி ஐயரும், கணேஷ சர்மாவும் கவனித்து வருகின்றனர்கள். [க-58]

அத்து மீறிய குடியேற்றம்

முல்லைத்தீவு மே 20

செல்வபுரம் சுகாதார நிலையத்துக்கு அருகாமையில் உள்ள முடிக்குரியகாணிகளைத் துப்புரவு செய்து பலர் அதில் அத்துமீறிக் குடியேறி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-92)

கோமாரி தடுப்பூசி

முல்லைத்தீவு, மே 20

முல்லைத் திவு - புதுக் குடியிருப்புஉதவி அரசாங்கஅதிபர்களின் பிரிவில்''கோமாரி'' நோய்க்கான தடுப்பு ஊசி மருந்து துரித வேகத்தில் முல்லைத்திவு மிருகவைத்தியரால் ஏற்றப்பட்டு வருகின்றது.

தடுப்பூசியை ஏற்றத் தவறியவர்கள் இம்மாதம் 31 ஆம் [illegible] கொள்ளும்படி மிருகவைத்தியர் [illegible]. [இ-92]

சென்றிகள்

வடமராட்சி, மே 20

சிலமாதங்களாக வல்லை வெளியில் தேடுவாரற்ற நிலையில் இருந்த சென்றிகள் புதுப்பிக்கப்படுகின்றன.

புதிய சென்றிகளும் அமைக்கப்படுகின்றன. (ஓ-160)

ஈரானின் நடவடிக்கை

ஈரான் தனது தூதரை நெதர்லாந்தில் இருந்து திருப்பி அழைத்துக் கொண்டது.

சல்மன் ருஷ்டி எழுதிய 'சாத்தானின் கவிதைகள்' நூலுக்கு தடை விதிக்க நெதர்லாந்து அரசு மறுத்து விட்டது.

அதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாகவே ஈரான் இந்த நடவடிக்கையை எடுத்தது. (எ)

பிறந்த நாள் வாழ்த்து

He lives in loving hearts of all
Who serves the truth serene in soul
- Divine Thirukkural

திரு. ஏ. என். யோகநாதன்

தெய்வீகத் திருக்குறள் மன்றம், வை. எம். டி. ஏ. வாசக மன்றங்களின் நிறுவனரும் - தலைவருமாகிய திரு. ஏ. என். யோகநாதனின் (62) பிறந்தநாளில் அவருக்கு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். அவர் தொடர்ந்து நற்பணிகள் செய்ய ஆண்டவன் அருள்பாலிப்பாராக!

திருக்குறள் விசுவாசிகளும் நண்பர்களும்.
[10974]

GENERAL MANAGER

A vacancy exists for the above post in a leading, long established firm in Jaffna. The applicant should have at least 5 years experience in a senior management position preferably with a private sector organisation and aged not more than 40 years with professional or academic qualification. A very attractive salary will be offered to the right candidate.

Please forward your resume within 10 days to;
523,
C/o, UTHAYAN.

(C/2600)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in Basic Language

ஆரம்பம்: 22 - 05 - 1989 (திங்கள், புதன், வெள்ளி)
சேரும்போது செலுத்தவேண்டியது ரூபா 500/-

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்யவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 21 - 05 - 1989

UNIKCO COMPUTER CENTRE
No. 5, Power House Road,
2nd Lane, Jaffna.
(Near Sub - Post Office)
(சி/2599)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான

அறிவித்தல்

திருமுறை மாநாடு

(22-05-89) திங்கட்கிழமை காலை ஆரம்பமாகும் மேற்படி விழாவிற்கும் அதனையொட்டி நடைபெறும் திருமுறைச் சுவடிகள் ஊர்வலத்திலும் பங்குகொள்வதற்காக யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் அனைவரையும் சைவ ஆசார கோலத்துடன் அன்று காலை 7 மணிக்கு கல்லூரியில் தவறாது சமுகம் அளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

அதிபர்
யாழ். இந்துக் கல்லூரி.
(C/2493)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதவித் தாதியர் பயிற்சிநெறி
(Diploma in Nurses - Aide)

மேற்படி வகுப்புக்கள் 10—6—89இல் ஆரம்பமாக உள்ளன. தங்கள் பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

விபரங்களுக்கு:

அதிபர்

சாயி மெடிக்கல் அக்கடமி

இல:-10, பருத்தித்துறைவீதி - யாழ்நகர்.

(613)

31ஆம் நாள் நினைவு அஞ்சலி

இராசையா ஜெகசீலகிருஷ்ணன்

[இன்பம்]

அம்மாவின் மடியில்: 21-07-68 — இறைவன் அடியில்: 20 04-89

ஐயா தமிழ் மண்ணின் இன்பம் காக்க உன் இன்பத்தை மறந்து வாழ்ந்தாயே அதற்குத் தானு உனக்கு இன்பம் என்று பட்டம் சூட்டினுர்கள்? உன் உயிர் பிரிந்த அன்றே எங்கள் இன்பமும் பிரிந்துவிட்டதையா!

உன் ஆத்மாவிலாவது நீ இன்பம் பெற நெஞ்சுருகி பிரார்த்திக்கும் அம்மா, பெரியம்மா, சகோதரர்கள், அத்தான், சின்னண்ணி, சித்தப்பாமார், சித்திமார், அன்ரி, அக்கம்மா, மாமாமார், மாமிமார்.

இல. 10, லோட்டஸ்வீதி
வண்ணுர் பண்ணை,
யாழ்ப்பாணம். (10993)

தகவல்;
குடும்பத்தினர்.

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. வல்லிபுரம் ஜெகதீசன்

(முன்னுள் பொறியியலாளர் உர ஆக்கக் கூட்டுத்தாபனம், லங்கா சீமெந்து லிமிட்டெட்)

ஆண்டவன் படைப்பு: 17- 10- 946 — அழிப்பு: 20- 05- 1987

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறவிடமாய், பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து, எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் எம்மை வழிநடத்தி மீளாத் துயரில் ஆழ்த்திய அன்புக் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ரேம்.

அன்பு மனைவி
தாய், தந்தை,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னுகம். (சி/2651)

6 ஆவது ஆண்டு நினைவுகள

மலர்வு: 07- 06- 1963

உதிர்வு: 26- 05- 1983

செல்வி

பாலசுப்பிரமணியம் சந்திரேஸ்வரி

(மருதனுமடம் இராமநாதன் கல்லூரி உயர்வகுப்பு மாணவி)

அரும்பாகி மொட்டவிழ்ந்து மலராகி முகிழ்வாயென
பெரும்பாடுபட்டு இசையூட்டி வளர்த்தாரை
இரும்பாக்கி இருத்தி வியனுலகம் செல்வதற்கு
துரும்பாகக் கொண்டது ஒரு கொடிய நோய்தாஞே?

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

அன்பு ஐயா, அம்மா,
சகோதர, சகோதரிகள்.

1/B, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். [10983]

6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

செல்வன் கனகசபாபதி குகநேசன் (பாபு)

தோற்றம்: 29-12-1959 — மறைவு: 26-05-1983

அன்புத் தெய்வமே! உங்கள் பூதவுடல் அழிந்தாலும் வஞ்சமில்லாபூமுகமும் சள்ளமில்லா வெள்ளை உள்ளமும் என்றென்றும் எம் இதயத்தைவிட்டகலா. உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்

உமது பிரிவால் துயருறும்:
உன் அன்பு அப்பா, அம்மா,
அத்தான், அக்கா, தம்பி, தங்கை,
மருமக்கள், உற்ருர், உறவினர், நண்பர்கள்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (458)

ஆத்ம சாந்திப் பூசை



அமரர் திரு. கா. இராமநாதர்

[மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்]

தோற்றம்: 06-07-1932 — மறைவு: 07-04-1989

சென்ற 07-04-1989 இல் சிவபதமடைந்த எமது அன்புக்குரியவரின் ஆத்மசாந்திப் பூசை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 21-05-1989 காலை 10 மணிக்கு தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் அமரர் அவர்களின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்தித்து, மகேசுவர பூசையிலும் பங்குபற்றுமாறு உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

திருமதி மலைமகள் இராமநாதர்.

தெல்லிப்பளை. (10986)

கண்டெடுத்த பிள்ளையார் சிலை

சாவகச்சேரி, மே 20

நுணுவில் விளைவேலி மருதடிப்பிள்ளையார்கோயில் கிணற்றை இறைத்தபொழுது பிள்ளையார் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

கருங்கல்லில் செய்யப்பட்ட ஒன்றரை அடி உயரம்கொண்ட இச்சிலை கோயில் கொடிஸ்தம்பத்தின் முன்பாகப் பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ளது. [ச.31]

கன்னியர் மடம் பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம் மே 20

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் (ஆங்கில பாடசாலை) பழைய மாணவியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று சனிக்கிழமைபிற்பகல்3.30 மணிக்கு நடைபெறும். (ச)

6 இளைஞர்கள் கொலை

கொழும்பு மே 20

பொலன்னறுவையில் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆறு இளைஞர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டும் வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்டனர்.

பெதிவெவ மகாவித்தியாலய ஆசிரியரான பி. எம். உபுல பண்டார (வயது 28) அவரது சகோதரரான டி.எம் அபேக்கூன் பண்டா, பிரேமரத்தின சுமணசேன, ஆகியோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

இக் கொலைகளைக் கண்டித்து பொலன்னறுவ பிரசைகள் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டது. பொலன்னறுவ பெதிவெவ மகாவித்தியாலய மாணவர் வகுப்புக்களைப்பகிஷ்கரித்தனர். (இ-எ)

இணைப் பேராசிரியராக வி. சிவசாமி

யாழ்ப்பாணம், மே 20

யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறையின் தலைவராக கடமையாற்றி வரும் திரு. வி. சிவசாமி ஆராய்ச்சித் துறையில் பெற்ற விசேட புலமையால் இணைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சமஸ்கிருதத் துறையில் இப்பதவியைப் பெறும் முதலாவது இலங்கை தமிழர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் கலைகள் வரலாறு, பண்பாடு, சமயம், தொடர்பாக பல்வேறு நூல்களை வெளியிட்டும், ஆய்வுகள் செய்தும் வந்துள்ளார்.

சமீபத்தில் ''பரதக்கலை'' என்னும் நூலை அவர் வெளியிட்டுள்ளார். ''சமஸ்கிருத இலக்கிய சிந்தனைகள்'' என்னும் இவர் நூல் விரைவில் வெளிவர இருக்கிறது.

சிரமதானம்

முல்லைத்தீவு, மே 20

முல்லைத்தீவு செல்வபுரம் சர்வோதய சிரமதானச் சங்கத்தினர் பொதுமக்களின் நலன் கருதிச் சிரமதானத்தின் மூலம் கிணறு ஒன்றை வெட்டிக் கட்டி முடித்துள்ளனர். (இ - 92)

இன்று ஆரம்பம்
NEW SCIENCE ACADEMY
B. M. C. முன்பாக
JAFFNA

90 A/L
(Weekend Classes)
PHYSICS
HEAT
By
Mr. மணியம் B.Sc (Hons)

ஆரம்பம்:
20-05-1989
Sat. 7.30 a.m.
Sat., Sun. 7.30 a.m.
(சி/2608)

10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பொன்னையா மயில்வாகனம்

அன்னை மடியில்: 23-06-1917 — இறைவன் அடியில்: 20-05-1979

திதி: 29-05-1989

ஆருத்துயரில் எமை ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் பிரிந்து ஆண்டு பத்து சென்ற போதும் அகலவில்லை ஐயா உம் நினைவு. ஆண்டுகள் பத்தென்ன ஆயிரம்சென்ருலும் எம் நெஞ்சங்களில் நீர் வாழ்ந்து கொண்டே இருப்பீர்!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'பழமுதிர்ச் சோலை'
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். [10977]

அமரத்துவ அஞ்சலி

சிங்க நடையும்... சிங்காரத் தென்றல் நடையும்...!
பொங்கு கடல் நடையும்...!புரட்சித் தமிழ் நடையும்...!
தன்புது நடையில் வெற்றி கொண்ட பூமான்.



அமரர்
உயர்திரு.

விஸ்வலிங்கம் நவரெத்தினசிங்கம்

என்னும்
கொழும்பு பாலத்துறையின் பிரபல வர்த்தகர் (நவம்)
அவர்கள்

தோற்றம்: 17- 07- 1948 — மறைவு: 20- 04- 1989

இதயத்தின் துயரங்களை எழுதிவைக்க ஏடில்லை-உன்னை
இழந்த துயர் தாழவில்லை எங்கள் நவமே! நவமே!
உதயத்தின் நிலவாக வந்தவனே! உலகுக்கெல்லாம்
உயர்ந்த தொண்டு எதுவென்று காட்டி நின்ருய்!
நிலவுக்கு ஒளிகொடுக்கச் சென்றுவிட்டாயோ? நின்
நினைவலையில் நின்றுருகும் எங்களையெல்லாம்
நினைந்தொருகால் பாராயோ? பாராயையா— நீ
நடந்து வந்த பாதையெல்லாம் நாம்புரண்டு அழுது
நாவசைய நாடசையும் உந்தன் புகழை
நினைந்து நினைந்து உருகுதே எம் நெஞ்சமெல்லாம்
நின்னையல்லால் யாரையிங்கு நினைந்து வாழ்ந்தோம்
நீ என்றும் வளர் நிலவாய் வான் நிலத்தில் வா!

என்றும் உன்னை நினைந்துருகும்:
V. M தருமன்,
V. M. குலேந்திரன்.

புங்குடுதீவு- 2.

(10985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jaffna English Academy

(A LUX IN TENEBRIS)

The Secret of our Success is our Strength, because it mixes our quality and our experience of 2½ decades.

● ESOL (English for Speakers of Other Languages)

London Examinations held at JAFFNA ENGLISH ACADEMY
The Local Examination Centre for Pitmans - London Assessment of Answerscripts and award of Certificates from Pitmans - London.

★ Reading - Writing - Listening - Grammar etc.
★ Graded Objectives to proficiency
★ Worldwide recognition.
★ The content has been carefully chosen not to penalise Candidates who have never visited the U. K.

WEEK - END BATCH — 11.30 a.m to 1.00 p m
COMMENCEMENT — 21 - 05 - 89
WEEK - DAY BATCH — Mondays & Wednesdays 8.30 to 10.30 a.m
COMMENCEMENT — 23 - 05 - 89
DURATION: 3 Months — COURSE FEE: Rs. 350/- only

● TOEFL
(Teaching Of English As A Foreign Language)

Toefl is an entry requirement for most foreign Universities/Colleges. Equip yourself with a good score. Unlimited hours of listening provided. Over 50 listening Comprehension exercises provided. Many past papers will be meticulously done.

WEEK - END BATCH — 8.00 to 10.00 a.m
COMMENCEMENT — 21 - 05 - 89
WEEK - DAY BATCH — Tuesdays & Fridays 2.00 to 4.00 p.m
COMMENCEMENT — 23 - 05 - 89
DURATION: 3 Months — COURSE FEE: Rs. 350/- only

● SPOKEN ENGLISH (for Adults)

Ideal for those who wish to acquire greater proficiency in English as a necessary everyday Language.

WEEK - END BATCH — 10.00 to 11.30 a m
COMMENCEMENT — 21 - 05 - 89
WEEK - DAY BATCH — Tuesdays & Thursdays 8 30 to 10.00 a.m
COMMENCEMENT — 23 - 05 - 89
DURATION: 3 Months — COURSE FEE: Rs. 150/- only

● G. C. E. (Advanced Level) ENGLISH 1990 AUGUST EXAMINATION

Week - end Classes: 3.00 to 5.00 p.m.
Fees: Rs 50/- per month.

Lectures: Kandiah Navarendran

● SPOKEN ENGLISH (Higher-above 14 years)

Tuesdays & Fridays 4.00 to 5.00 p.m.
DURATION: 3 Months COURSE FEE: Rs. 125/- Only.

● SPOKEN ENGLISH (Middle-between 9 and 14 years)

Mondays & Wednesdays 4.00 to 5.00 p.m.
DURATION: 3 Months COURSE FEE: Rs. 125/- Only

● ELOCUTION (Stages 1 & 2)

Thursdays 3.30 to 4 30 p.m. } DURATION: 3 Months
Sundays 10.30 to 11.30 a.m. } COURSE FEE: Rs 125/- Only

● ELOCUTION (Stages 3 & 4)

Thursdays 4.30 to 5.30 p.m. } DURATION: 3 Months
Saturdays 10.30 to 11 30 a.m. } COURSE FEE: Rs. 125/- Only

● G. C. E. (O/L) ENGLISH LANGUAGE - 1989

Mondays & Wednesday 5.00 to 6.30 p.m.
FEES: Rs 35/- Per month

● CLASS WORK

Years 8 & 9 — Saturdays & Sundays 9.00 to 10.00 a.m FEES: Rs. 30/- per month
Years 6 & 7 — Saturdays & Sundays 8.00 to 9.00 a.m. FEES: Rs.25/- per month.

Lectures: Mrs E. R. Mather

9, RAKKA LANE, CHUNDIKULI, JAFFNA.

[C-2601]

திருமுறை மன்றத்தினர் முற்றோதல்

யாழ்ப்பாணம், மே 20

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருஞான சம்பந்தரின் திருப்பதிக முற்றோதல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

நல்லூர் ஸ்ரீசட்டநாத சுவாமி ஆலயத்தில் காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ள இந்த தேவாரப் பதிக முற்றோதல் நாட்டுமக்கள் அமைதி பெறவேண்டி- ஞான சம்பந்தப் பெருமானின் குரு பூசையை முன்னிட்டு- நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இன்று திருக்கேதீச்சர தீர்த்தத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 20

திருக்கேதீச்சரப் பதியில் இன்று 20 ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறும்.

இன்றிரவு கொடியிறக்கமும் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு மௌன உற்சவமும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ச)

வழிபடும் அடியார் கூட்டம் பெருகுவதே உண்மைப் பெருமை

கோவில் கும்பாபிஷேகத்தில் உரை

யாழ்ப்பாணம், மே 20

'தேவஸ்தானங்கள் உயர்ந்து பொலிவுற்று சம்பிரமாக இருப்பதில் பெருமையொன்றுமில்லை, பூசைகள், விழாக்கள் ஒழுங்காக நடைபெறுவதும் பெருமையல்ல; வழிபடும் அடியவர்கள் கூட்டம் பெருகி இருப்பதே உண்மைப் பெருமையாகும்.'

சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் கோவிலில் 10 ஆம் திகதி நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் ஆசியுரை வழங்கிய துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், பரிபாலன சபைத் தலைவர் திரு. க. அருணாசலம் மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

கும்பாபிஷேக விழா 10 ஆம் திகதி முதல் 45 நாட்கள் தொடர்ந்து நடைபெறும்'

கோமாரி நோய்

பச்சிலைப்பள்ளி, மே 20

பளைப் பகுதியில் கால் நடைகளின் கோமாரி நோய் வேகமாகப் பரவி வருகிறது.

இதனால் பல கால் நடைகள் இறந்துள்ளன. நோய் வந்த கால்நடைகளை மற்றவற்றிலிருந்து பிரித்துவைக்குமாறு கால் நடைச் சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (க - 117)

மதகுகள்

கோப்பாய், மே. 20

கோப்பாய் வடக்குப் பகுதியில் சேதம் அடைந்துள்ள இருமதகுகளும் இதுவரை திருத்த வேலை எதுவுமின்றி இருப்பதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-72)

வைகாசி விசாக உற்சவம்

வண்- கிழக்கு வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் வைகாசி விசாக உற்சவத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு தீக்குளிப்பு வைபவம் இடம்பெறும் [க]

வெள்ளிவிழாவும் மணி விழாவும்

மட்டுவில் வடக்கு ஆரோக்கிய வாசக வைத்தியசாலையின் வெள்ளி விழாவும் டாக்டர் பே. பிலிப்ஸின் மணி விழாவும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

அன்று காலை 9.30 மணிக்கு வைத்தியசாலை அரங்கில் யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத் தலைவர் டாக்டர் எஸ். பவானி "எமது மூலவளத்தையும் மூளைவளத்தையும் பாவித்து வைத்தியத் துறையில் தன்னிறைவு காண முடியுமா?" என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

பிற்பகல் 2.30 மணிக்கு வைத்திய கலாநிதி ஏ. வி. இராசரத்தினம் (அதிபர் ஸ்ரீ லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரி) தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும்

உபகரணங்கள் விற்பனை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களில் இறக்குமதி செய்யப்பட்ட மண்வெட்டிகளும் உப-உணவுப்பயிர் செய்கைக்கான உபகரணங்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

சிங்கப்பூரில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் விழா

யாழ்ப்பாணம், மே 20

சுவாமி விவேகானந்தரின் 125ஆவது பிறந்தநாள் விழா சிங்கப்பூர் இராமகிருஷ்ண மிஷனினால் ஏப்ரல் 29ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 2ஆம் திகதிவரை கொண்டாடப்பட்டது.

சிங்கப்பூர் சமயப் பேரவை வர்த்தகத் தொழில் அமைச்சரும் இரண்டாவது தற்காப்பு (சேவைகள்) அமைச்சருமான பிரிகேடியர் ஜெனரல் லீசியன் லூங்குத் மங்கல விளக்கேற்றி சமயப் பேரவையைத் தொடக்கி வைத்தார்.

உலக வர்த்தக மைய அரங்கில் நடைபெற்ற இச் சமயப் பேரவையில் பல சமயங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமானோர் கூடி இருந்தனர்.

ஜெனரல் லீ. பேரவையைத் தொடக்கி வைத்தபின் சுவாமி பிரபானந்தாஜி தலைமையில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சீக்கிய சமய அறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

இலங்கையில் இருந்து கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சம்பிராக்ஞானந்தாவும் ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவும் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

சிங்கப்பூரிலிருந்து சுவாமி சித்ரூபானந்தா கோலாலம்பூருக்குச் சென்று அங்கு தவத்திரு யோகசுவாமிகளின் பக்தர்களுக்கு அருளுரை வழங்கினார்.

அங்கு சுவாமி சாந்தானந்த நடத்தும் கலாசார நிலையத்துக்கும் அன்னை மங்களம் நடத்தும் சுத்த சமாஜத்துக்கும் ஸ்ரீ சத்திய சாயி மன்றத்துக்கும் விஜயம் செய்தார். (ச)

கழிக்கப்பட்ட வாகனங்கள்

வீதிப் போக்குவரத்துக்கு உதவாது என்று சழிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் வருகிற முதலாம் திகதியில் வீதியில் ஓடுவது தடை செய்யப்படும்.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் (போக்குவரத்து) திரு. ஏ. ஜே. இடமல்கொட இத்தகவலை வெளியிட்டார்.

போக்குவரத்துக்கு உதவாது என்று கழிக்கப்பட்ட வாகனங்களால் தான் விபத்துக்களில் 20சதவீதமானவை இடம்பெறுகின்றன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (இ - எ)

சுப.மாணிக்கம் மறைவுக்கு இரங்கல்

யாழ்ப்பாணம், மே 20

பேராசான் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் மறைவை ஒட்டி அவருடைய மாணவர்களில் ஒருவரான கலாநிதி வித்துவான் க.ந. வேலன் அன்னாரின் குடும்பத்துக்கு இரங்கற் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

"காந்தியத்தில் பற்றுக்கொண்ட அவர், தமிழ் நாட்டு அரசியலில் சிக்காது வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர். நீதியால் வந்த நெடுந்தரும நெறியன்றி வேறு சாதி முதலியவற்றால் வந்த சிறு நெறி அறியாதவர். வள்ளுவர் முதலிய சான்றோர் கொடிவழியில் வந்த அவரின் பேச்சும் எழுத்தும் தனித்தன்மை வாய்ந்தவை" என்று இரங்கற் செய்தி கூறுகிறது.

"அப் பேராசான் விட்டுச் சென்ற கருத்து மாணிக்கங்கள் [illegible] தாயை என்றும் அணி செய்[illegible]" [illegible] கூறப்பட்டுள்ளது. (க)

சொற்சிலம்பம் இல. 99

பரிசு பெற்றவர்கள் விபரம்:

முதலாவது பரிசு:
ஆ. மகேந்திரன்,
சிறுப்பிட்டி வடக்கு. நீர்வேலி.

இரண்டாவது பரிசு.
யோ. உஷா,
"சக்தி வாசா"
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்,

மூன்றாவது பரிசு:
செல்வி சா. நி. தர்மலிங்கம்,
71/16, சேர் பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

[சரியான விடைகள் சஞ்சிகையின் எட்டாம் பக்கத்தில்]

பிரயாணம்... பிரயாணம்,.. பிரயாணம்...

"M" THREE TRAVEL

வழங்கும்

சவூதிஅரேபியா, குவைற், மாலைதீவுப் பிரயாணம்

(1) சவூதிஅரேபியா:

(1) DRIVERS 45 வெற்றிடங்கள் 700 SR
(SEMI GOVERNMENT இல் BUS DRIVERS)
6 வருட அனுபவமுள்ள கனரக வாகன சாரதிப் பத்திரம்
(2) PLUMBERS — 5 வெற்றிடங்கள் 900 SR
(3) PAINTERS — 5 ,, 900 SR
(4) INDUSTRIAL ELECTRICIANS — 6 வெற்றிடங்கள் 900 SR
(5) AC. TECHNICIANS — 6 ,, 1000 SR
(6) WARE HOUSE CLEANERS 50 ,, 600 SR
(களஞ்சிய சுத்திகரிப்பாளர்கள்)

(2) மாலைதீவு: பெண்களுக்கு மட்டும்

(1) SUPERVISOR — 1 வெற்றிடம்
(மேற்பார்வையாளர்)
(2) NURSE — 1 ,,
(தாதி)
(3) DOCTOR — 1 ,,
(வைத்தியர்)
(4) CUTTERS — 15 ,, 85 USD
(5) HELPERS — 35 ,, 70 ,,
(6) IRONERS — 15 ,, 70 ,,
(7) TAILORS — 25 ,, 65 ,,

(3) குவைற்:

CLEANERS 2 வெற்றிடங்கள்
(சுத்திகரிப்பாளர்கள்)
(ஒரு வாரத்தினுள் பிரயாணம்)

✶ Pass port (கடவுச்சீட்டு) Bond (பொன்ட்) என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

நம்பிக்கை நாணயம்
என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

'M' THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
'இந்திரபவனம்'
சோதிவீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல. 1, 2 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2609)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' வாசிக்கும் பிள்ளைகள் மனிதராவர் '
மில்க்வைற் செய்தி இதழ்-161

25 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி
மேற்படி புதிய வெளியீடான
' மில்க்வைற் செய்தி இதழ்-161 ' ஐப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி

20 - 05 - 1989 சனிக்கிழமை

உண்டியல்

100 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளைச் சேகரித்து நேரில்
கொடுத்து அழகிய
'உண்டியல்' ஒன்றை
பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

தாவரப் பொருள்களைப் பாவிப்பது மனிதருக்கு மிகப் பாதுகாப்பானது

மருத்துவ சங்கக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், மே 20

'மருத்துவ ரீதியிலும், நாசகார உயிரணுக்களைக் கட்டுப்படுத்துவதிலும் தாவரங்களையும், தாவரப் பொருள்களையும் பயன்படுத்துவது மனிதருக்கு மிகவும் பிரயோசனமானது; பாதுகாப்பானது.'

இப்படிக் கூறுகிறார் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானத் துறைத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் நேற்று யாழ். மருத்துவ சங்கத்தின் ஏழாவது வருடாந்தக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் இக்கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமானது. கூட்டத் தொடரைப் பேராசிரியர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். இராமதாஸ் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பேராசிரியர் கணேசலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது :-

தாவரங்கள் இயற்கைப் பொருள்களின் இணைவாக அமைகின்றன. மனிதர் தாவரங்களை மருந்துப்பொருளாக, உப-உணவாக, வாசனைப் பொருட்களாக, கிருமிநாசினியாக, இரசாயனப் பொருள்களாக பயன்படுத்த முடியும்.

எமது தேசிய பொருளாதாரத் திட்டத்தில் முக்கியமானதோர் ஆராய்ச்சித் துறையாக இது அமைகின்றது.

இயற்கை வளங்களை நாம் பயன்படுத்துவதில் பல நன்மைகள் உண்டு.

உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தல், இந்த வளங்களைப் பெருக்குவதில் முதலீடு செய்தல், இந்த வளங்களை குறைந்த செலவில் உற்பத்தி செய்தல் முதலியன சில நன்மைகளாகும்.

—இவ்வாறு அவர் கூறினார்.

இன்றும், நாளையும் இக்கூட்டத்தொடர் தொடர்ந்து நடைபெறும். பலர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிப்பார்கள். [அ-3]

நெடுங்கேணிப் பகுதியில் உருக்குலைந்த 5 சடலங்கள்

வவுனியா, மே 20

கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை நெடுங்கேணியில் இடம்பெற்ற சம்பவங்கள் ஷெல்லடிகள் அசம்பாவிதங்களில் இறந்த மேலும் 5 பொதுமக்களின் சடலங்களை உருக்குலைந்த நிலையில் வியாழனன்று ஊர்வாசிகள் கண்டு எடுத்துள்ளார்கள்.

நெடுங்கேணி மகாவித்தியாலயத்தின் கட்டிடத்தினுள் கிடந்த மூவரது சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மரக்கறி வியாபாரியான ஆறுமுகம் (65), சைக்கிள் கடைக்காரரான கந்தையா (60), தனம் என்றழைக்கப்படும் நெடுங்கேணி சந்தையைச் சேர்ந்தவரான தனபாலசிங்கம் ஆகிய மூவரது சடலங்களும் மீட்டு எடுக்கப்பட்டு பாடசாலையின் முன்னுல் எரிக்கப்பட்டன.

பழைய தபாற்கந்தோருக்குச்சமீபமாகவேறு இருசடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாயினும் அவைகள்உரியமுறையில் அடையாளம் காணப்படவில்லை.

இதனிடையில் புதன்கிழமை தொடக்கம் பகல் நேர ஊரடங்கு நீக்கப்பட்டு மாலை 5-30 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணிவரையிலான இரவு நேர ஊரடங்கு அமுல்செய்யப்படுகின்றது.

எனினும் நெடுங்கேணி கடைவீதிப் பகுதியில் சுற்றுடலும் சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது. வாகனப் போக்குவரத்துகளும் நடைபெறவில்லை.

நெடுங்கேணியின் பல இடங்களிலும் துர்நாற்றம் வீசுவதாகவும் அது என்ன என்பது குறித்துஉறுதிசெய்து கொள்வதற்கு பல இடங்களில் சென்று பார்க்க முடியாத பதற்ற நிலையே நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது இப்படி இருக்க நெடுங்கேணியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அதனை அண்டியபகுதிகளான சிவாநகர், பெரிய குளம், ஒலுமடு, குளவிசுட்டான் போன்ற பகுதிகளுக்கும் சிலர் வவுனியாவுக்கும் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்துள்ளார்கள்.

இன்னும் ஒரு சிலரைக் காணவில்லை என்று உறவினர்கள் தேடிவருகின்றார்கள்.

இந்த அசம்பாவிதங்கள் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை இப்போது 9 ஆக அதிகரித்துள்ளது. எனினும் இத்தொகை இன்னும் கூடுதலாக இருக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது. (ஓ 164)

யாழ் - கொழும்பு விமானசேவை:

டிக்கெட் விநியோகத்தில் இடைத்தரகர் தொல்லை

யாழ்ப்பாணம், மே 20

யாழ் – கொழும்பு விமான சேவை பயணச் சீட்டுக்களை (டிக்கெட்) பொதுமக்களுக்கு விநியோகிப்பதில் இடைத்தரகர்கள் பணம் சம்பாதிக்க முயற்சிப்பதாக முறையீடு செய்யப்பட்டிருக்கிறது.

இடைத் தரகர்களின் தலையீட்டுக்குப் பொதுமக்கள் தொடர்ந்து இடமளிப்பார்களாயின் அதைத் தவிர்ப்பதற்காக பயணச் சீட்டுகளை விநியோகிப்பதில் பலத்த கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டியிருக்கும் என விமானப்படை அதிகாரி ஒருவர் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

இலங்கை விமானப்படையின் அனுசரணையுடன் ''ஹெலி டூர்ஸ்'' அமைப்பு தினசரி பலாலி – இரத்மலானை விமான சேவையை நடத்தி வருவது தெரிந்ததே.

இந்தப் பயணத்திற்கான கட்டணம் ரூபா ஆயிரம்.

பொதுமக்கள் தமது அடையாள அட்டைகளைக் காட்டி பலாலியில் இதற்கென அமைக்கப்பட்டிருக்கும் ஹெலி டூர்ஸின் விசேட கொட்டகையில் பயணச் சீட்டுகளைத் தினசரி காலை 7 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை பதிவு செய்து கொள்ள முடியும்.

எனினும் ஒரு சிலர் பலாலிக்குச் செலவதைத் தவிர்ப்பதற்காக இடைத் தரகர்களின் உதவியை நாடுவதாகவும் —

அவர்களின் அடையாள அட்டைகளை வாங்கிக் கொண்டு பலாலிக்குச் சென்று டிக்கெட்டுகளைப் பதிவு செய்யும் இடைத்தரகர்கள், டிக்கெட் ஒன்றுக்கு இருநூறு ரூபாவரை அறவிடுவதாகவும்–

தங்களுக்குத் தெரியவந்திருப்பதாக விமானப்படை அதிகாரி ஒருவர் சஞ்சீவிகுத் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இனிமேல் பயணிகள் தாமே நேரடியாக பலாலிக்கு வந்து டிக்கெட்டுகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படலாம் என்றும் தெரிய வருகிறது. (ஒ-உ)

ஜே. வி பி ...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பேச்சாளர், தனது பெயரை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார் —இப்படி ஏ. பி. செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்தது. (உ-எ)

ஷப்ரு கிண்ண கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 20

'ஷப்ரு' வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியின் ஆட்டங்கள் இன்று சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் நடைபெறும்.

இன்று சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக அணிக்கும் யாழ் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையேயான ஆட்டம் காலை 8.30 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8. 30 மணிக்கு யாழ். சென்றலைட்ஸ் [புளூஸ்] வி. க. அணியை எதிர்த்து யாழ். மூத்தவிநாயகர் வி. க. அணி விளையாடும். பிற்பகல் 1 மணிக்கு கிறாஸ் கொப்பர்ஸ் வி. க. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் [சொக்ஸ்] வி. க. அணி விளையாடும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணிக்கு நொர்தேண் வி. க. அணியை எதிர்த்து ஷப்ரு வி. க. அணியும் – பிற்பகல் 1.00 மணிக்கு பல்கலைக்கழக – ஜொலிஸ்ரார்ஸ் அணிகளுக்கிடையேயான போட்டியில் வெற்றியீட்டும் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் விளையாடும்.

இரண்டு அரை இறுதிப் போட்டிகளும் திங்கட்கிழமையும் இறுதிப்போட்டி 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். [இ]

மதுபான லைசென்ஸ் இனிமேல் கிடையாது

கொழும்பு, மே 20

நாட்டில் புதிதாக மதுபான நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்குவது இல்லை என்று அரசு தீர்மானித்திருக்கிறது.

உல்லாச ஹோட்டல்களுக்கு மட்டும் இதில் விதிவிலக்கு அளிக்கப்படும் என்று அமைச்சரவை நேற்று முன்தினம் தீர்மானித்தது. (உ எ)

இந்து இளைஞர் மாநாடு இன்று ஆரம்பம்

அரியாலை, மே 20

இலங்கை இந்து இளைஞர் பேரவையின், பத்தாவது ஆண்டு மாநாடும், ஐம்பவரங்கும் இன்று ஆரம்பமாகின்றன.

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் இன்று காலை 9 மணிக்கு நிகழ்ச்சிகள் தொடங்கும். பேரவையின் தலைவர் திரு. முருகப்பன் தலைமை வகிப்பார்.

இம் மாநாடு தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு நடைபெற உள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகளை திரு. ம சிவராசா, திரு. க. சனகராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். ஆத்மஜோதி நா. முத்தையா சிறப்புரை நிகழ்த்துவார்.

பேராசிரியர் க. பரமேஸ்வரன், சைவப் பெரியார் க. சி. குலரத்தினம் ஆகியோரும் உரை நிகழ்த்துவார்கள். (அ-13)

நெடுங்கேணி...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவதானித்துள்ளார்கள்.

இனிமேலும் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெருமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் நெடுங்கேணிச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கும் உடைகள், நிவாரண உணவுப் பொருள்களை வவுனியாவில் இருந்து கொண்டு செல்வதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் அங்கு நிலவும் பதற்ற நிலை காரணமாக இந்த முயற்சி வியாழனன்று உடனடியாகக் கைகூடவில்லை. [ஓ-164]

வடக்கிற்கு...

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

தாகவும் சொல்லப்பட்டது.

உரிய விலாசத்தாரருக்குக் கிடைக்காத காசோலைகள் குறித்து வெளிநாடுகளில் இருந்து அவற்றை அனுப்பியவர்கள் தாம் அனுப்பிய காசோலைகளுக்குரிய வங்கிகளுக்குச் சென்று முறையீடு செய்கின்றனர்.

அங்கு கையாடப்பட்டு மாற்றப்பட்ட மேற்படி காசோலைகளை சம்பந்தப்பட்ட வங்கிகள் எடுத்துக்காட்டுகின்றனவாம்.

இவ்வாறு மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படும் வெளிநாட்டுக் காசோலைகளின் 'போட்டோ ஸ்ராட்' பிரதிகள் யாழ். தபால் அலுவலகத்தில் குவிந்து கிடக்கின்றன. இவை சம்பந்தப்பட்ட முறையீட்டுக்காரர்களால் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டவையாகும்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள், இங்குள்ள ஒருவரின் வங்கிக் கணக்கிற்கு பணத்தை அனுப்பினுல் இத்தகைய மோசடிகளைத் தவிர்க்க முடியும் என்று உள்ளூர் தபாற் பகுதி அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். [அ-10]

மருதடி விநாயகர் உற்சவம்

காரைநகர், மே 20

காரைநகர் மருதடி விநாயகர் ஆலயத்தின் கொடியேற்ற உற்சவம் இன்று நடைபெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை தேர் திருவிழாவும் வெள்ளிக்கிழமை தீர்த் தோற்சவமும் நடைபெறும். [அ-13]

புனரமைப்புக்குப் பாரிய திட்டம்

கொழும்பு, மே 20

இடம்பெயர்ந்தவர்களுக்கு இவ் வருட இறுதிக்குள் புனர்வாழ்வளிக்கவும், அவர்களின் சேதம் அடைந்த சொத்துக்களை புனரமைத்துக் கொடுக்கவும் வழி செய்யும் பாரிய திட்டம் ஒன்றை (Master Plan) புனர் வாழ்வு, புனரமைப்புத் துணை அமைச்சு தயாரித்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

துணை அமைச்சர் கே. வின்சன்ட் பெரேரா இத் தகவலை வெளியிட்டார்.

இடம்பெயர்ந்த சகலரையும் இந்த ஆண்டு இறுதிக்குள் மீளக் குடியமர்த்த அரசு திடசங்கற்பம் பூண்டிருப்பதாகவும் துணை அமைச்சர் சொன்னார். (உ-எ)

தமிழர், முஸ்லிம்களிடையே கிழக்கில் கோஷ்டி மோதல்!

லண்டன், மே 20

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் கிழக்கிலங்கையில் தமிழ், முஸ்லிம் குழுக்களுக்கிடையில் கலவரம் ஏற்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்திருப்பதாவது:-

தமிழர்களின் வீடுகள் மீது கல்லெறியில் ஈடுபட்டிருந்த ஒரு கூட்டத்தினரை அடக்க இந்திய அமைதிப் படையினர் சென்றனர்.

இந்த முயற்சியின்போது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் ஒருவர் உயிரிழந்தார். 9 பேர் காயமடைந்தனர்.

சம்மாந்துறையில்

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறையில் கடந்த செவ்வாய் தமிழர் கூட்டம் ஒன்று இரண்டு முஸ்லிம் விவசாயிகளைக் கொலை செய்து அவர்களது உழவு இயந்திரத்தையும் கைப்பற்றியது.

இதையடுத்து வெடித்த கலவரத்தில் 35 தமிழரின் வீடுகளும் பதினைந்து முஸ்லிம்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

சுமார் நாலாயிரம் பேர் அகதிகளாகினர்.

மூதூரில்

கலவரம் மூதூருக்கும் பரவியது. கடந்த புதன்கிழமை இரவு எட்டு முஸ்லிம்கள் கத்திக்குத்துக்குள்ளாகினர்.

அங்கு இறந்தவர்களின் சடலங்களை அகற்ற மறுநாள் காலை உறவினர்கள் கூடினர். அப்போது சுமார் ஆயிரம்பேர் கொண்ட கூட்டம் ஒன்று கல்லெறியில் ஈடுபட்டது.

தமிழ்மக்கள் வீடுகள் கல்லெறிக்கு இலக்காகிச் சேதமடைந்தன.

தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இன்று வைகாசி விசாகம்

யாழ்ப்பாணம், மே 20

இன்று சனிக்கிழமை வைகாசி விசாக தினமாகும்: முருகனுக்கு உரிய சிறப்புத் தினமாகும். குமரன் ஆலயங்களில் விசேட அபிஷேக ஆராதனைகள் இன்று நடைபெறும். பல ஆலயங்களில் விசாகப் பொங்கல் வைபவங்களும் இடம்பெறும்.

கௌதம புத்தர் ஞானம் பெற்ற வைகாசி விசாகதினம் வெசாக் எனப் பௌத்தர்களால்கொண்டாடப்படுகிறது. (அ)

மீள வாக்களிப்பு நடத்த அரசுக்கு சிபாரிசு!

கொழும்பு, மே 20

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் 25 சதவீதத்துக்கும் குறைவாக வாக்குகள் பதிவான இடங்களில் மீண்டும் புதிதாக தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது,

சுதந்திர நீதியான தேர்தலுக்கான மக்கள் கமிட்டி (PAFFREL) அரசுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறு சிபார்சு செய்யப்பட்டது,

உள்ளூர் பிரமுகர்களைக் கொண்ட இக்குழு அரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் தேர்தல் சட்டவிதிகள் மீறப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்திருக்கிறது. (உ-எ)

அமெரிக்க வீஸா பெறும் முதல் நபர் பாகிஸ்தானியர்

வாஷிங்டன், மே 20

லொத்தர் மூலம் 20 ஆயிரம் பேருக்கு வீஸா வழங்கும் திட்டம் ஒன்றை அமெரிக்க அரசு அறிவித்திருந்தது.

அதற்கிணங்க விண்ணப்பித்தவர்களில் லொத்தர் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை கடந்த திங்கட்கிழமை அமெரிக்க ராஜாங்க அமைச்சு அமெரிக்காவில் வெளியிட்டது.

இதன்படி, முதலாவது வீஸாவை பாகிஸ்தானைச் சேர்ந்த 36 வயது நபர் ஒருவர் பெற்றுர்.

இரண்டாவது வீஸா மேற்கு ஜேர்மனியில் வசிக்கும் 45 வயதான ஈரானிய பெண்ணுக்குக் கிடைத்தது.

மூன்றுவது வீஸா 27 வயதான குவைத் பிரசைக்குக் கிடைத்தது,

லொத்தர் வீஸா திட்டத்தின் கீழ் வீஸா பெற 162 நாடுகளைச் சேர்ந்த சுமார் 32 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தனர். (உ-எ)

அரசு-ஜே. வி. பி. பேச்சு விரைவில் நடக்குமாம்

துணை அமைச்சர் சொல்கிறுர்

கொழும்பு, மே 20

ஜே. வி. பி. இயக்கமும், இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த புதன் தகவல்துறை அமைச்சில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் துணை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா இத்தகவலை வெளியிட்டார்.

ஜே. வி. பி.யின் சில கோரிக்கைகள் நியாயமானவையே என்று துணை அமைச்சர் மேலும் தெரிவித்தார் (ஒ-எ)

ஆபாச திரைப்படங்களை இறக்குமதி செய்யத் தடை!

கொழும்பு, மே 20

ஆபாச (பாலியல்) திரைப்படங்களின் இறக்குமதிக்கு அரசு உடனடியாக தடை விதித்துள்ளது.

இப்போது காட்டப்படும் 'வயது வந்தவர்களுக்கு' மட்டுமென படங்களில் இருந்து ஆபாசமான காட்சிகளை உடனே வெட்டும் படியும் படமாளிகை உரிமையாளர்களுக்கு தகவல் துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இந்த விபரங்களை தகவல் துறை துணை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா வெளியிட்டார். (ஒ-எ)

அமைதிப்படையை திருப்பி அழைக்குமாறு ஜனதா தள் கோரிக்கை

புதுடில்லி, மே 20

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை உடனடியாக வெளியேற வேண்டும் என்று ஜனதா தள் கட்சி நேற்று கோரிக்கை விடுத்திருக்கிறது.

பிரதான எதிர்க்கட்சியான ஜனதா தள் புதுடில்லியில் இலங்கை நிலைபற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில்—

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து உடனே வெளியேற வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டது முட்டாள் தனமானது.

இலங்கை அரசு — தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் நடத்துவதால் இந்தியா முற்றுக தனிமைப் படுத்தப்பட்டு விட்டது —என்று கூறப்பட்டுள்ளது. (உ-எ

ஆயுர்வேத ஆஸ்பத்திரி ரஷ்யாவிலும் திறப்பு

சோவியத்யூனியன் தலைநகர் மாஸ்கோவில் வருகிற முதலாம் திகதி முதலாவது ஆயுர்வேத மருத்துவ மனை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தியாவில் உள்ள ஆயுர்வேத மருத்துவ நிறுவனம் ஒன்றுடன் இதற்கான ஒப்பந்தம் ஒன்றை சோவியத் அரசு கடந்த மார்ச்சில் கையெழுத்திட்டது.

புற்றுநோய், இரத்த அழுத்தம், இருதய நோய் ஆகியவற்றுக்கு இம்மருத்துவ நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்படும்.

ஆயுர்வேத நிபுணர்கள் 60 பேர் இந்தியாவில் இருந்து சென்று இம்மருத்துவ மனையில் பணியாற்றுவர்.

சோவியத் நாட்டு மருத்துவர்களுக்கு ஆயுர்வேதத்தில் இந்திய நிபுணர்கள் பயிற்சி அளிப்பர். (உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 393/3 இல் உள்ள அச்சகத்தில் 20 - 05 - 1989 அச்சிட்டு வெளியிடப்பட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 89
PAPER CLASS
இந்துநாகரிகம் - பாலா
சனி காலை - 8.30 மணி

சஞ்சீவி சஞ்சிகை

20 - 05 - 1989 சனிக்கிழமை

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 89
PAPER CLASS
பொருளியல் - உதயன்
திங்கள் 5 மணி

கருத்துக் கலசம் — மயூரா

யதார்த்தம்

வாழ்க்கை என்பது பிரச்சினைகள் மலிந்த சாகரம். எல்லா மனிதர்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் எப்போதும் ஆகக் குறைந்தது ஒரு பிரச்சினை யாவது இருக்கவே செய்யும். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான பிரச்சினைகள் மனநெருக்கடியை உண்டு பண்ணியவாறே தொல்லை தரும்.

பிரச்சினைகள் என்ற அட்டவணைக்குள் அன்றாடக் கஷ்டங்களும் அடங்கும். பிரச்சினைகளை, கஷ்டங்களை எதிர்கொண்டு மன உறுதியுடன் தீர்வு காண்பதில் தான் வாழ்க்கையின் வெற்றி தங்கி உள்ளது. வாழ்க்கையின் வெற்றி இரகசியமும் அது தான்.

தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, பொது வாழ்க்கையிலும் சரி, அரசியல் அரங்கத்திலும் சரி பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமானால் அவை யதார்த்த ரீதியாக அணுகப்பட வேண்டும். பிரச்சினைகளின் அடிப்படையை, உண்மை நிலையைப் புரிந்துணராமல் அவற்றைத் தீர்ப்பது இலகுவானதல்ல.

பிரச்சினைகளை மட்டும் என்ன? வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கே யதார்த்த நிலை உணரப் படுதல் அவசியம். ஆனால் மக்களில் பலரும் வாழ்க்கையின் யதார்த்தத்தைப் புரிந்தவர்களாக இல்லை.

தமது விருப்பு வெறுப்புகளுக்கு வாய்த்தாற்போல, சாதகமாக, இயல்பு நிலை இருந்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இல்லையேல் வாழ்க்கையின் யதார்த்தம் — உண்மை நிலை — என்ன என்று உணராமல், உணரமுடியாமல் தவிக்கிறார்கள்.

உண்மை நிலையை, யதார்த்தத்தை உருவகித்துப்பார்த்தும் சிலர் பிரச்சினைகளைத் தீர்க்க அணுகுகிறார்கள். யதார்த்தம் என்பது வாழ்க்கை நிலையின், பிரச்சினைகளின் அப்பட்டமான, அச்சொட்டான, இயல்பான, இயற்கையான வடிவமாகும். அதனை உருவகித்து எண்ண முயல்வது பொருத்தமற்றதாகும்.

தனி மனிதர் வாழ்விலும், சமூக வாழ்விலும் உண்மை நிலை புரியாமல் மாயை நிலையில் நின்று உழன்று அதற்கு ஊறு விளைவித்தல் ஆகாது. மனித வாழ்க்கையை, அதன் கண் உள்ள பிரச்சினைகள், கஷ்டங்களை இயற்கையாகவே, யதார்த்தமாகவே பார்த்து, யதார்த்தமாகவே அணுகி உய்வதற்கு உளப் பயிற்சி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

வாழ்வின் எல்லாப் பப்புகளிலும் யதார்த்தத்தைக் காண்போமாக.

முழுமனதுடன், மன உறுதியுடன் யதார்த்த நிலை நின்று பிரச்சினைகளைத் தீர்த்து வாழ்க்கையில் வெற்றி காண்பதற்கு முயல்வோமாக.

கர்ணன் புண்ணியத்தை நிறைவாக்க கண்ணன் இரந்து வாங்கிய தானம்!

குருக்ஷேத்திரத்தில் கௌரவ — பாண்டவப் போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

அர்ச்சுனனின் தேரோட்டி கிருஷ்ணனின் சாகசத்தால் கர்ணனின் அம்புகளில் இருந்து அர்ச்சுனன் தப்பித்துக்கொள்கிறான்.

திடீரென்று கர்ணனின் சாரதி சல்லியன் தேரை விட்டுச் சென்றுவிடுகிறான். தேரின் சக்கரம் உடைந்து பூமியில் பதிந்து விடுகிறது.

அர்ச்சுனனின் அம்புகளால் ஆயுதங்கள் சிதற நிராயுத பாணியான கர்ணன் தேர்ச் சக்கரத்தைத் தூக்கிக்கொண்டிருக்கும் தருணம்—

கண்ணனின் ஆணைப்படி அவன் மீது தன் அஸ்திரங்களை எய்கிறான் அர்ச்சுனன்.

கர்ணனின் உடல் துளைக்கப்பட்டு உதிரம் கொட்டப்படுகிறது. ஆனால் உயிர் மட்டும் பிரியாமல் உடலுக்கு உறுதுணையாக நிற்கிறது.

மரணம் கர்ணனை அணுக முடியாமல் தர்மம் அவனுக்கு அரணாகி நிற்கிறது.

அப்போது கண்ணன் அந்தணன் வடிவில் கர்ணனிடம் தானம் கேட்டுக் கையேந்தி நிற்கிறான்.

கர்ணன் செய்த தர்மத்தால் கிடைத்த புண்ணியங்கள் அத்தனையையும் தானமாகக் கண்ணன் கேட்கிறான்.

கர்ணன் மனம் உவந்து அந்தத் தானத்தை இரத்தத்தால் தாரை வார்த்துக் கொடுக்கிறான்.

அவன் ஆன்மா விடுதலை அடைந்து மோட்சமடைகிறது.

உத்தவரின் இரண்டு கேள்விகள்

இச்சம்பவத்தை நினைவு கூர்ந்துதான் உத்தவர், கண்ணனிடம் சில கேள்விக்கணைகளைத் தொடுக்கிறார்.

★ முதல் கேள்வி... 'நிராயுதபாணியாக நின்ற கர்ணன் மீது அஸ்திரங்களைப் பிரயோகிக்கும்படி அர்ச்சுனனுக்கு ஆணை தந்தாயே கண்ணா! அது என்ன தர்மம்? என்ன நீதி?

★ இரண்டாவது கேள்வி... 'அனைத்தும் இழந்து தான் சேர்த்த தர்மத்தின் பலத்தால் உயிர்பிழைத்துக் கொண்டிருந்த கர்ணனிடம் தர்மபலனையே தாரை வார்த்துக் கொடுக்கும்படி தானம் கேட்டு அவன் உயிரை மாய்த்தது தர்மமாகுமா?'

உத்தவர் மட்டுமல்ல, பாரதத்தில் கர்ணன் களத்தில் மடிந்த கதையைக்கேட்டும் ஒவ்வொருவர் மனத்திலும் எழும் கேள்விகள் இவை.

இதற்குக் கண்ணன் தந்த பதில்களில்தான், அவன் செய்யும் காரியங்களில் புதைந்துள்ள காரணங்கள் புலப்படுகின்றன.

கண்ணன் கூறுகிறான்:

'அதர்மத்தைச் செய்கிறவர்கள் மட்டுமன்றி, அதற்கு உடந்தையாக இருக்கிறவர்களும் தண்டனையை அனுபவித்துத்தீரவேண்டும்.

துகிலுரிந்த சபையில்

திரௌபதியின் ஆடை பற்றி இழுத்து அவமானப் படுத்தப்பட்ட சபையிலே இருந்தவன் கர்ணன். துச்சாதனின் செயலைத் தவறு எனக் கண்டிக்கும் துணிவு அல்லது தடுக்கும் திறனில்லை என்றாலும் போகட்டும்; அதுவே தர்மம் என பெருமகிழ்ச்சி கொண்டு நின்றவன் கர்ணன்.

அதற்காகவே அவனை நிராயுதபாணியாக்கி, அவன் செய்த தீவினைகளே அவனை அம்பாகத்தாக்கின.

'பாண்டவர் தூதனாகத் துரியோதனன் சபைக்குச் சென்ற என்னை அழிக்க மாயச்சிம்மாசனம் அமைத்திருந்தான் சகுனி. அது தவறெனத் தெரிந்தும் தடுக்கவில்லை கர்ணன்.

'நன்றி உணர்ச்சியினால் தர்ம நியாயங்களைச் சீர்தூக்கிப்பார்க்கும் நிலையை கர்ணன் இழந்திருந்தான். இத்தவறுக்கு அவன் பிராயச்சித்தம் தேடவேண்டியிருந்தது.

பச்சாத்தாபம் ஒன்றுதான் ஒருவன் தவறுகளுக்குப் பிராயச்சித்தம். மரணத்திற்கு முன் ஒருவன் தன்னைப் புனிதப்படுத்திக் கொள்வதற்கு தான் செய்த தவறுகளுக்காக வருந்தவேண்டும். குறைகளே இல்லாத நிறைந்த மனிதனாக மாற்றவே முதலில் அவனுக்கு ஒரு சிறு தண்டனை தந்து அவனைப் புனிதப்படுத்தினேன்.

'அடுத்து அந்தணன் வடிவில் வஞ்சகமாகச் சென்று கர்ணன் செய்த தர்மத்தைத் தானமாகப் பெற்றது அதர்மம் என்று குற்றஞ்சாட்டினாய்!

> குழந்தைப் பருவம் முதலே கண்ணனுக்கு தேரோட்டியாகப் பணி புரிந்தவர் உத்தவர்.
>
> தனது அவதாரப்பணி முடிவடையும் கட்டத்தில் உத்தவரை அழைத்து ஏதாவது கேள் என்றான் கண்ணன்.
>
> கண்ணனின் செயல்களைக் கவனித்து வந்த உத்தவருக்கு பல சந்தேகங்கள். சொல் ஒன்று செயல் ஒன்றாக வாழ்ந்த கண்ணனின் லீலைகள் உத்தவருக்கு புரியாத புதிர்.
>
> கேள்விகள் கேட்கிறார் உத்தவர்.
>
> அன்று நான் குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனனுக்குச் சொன்னது பகவத்கீதை. இன்று உனக்குச் சொல்லப்போவது உத்தவகீதை - இப்படி பதில் சொல்ல ஆரம்பிக்கிறான் கண்ணன்.
>
> இந்த உத்தவ கீதையில் ஒரு கட்டம் 21 - 01 - 89 சஞ்சிகையில் - நான் வெறும் "சாட்சிபூதம்" மட்டுமே - என்ற தலைப்பில் வெளியானது.
>
> இன்னொரு கட்டம் இன்று பிரசுரமாகிறது.

அதற்குரிய காரணங்களை விளக்கு முன்பு, 'தர்மம் எது, தானம் எது' என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

தர்மம் எது? தானம் எது?

பிரதிபலன் கருதாமல் செய்யும் சிறிய உதவி தர்மம். வறியவனுக்குப் பொருள் கொடுத்தல், பசித்தவனுக்கு உணவைப் பிச்சையிடுதல் ஆகிய செயல்கள் தர்மம்.

ஆனால் ஒன்றைத் தர்மமாகக் கொடுத்து, அதற்குப் பிரதியாக நம்மையறியாமல் வேறு பலனை உடனே பெறுவது தானமாகும்.

தவசீலன் ஒருவனுக்கு பசுவைக் கொடுக்கிறோம். 'நீ பல்லாண்டு வாழ்க' என அவன் வாழ்த்துகிறான். இது கோதானம் ஆகிறது.

கன்னிப் பெண் ஒருத்தியை ஆடவனுக்கு மணம்முடித்து வைக்கிறோம். இது கன்னிகா தானம் ஆகிறது.

தர்மம் செய்யும்போது பெற்றுக்கொள்பவனின் தேவையைத்தான் சிந்திக்கிறோம். அவன் யோக்ய தாம்சங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை.

ஆனால் தானம் பெற்றுக் கொள்பவனின் தகுதியறிந்தே தானம் செய்யவேண்டும்.

தானம் செய்கையில் பாத்திரம் அறிந்து பிச்சையிட வேண்டும். தானத்திற்கும் தர்மத்திற்கும் இத்தனை வித்தியாசம்.

'கர்ணன் களத்தில் விழும் வரை சேர்த்து வைத்து இருந்தது எல்லாம் தர்ம பலன் தான்.

'அத்தனை தர்ம பலன்களும்' அவன் உயிரைக் காத்துக் கொண்டிருந்தன.

கர்ணனின் இரண்டு ஆசைகள்

'ஆனால் அந்த நிலையில் கர்ணன் மனதில் இரண்டு ஆசைகள்.

'ஒன்று பரம் பொருளைக் கண்ணாரக்கண்டு தரிசிக்க வேண்டும்.

இரண்டு - மீண்டும் பிறப்பில்லாத மோட்சத்தை அடையவேண்டும் என்பது.

கர்ணன் செய்த தர்மத்தில் பல பிறவிகள் வாழும் பாக்கியம் பெற்றிருந்தான்.

பகவானின் தரிசனம் பெற கர்ணன் இன்னும் கொஞ்சம் புண்ணியபலன் பெற வேண்டி இருந்தது. அதற்கென அவன் செய்யவேண்டிய தானம் ஒன்றிருந்தது.

அந்தப் பலனை அவனுக்குத் தந்து, அந்தத் தானத்தைப் பெற்றுக் கொள்ளவே என்னைப் பிச்சைக்காரனாக்கிக் கொண்டு அவன் முன் கையேந்தி நின்றேன். தர்மத்தையே தானமாகப் பெற்றேன். அதற்குப் பிரதியாக என் விராட விஸ்வரூப தரிசனத்தைக் கர்ணன் கண்டான்; மோட்சத்தை அடைந்தான்.

நான் செய்தது தர்மம் இல்லையா?

குறைவாக இருந்த கர்ணனின் புண்ணியத்தை நிறைவாக்கவே இந்தத் தானம்.

இதில் நான் கொடுத்தது கடலளவு; ஆனால் கொண்டது கடுகளவு.

'இப்போது சொல் உத்தவா!

தர்மபலனை எல்லாம் தான பலனாக்கி அழியாப் புகழையும் மோட்சத்தையும் கர்ணனுக்கு நான் நல்கியது தர்மம் இல்லையா?' –

கண்ணன் இப்படி கூறி முடித்ததும் உத்தவர் கண் கலங்க, அவன் திருவடிகளுக்குத் தன்னையே தானமாகத் தந்து கொண்டிருந்தார். ★

டி. எஸ். என். சுவாமி

தாழை மணக்கிறது

கடற்கரை அருகில் உள்ள அழகிய சிற்றூர் அது...! முழங்குகின்ற கடல் அலைகள், சுளுகு கொண்டு கொழித்தாற்போல நுண் மணலால் ஆகிய மணல் மேடு கடலை ஒட்டி உயர்ந்து நிற்கிறது...!

அது மணல் மேடு மட்டுமா...? மணமேடும் கூடத்தான்...! சங்கு போல் வெண்மையான நிறம் கொண்ட தாழைப்பூக்கள் அந்த மணல் மேட்டின் கானற் சோலையில் சிதறிக் கிடக்கின்றன...!

தாழையின் இலைகள் முட்களைக் கொண்டவை...! முள்ளிலைத் தாழை என்றே அதற்கு அடைமொழி கூறலாம்...!

ஈட்டி ஏந்திய காவலர்களுக்கு இடையே பாதுகாக்கப்படும் எழிலார்ந்த இள நங்கைகள் போலத்தான் அந்தப் பூக்கள் முகை அவிழ்ந்து மணம் விரித்தன...?

அலைகளின் நீரை அள்ளிக் கொண்டுவரும் காற்று மோதியது...! தாழையின் முள் இலைகளால் காக்கமுடியாமல் மலர்களை எல்லாம் அந்தக் கடற்காற்று சோலையின் மணல் பகுதி எங்கும் சிதற வைத்தது.

கடற்கரை மணல் மேடு முழுவதுமே மணம்...! நறுமணம்...! பெருமணம்...! ஊரில் மீன்களைப் பிடித்துக் காயப்போட்டிருந்தால் அங்கே புலால் நாற்றம்...! கடற்கரைச் சோலையிலோ சிதறிய தாழை மலர்கள் தந்திருக்கும் புதுமணம்...!

நாற்றத்துக்கும் மணத்துக்கும் போட்டி...! அந்தப் புலால் நாற்றத்தை பூ மணம் முறியடிக்கிறது. அத்தகைய மலர்களைத் தரும் சோலைக்கு இன்னொரு சிறப்பும் இருக்கிறது...!

அங்கேதான் அவன் அவளைக் கண்டு தான் கொண்ட காதலை வெளியிட்டான்...! அவளும் அதை ஏற்றுக் கொண்டாள். இரு மனப் பிணைப்புத்தானே காதல் பயிர் வளர்வதற்கான நீரூற்று...! காதல் வளர்ந்தது...! சந்திப்புச் சரித்திரம் தொடர்ந்தது...! தும்மலையும் காதலையும் எப்படி மறைக்க முடியும்?

அவளைக் காண்பதற்காகக் காற்றையும் வெல்லும் கடு வேகமுடைய குதிரைகள் பூட்டிய தேரில் அவன் வந்தான். தேர் அவனுடையது தானே...? அவன் பார்க்க வந்தது எவரை...? அவனுக்கு இங்கென்ன வேலை என்றெல்லாம் கேள்விகளை அடுக்கி பதில்களைத் தேடிக்கொண்டது ஊர்...?

பிறருடைய சொந்தவாழ்க்கையை துருவிப் பார்ப்பதில் தான் தனித்தித்திப்பு உண்டே நம் மக்களுக்கு...?

ஒருநாள் கூடப் பார்க்காவிட்டால் உடலில் உயிர் தரிக்காது என்ற நிலைக்கு வந்துவிட்ட காதலர்கள் சந்திக்காமல் இருப்பது எப்படி...? அடிக்கடி சந்திக்கத்தொடங்கிவிட்டால் மறைப்பதுதான் எப்படி...? மறைக்கத்தான் முடியவில்லை...! மலையில் நெருப்புப் பிடித்தாற்போல் அவன் அவளைக் காதலிப்பது அனைவருக்கும் தெரிந்தது...!

சிலரும் பலருமாக மூக்கின் உச்சியில் சுட்டுவிரல் வைத்துப் பேசிய பேச்சுக்கள் அவளைப் பெற்றவர்களைச் சென்று சேர்ந்தது...!

இலக்கியம்

'கிசுகிசு' க்களுக்குப் பிறகும் மகளை வெளியே உலாவவிட அவர்களென்ன ஏமாளிகளா? மகள் 'இற் செறிக்கப்பட்டாள்! கிட - எனச் சொல்லப் பட்டாள் என்பது பொருள்...!

- கே. காளிமுத்து -

அவனைக் காணவிட்டால் ஐம்புலனும் ஆருயிரும் எப்படித் துடிக்கும் என்பதை அவளல்லவா அறிவாள்...? அவளின் மேனி மெலிகிறது...! வளைகள் கழன்று விழுகின்றன...! பசலை படர்கின்றது. எல்லாம் பார்க்காததால் வந்த வினை...!

இத்துன்பத்துக்கு வழி என்ன..? இந்த நோய்க்கு மருந்துதான் ஏது...? திருமணம்தான்...!

திருட்டுச் சந்திப்புகள் இனித்தொடர வழியில்லை...! உரிமையோடு சந்திக்கலாம்...! ஊரார் ஒப்புதலைப் பெற்றோ, பெருமலோ கூடத் திருமணத்திற்கு அவன் ஏற்பாடு செய்தாக வேண்டும்...!

களவு செய்ய வருவது போல் வந்து கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து, உற்றுவிட்டுப் போவது எப்போதும் நடக்காது...!

அவளின் தோழி அவளிடம் சொல்கிறாள், விரைவில் மணம் முடிப்பதுதான் நல்லது என்று. சொல்வது தோழி கேட்பவள், தலைவி...! ஆனால் சொல்லப்படுவது பக்கத்தில் மறைந்து நின்று கொண்டிருக்கும் அவனுக்கு...!

ஊரில் புலால் நாற்றத்தையே கடற்கரைத் தாழை மலர்களின் நறுமணம் போக்கி விடவில்லையா...?

அதுபோல் உங்களின் திருமணம் ஊரவர் கூறும் பழியையே போக்கும் என்கிறாள் தோழி...!

எழிலார்ந்த இயற்கைக் காட்சியை வாழ்வோடு இணைத்துக் காட்டுவதில் சங்க காலத்துக்கு நிகர் வேறெதுவும் இல்லை...!

உலோச்சனார் பாடிய நற்றிணையின் நயம் தெறிக்கும் பாடல் ஒன்று.

தாழை போல் மணம் கமழும் இந்தப் பாடலில் கருத்தொருமித்த காதலர்கள் விரைவில் கடிமணம் புரிந்து கொள்ளல் வேண்டும் எனும் உரிப் பொருட் கருத்து உரிய வகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

நெய்தல் நிலக் காதலர் இருவரின் மன ஓசையும் கடலோசையோடு சேர்ந்து நமக்குக் கிடைக்கிறது...! கிடைக்க வைக்கிறார் உலோச்சனார்.

இதோ அந்தப் பாடல்:

'முழங்குதிரை கொழிஇய மூரி எக்கர்த்
தடந்தாட் தாழை முள்ளிலை நெடுங்கோட்டு
அகடற் பொதுளிய முகை முதிர்பு அவிழ்ந்த
கோடு வார்ந்தன்ன தோடு பொதி வெண்பூ
எறிதிரை உதைத்தலின் பொங்கித் தாது சோர்பு
சிறுகுடிப்பாக்கத்து மறுகுதலர்ல் மறுக்கும்
மணங்கமழ் கானல் இயைந்த நங்கேண்மை
ஒருநாள் கழியினும் உய்வரிதென்னுது
இதழ்பரி நெடுந்தேர் வரவாண்டழுங்கச்
செய்தனன் தப்பல் அன்றியும்
உயவுப் புணர்ந்தன்றிவ் வழுங்கல் ஊரே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி மறந்த சமுதாயமே!

'அவனது கண்கள் எதற்காகக் குழிவிழுந்து கிடக்கின்றன; உடல் ஏனோ ஒட்டி உலர்ந்துவிட்டது.

அன்றொரு நாள், சித்தார்த்தர் தனது தேரிலே உலாச் சென்றபோது, தான் கண்ட ஏழைகளின் நிலையைப் பற்றித் தனது தேர்ச்சாரதி சந்தகனிடம் கேட்ட கேள்விகள்தான் இவை.

இன்று இவனைப் பார்த்து நான்கூட இப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது. அவனையே உற்றுநோக்கிப் பார்க்கிறேன் அவனோ தனது சிந்தனையில் மட்டுமே கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்ருன்.

கண்டி நகரத்து வீதிகளில் ஒன்று திருகோணமலைவீதி— டி. எஸ். சேனநாயக்க மாவத்தை என்பது இதன் புதுப்பெயர். இந்த ஊரிலுள்ள மிகப் பிரபல்யமான திரித்துவக்கல்லூரியும் இதே வீதியில்தான் அமைந்திருக்கிறது. அதன் அருகிலேயே இவனது இருப்பிடம்.

அது ஒரு நடைபாதை. காலா காலமாக நடைபாதையிலே காலங்கடத்துகிருனென்ருல் அவன் ஒரு அனாதையாக— ஏழையாக இருக்க வேண்டும். தாய் தந்தை மனைவி குழந்தை வீடு மாடு சுற்றம் சொற்றம் எதுவுமே இல்லாதவன் என்பதே பொருத்தம். உண்மையும் அதுதான்.

வாழ்க்கையில் உயர்வதற்கு எதுவித ஆதாரவும் இல்லாதவன். ஆனாலும் தோற்றத்திலோ மிக உயர்ந்தவன். மெலிந்த உருவம் என்றே சொல்லவேண்டும். வயது அறுபதைத் தாண்டியிருக்கும். கறுப்பு நிறமேனி. 'சைக்கிள்' கொழுப்பைமேலெல்லாம் பூசினல் எப்படியிருக்குமோ அப்படிப்பட்ட நிறம். குளித்துப் பல மாதங்கள் என்று நம்புகிறேன். அதனால் அவனது நிறத்தோடு அழுக்கும் படிந்திருந்தது.

திருகோணமலை வீதியில் உள்ள பல வீடுகளில் நீர் வசதி இல்லையென்பது எல்லோருக்கும் தெரியும். நீர்க்குழாய்கள் பூட்டப்படாத அவர்களின் வீடுகளுக்கு நீர் கொடுத்து உதவுவது கண்டி மாநகரசபை.

வீதியோரத்தில் காணப்படும் அந்தப் பைப் மாநகர சபையால் நிறுவப்பட்ட ஒன்று. மக்களின் வசதிக்காகப் போடப்பட்ட அந்தப் பைப் ஒரு சில ஏழைகளுக்கு வேலைவாய்ப்பையும் தேடிக் கொடுத்திருக்கிறது என்பது அந்நகரத்திலுள்ள பலருக்கும் தெரியும்.

இந்த ரீதியில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொண்ட சிலரில் ஒருவன்தான் இவன். பெயர் வெள்ளைமுத்து. அவனது பெயருக்கும் நிறத்திற்கும் எதுவித ஒற்றுமையும் இல்லை.

திருகோணமலை வீதியிலுள்ள பல நீர்வசதியற்ற வீடுகளுக்கு அவன் நீர் அள்ளிக்கொடுத்து உழைப்பவன். வீதியோரத்தில் உள்ள அந்தப் பைப் மூலமே அவன் தண்ணீர் இழுப்பான். தனது இரண்டு கைகளிலும் இரண்டு வாளிகளைத் தூக்கிச் சுமப்பது அவனது வழக்கம்.

அதிகாலை 5.30 மணிக்கு அவனது வேலை ஆரம்பமாகினலும் முடிவுறும்போது காலை 10.30 மணி ஆகிவிடும். அதன் பின்னரே சாப்பிடுவான்.

ஒரு கிளாஸ் தேனீர் அதில் நனைப்பதற்கு கால் இருத்தல் பாண். அவன் பாவிப்பது ஒரு வெறும் பால் பேணி.

மத்தியான வேளை இரண்டு மணிபோல் எதையாவது சாப்பிட்டு அரை குறையாக வயிற்றை நிரப்பிக்கொள்வான். சோறு கிடைக்கும் நாள்களில் அவனது இன்பத்திற்கு எல்லைக்கோடுபோட முடியாது.

மதிய உணவு முடிந்ததும் ஒரு சிறு உறக்கம். தூக்கம் விழித்து எழும் அவனுக்காக வேலைகள் காத்திருக்கும். மறுபடியும் தண்ணீர் இழுக்கும் வேலைதான்.

பிற்பகல் 3.30மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை இழுத்துக் கொண்டேயிருப்பான். அவனது வாழ்வில் வேலைச் சலிப்போ அலுப்போ ஏற்பட்டதில்லை.

வாளிகள் ஒருவேளை காலநோய்ப்பட்டு உடைந்தாலும் அவனோ நோய்வாய்ப்படுவதில்லை — சோம்பலும் அவனிடம் குடியிருப்பதில்லை வேலையென்றால் வேலைதான். யாரும் குறைசொல்ல இடங்கொடான். அந்த அளவுக்கு அவனது வேலையில் நிறைவே இருந்தது.

ஆனால் இன்று...? அவனது காலும் கையும் தைரியமிழந்து சோர்ந்துவிட்டன. வேலை செய்ய அவனால் முடியவில்லை. ஒரே நேரத்தில் இரண்டு வாளிகளைத் தூக்கிய அவனது விரல்கள் இன்று பலம் இழந்து விட்டன. அதனால் படுத்து விட்டான்.

சஞ்சீவி சிறுகதை

படுப்பதைத்தவிர வேறு வழியுமில்லைத்தான். அவனை ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்கு யார் இருக்கிருர்கள்? அவனது ராஜாங்கத்தில் அவன் ஒரு தனி ஆள். அரசன், மந்திரிப்பிரதானிகள், குடிமக்கள் அனைத்தும் அவனே. அவனை ஆஸ்பத்திரியில் வைத்துப் பராமரிப்பதற்கோ தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பதற்கோ யாரிருக்கிருர்கள்? அதைத் தெரிந்ததனுல் அவன் படுத்து விட்டான்.

அவனது படுக்கையறை, குளியலறை, குசினியறை அனைத்தும் அந்த நடைபாதைதான். மலசலங் கழிப்பதற்கு மட்டும் வேறெங்காவது போய்வருவான். அவனுடைய சிந்தனை இன்று வழக்கத்திற்கு மாருகவேயுள்ளது. அதிகநேரம் அவன் சிந்திப்பதற்குக் காரணம்? அவனது சிந்தனையை ஓரளவுக்கு நான் ஊகிக்கிறேன்.

யார்யாருக்கு உதவி செய்தானே அவர்கள் எவருமே அவனைக் கவனிப்பதில்லை. 'காவோலை விழக் குருத்தோலை சிரித்தது' போல, இளம்பெண்ணொருத்தி இவனது வேலையைத் தட்டிக் கொண்டாள்.

அவளை வரவேற்றுத் தத்தம் தேவைகளைப் பூர்த்தியாக்கிக் கொண்ட திருகோணமலை வீதி மக்கள், வெள்ளை முத்துவை நினைப்பதே இல்லை. இதை நினைக்கும் போதெல்லாம் வெடித்து வெடித்து அழுவான். இன்றும் அவனைச் சிந்தனையில் ஆழ்த்தியது இதுதான் என்பது என்னுடைய தீர்க்கதரிசனம்.

'காலா காலமாக வேலை செய்து உதவிய என்னை எவராவது நினைச்சுப் பார்த்தாங்களா? ஒருவேளை சோறு தந்து இந்தாப்பா இதைச் சாப்பிடு. 'மாடு மாதிரி வாளியும் கையுமாத் தண்ணி இழுத்து நமக்கெல்லாம் உதவி செய்தே. அதை நாம மறக்க முடியுமா? பெரிசா எதையும் நாம செய்யாட்டாலும் இந்தச் சின்ன உதவியையாவது ஏத்துக்க'

இப்படி யாராவது தனக்குச் சொல்லியிருக்கலாம் – உதவி செய்திருக்கலாம் – தன்னைத் தேற்றியிருக்கலாம் என்பது அவனுடைய ஒரு அங்கலாய்ப்பு. அவன் எதிர்பார்ப்புகள் அந்த மக்கள் மனதிலிருந்து வரவேயில்லை.

அவனது முதுகைத் தட்டி அவனது சிந்தனையைக் கலைத்தபின் மெதுவாகக் கேட்டேன். உண்மையை ஒத்துக்கொள்ளாமல் அவனால் இருக்க முடியவில்லை.

'கவலைப்படாதப்பா; நம் மளுச்கும் ஒரு காலம் வரத்தான் போகுது. அந்தக்காலம் ஏழைகளைப் பொறுத்தவரை நாளைக்கென்பது நிச்சயம்'

இப்படியெல்லாம் சொல்லி அவனைத் தேற்றுவேன். என்னால் இயன்றதைக் கொடுக்கவும் நான் மறப்பதில்லை. எனது கையிலிருந்து ஐந்து ரூபா நோட்டைப் பெறுகின்ற நேரமெல்லாம் அவனது கண்களிலிருந்து கண்ணீர் வடியும்.

அவனது கண்களைக் கட்டுப்படுத்தவே முடியாது. ஆருகப் பாயும். அதனால் அதிகநேரம அவனோடு நான் நிற்பதில்லை. அகன்று விடுவேன். அவனோ என்னையே பார்த்து நிற்பான். என் உருவம் அவனது கண்களிலிருந்து மறையும்வரை அவனது கண்கள் வேறிடத்தைப் பார்ப்பதில்லை.

வழக்கத்திற்கு மாருக அன்று ஒரு பத்து ரூபா நோட்டை நீட்டினேன்.

- நவாலியூர். சி. என். செல்லத்துரை -

இரண்டு கைகளாலும் அதனை வாங்கி, தனது கண்கள் இரண்டிலும் ஒற்றியபின் 'இனி எப்ப சாமி வருவீங்க' என்ருன்.

தழுதழுத்த அந்தக் குரலில் ஒருவகை அன்பும் பண்பும் இருப்பதை நான் உணராமலில்லை. அவனது குரலில் எனக்கொரு தனி விருப்பம். இறுமாப்பு இல்லாத தொனி. ஒருவேளை பொருள் இல்லாமைதான் அதற்குக் காரணமே எனக்குத் தெரியவில்லை.

'எவனிடம் இல்லாமை உண்டோ, அவனிடம் பண்பு ஏராளமாக உண்டு' இப்படியாக ஒரு பெரியார் அடிக்கடி கூறுவார். இந்தக் கூற்றுக்கு வெள்ளைமுத்து ஒரு உதாரணம்.

'இந்தாப்பா, எப்ப என்னைப் பாக்கணுமெண்ணு நீ நினைக்கிறியோ, அப்ப நான் வந்திடுவன். நாளைக்கு வரட்டுமா?'

'வேணுங்க சாமி...' — என்னைப் பார்த்து சாமி என்றுதான் அழைப்பான். அவனைவிட ஒரு சில வயது நான் மூத்தவன். சாமி என்று என்னை அழைப்பதை நான் விரும்பாவிட்டாலும் அவனுக்கு அதுவே விருப்பம்...... நான் இடைமறித்தும் கேளான். அன்றும் அப்படித்தான்.

'சாமி, உங்களுக்குச் சிரமம் தர நான் விரும்பல்ல. அடுத்த கிழமை முடிஞ்சா வாங்க. எனக்குக் காசு தர உங்களால முடியாட்டாலும் உங்க அன்பு கிடைச்சா அது ஒண்ணு போதுங்க'

எனது கண்களிலிருந்து நீர்த்துளிகள் பொலபொலென விழுந்தன. அவனைக் கட்டித்தழுவி அன்பை எல்லாம் கொட்டவேண்டும் போலிருந்தது. அதைச்செய்ய என்னால்முடியவில்லை. வரட்டுக் கௌரவமே என்னையும் தடுத்துவிட்டது என்ற நினைவோடு நடந்தேன்.

'சமுதாயம் மாற வேண்டும். எல்லோருக்கும் போதிய உணவும், உடையும், வசதியான இருப்பிடமும் கிடைக்க வேண்டும். இது கிடைப்பதற்கு மனிதசக்தி ஒன்று திரண்டு செயற்படவேண்டும் என்று நான் நினைத்ததற்கும் வீடு சேர்வதற்கும் சரியாகவே இருந்தது.

ஒருசில வேலைகளின் மத்தியில் வெள்ளைமுத்துவின் நினைவை நான் மறந்துவிட்டேன். என்னைக் காணும் நேரமெல்லாம் அன்பையும் ஆதரவையும் கொட்டிக் குவிக்கும் வெள்ளைமுத்துவை எதற்காக மறந்தேன் என்பதுதான் எனக்குப்புரியவில்லை.

'மனிதன் என்ருல் மறப்பவன் —பின் நினைப்பவன்' இப்படியாக ஒரு புத்தகத்தில் படித்த ஞாபகம் என்னை உறுத்தியது. 'இன்று எப்படியாவது வெள்ளைமுத்துவைப் பார்க்கத் தான்வேண்டும்' என்ற எனது மனச்சாட்சிக்குப் பணிந்தபடி திரித்துவக் கல்லூரியையும் கடந்து வெள்ளைமுத்துவின் இருப்பிடம் அடைந்தேன். அன்று பெரியவெள்ளி.

வெள்ளைமுத்து ஒரே தூக்கம். அவனது ஊன்றுகோல் நடைபாதையிலுள்ள ஒரு வீட்டின் வெளிச்சுவரில் சாத்திக்கிடக்கிறது. வேலைசெய்ய முடியாதகாதம் வந்தபோது ஊன்றுகோலின் உதவியோடுதான் அவன் நடப்பதுவழக்கம்.

பாரமான கல்லொன்று அவனது காலில் அடித்ததனுல் ஏற்பட்ட நோவுதான் ஊன்றுகோல் பாவிக்கக் காரணமாயிற்று. அந்த ஊன்றுகோலைப் பார்த்தேன்.

அவனிடமிருந்த ஒரேயொரு மாற்றுடை அந்த ஊன்றுகோலில் சுற்றிக்கிடக்கிறது. அவனதுபிச்சைப் பாத்திரமோ அவனது வலக்கரத்தின் பக்கத்தில் அதனருகில் தேநீர் குடிக்கும் பேணி. இவை நான் குந்தான் அவனது உடைமைகள்–உரிமைகள். நீட்டிநிமிர்து படுத்திருக்கிருன் ாவம்.

எனது அழுகையை என்னால் அடக்க முடியவில்லை. விம்மிவிம்மி அழவேண்டும் போலிருந்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு மெதுவாகத் தட்டினேன் வெள்ளை முத்துவை. அவன் எழும்பவில்லை. பசி வயிறு. அவனால் நன்ருகத் தூங்குகிருன்.' எனது மனச்சாட்சி கூறியதையும்மீறி, மறுபடியும் தட்டினேன். எனது கையிலிருந்த இருபது ரூபாவையும் கொடுத்து, 'நல்லாச் சாப்பிடப்பா' என்று சொல்லவே துடித்துக்கொண்டிருந்தேன். ஆனால் வெள்ளைமுத்து...?

இப்படியொரு காட்சி எந்த மூலைமுடுக்கிலும் இருக்கக் கூடாது. பிறக்கும்போது அன்பே ஆருயிரே என்று அணைத்தணைத்துக் கொஞ்சி, பாசத்தோடு பாதுகாப்பும் தந்து குழந்தைப் பருவத்தை வளர்த்தெடுக்கும் சமுதாயம் வெள்ளைமுத்துவை அனாதைக் கோலமாக்கியது ஏன்?

அவனது அவல முடிவுக்கு வழிவகுத்தது ஏன்? பிச்சை எடுக்கும் நிலைக்கு வெள்ளை முத்துவை வளரவிட்டது ஏன்? இறுதியில் அவனைக் கைவிட்டது ஏன்? இந்தக் கேள்விக்கணைகள் அனைத்தும் இன்றைய சமுதாயத்தின் அங்கமான என்னையும் தைத்து ஊறுத்துக்கொண்டேயிருந்தன.

பொலிஸின் உதவியோடு அனாதைப்பிணமாகவே போய்க்கொண்டிருக்கிறது வெள்ளைமுத்துவின் பிணம். சவக்காலையில் —அவனது குழியின்மேல் மலர்வளையம் இல்லை... மக்களின் நிழலில்லை எனது கண்ணீர் மட்டுமே சொட்டுச்சொட்டாக விழுந்து தெறித்தது. வெள்ளைமுத்து என்மீது வைத்த அளையா அன்புக்கும் மரியாதைக்கும் நான்வடித்தது ஒரு சில கண்ணீர்த்துளிகளே.

திரும்பிவரமுடியாத நீண்ட பயணம்செய்த வெள்ளை முத்துவை இன்றைக்கும் நினைத்து நினைத்து அழுகிறேன். அவனுக்குக் கொடுப்பதற்காக நான் கொண்டு சென்ற இருபதுரூபா நோட்டு ஞாபகப் பொருளாக இன்றைக்கும் என்னிடம் இருக்கும் அந்த நோட்டு என்னைப் பார்த்து ஏனோ சிரித்துக் கொண்டிருக்கிறது...? ★

அறிவியலில் தப்பிதங்கள் என்றால் என்ன?

''உண்மையாயில்லாதது ஒரு போதும் இருந்ததில்லை. உண்மையாயுள்ளது ஒரு போதும் இல்லாதிருந்ததில்லை. உண்மையை அறிய முடிந்தோர் யாவராலும் இந்த உண்மை உண்மையிலேயே உணரப்பட்டிருக்கிறது.''

- பகவத்கீதை

தவருன வாதத்தைத் 'தப்பிதம்' (Fallacy என்று கூறலாம்.

உலகின் இயல்புகள் சிக்கலானவை. எனவே நேரடியான சிந்தனையில் தவறுகள் ஏற்படும்.

'குதிரைக்கு குர்ரம் என்ருல் ஆனைக்கு அர்ரம்'

இது நேரடியான சிந்தனை.

இது தவிர அனைவருக்கும் தெரிந்த ஒரு கதையைச் சொல்லலாம்.

ஒரு மரத்தில் பத்துக் குருவிகள் இருக்கின்றன. ஒன்றை நாம் சுட்டு விடுகிறோம். மரத்தில் மீதி இருப்பது எத்தனை குருவிகள்?

பத்தில் ஒன்று செத்துவிட்டதால் மீதி இருப்பது ஒன்பது என்று சொன்னால் கணக்கில் வேண்டுமானுல் அது சரியாக இருக்கலாம்.

ஆனால் அது அறிவிற்கு ஏற்புடையதன்று. இது நேரடியான சிந்தனையினால் ஏற்படும் தவறு.

நடைமுறையில் துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் மற்றவை பறந்து ஓடி விடும் அல்லவா!

பொருளாதாரப் பாடத்தில் ஐந்து வகையான தப்பிதங்கள் தோன்றலாம். அவை யாவன:

1. முன்னது பின்னது

ஒரு நிகழ்வைத்தொடர்ந்து மற்றொரு நிகழ்வை நாம் காணலாம். உடனே அவ்விரு நிகழ்வுகளுக்கும் இடையே காரணகாரிய உறவு உண்டு எனத் தீர்மானித்தால் அது தவறு. ஓர் எளிய எடுத்துக் காட்டினைத் தரலாம்.

சேவல் கூவுகிறது. பொழுது விடிகிறது. சேவல் கூவித்தான் பொழுது விடிகிறது என நாம் முடிவுக்கு வந்தால் அது தவறல்லவா?

2. பகுதிக்கு நிகழ்வது

நுண்ணியல் பொருளாதாரத்திற்குப் (Micro - Economics) பொருந்தக்கூடிய கருத்துகள் பேரியல் பொருளாதாரத்திற்குப்(Macro-Economics) பொருந்த வேண்டிய தேவையில்லை.

தனிப்பட்ட மனிதனின் தேவைக்கோடு வழக்கமாகக் கீழிறங்கிச் செல்லும். ஆனால் சமூகத்தின் மொத்தத் தேவைக்கோடு மேல்நோக்கிச் செல்லும்.

எனவே, பகுதிக்கு நிகழ்வது முழுதுக்கும் நிகழ்வதாகாது.

பொருளாதார அறிஞர்கள் ஓர் அழகிய எடுத்துக் காட்டினைத் தருகிருர்கள். நாம் ஒரு கால் பந்தாட்டப் போட்டியைப் பார்த்துக் கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம்.

நமக்குச் சரியாக விளையாட்டைப் பார்க்க முடியவில்லை. எனவே நாம் மட்டும் எழுந்து நிற்கிறோம்.

இப்போது நம்மால் விளையாட்டை நன்ருகப் பார்க்க முடிகிறது. நம்மைப்போலவே அரங்கில் உள்ள அனைவரும் எழுந்து நின்ருல் என்ன நடக்கும் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்.

- ஜி. வில்சன் அமலராஜ் -

இன்னும் ஓர் எடுத்துக் காட்டு.

இந்த ஆண்டு நன்ருக மழை பெய்கிறது. நாமும் கடுமையாக வயலில் வேலை செய்கிறோம் என வைத்துக் கொள்வோம்.

நமக்கு இந்த ஆண்டு நல்ல வருமானம் கிடைக்குமென நாம் கருதலாம்.

ஆனல் நடப்பது என்ன? நல்ல மழை பெய்து எல்லோரும் உழைக்கும் [illegible] தில் விளைச்சல் அதிகமாகி விலைகள் வீழ்ந்து அனைவருக்கும் நஷ்டம் ஏற்படலாம்.

3 அநிச்சயம்

பொருளாதார விதிகள் நிச்சயமற்றவை. துல்லியம் குறைந்தவை. இக் கூற்று தனிப்பட்ட நபர்களின் நடவடிக்கைகளுக்குப் பொருந்தலாம்.

ஆனல் சமூகத்தின் நடவடிக்கைகளில் ஓர் ஒழுங்கும் நிச்சயத்தன்மையும் இருக்கின்றது.

ஒரு காலகட்டத்தில் தனிப்பட்ட நபர்களின் வருவாய் மற்றும் செலவினங்களில் பெரிய வேறுபாடுகள் மற்றும் ஏற்ற இறக்கங்கள் காணப்படலாம்.

ஆனல் அதே காலகட்டத்தில் சமூகத்தின் வருமானம் மற்றும் செலவினங்களில் கடுமையான வேறுபாடுகள் தோன்றுவதில்லை.

சமூகத்தின் நடவடிக்கைகளில் 'சராசரிகளின் விதி' [Law of Average] செயல்படுவதால் அநிச்சயம் குறைகிறது.

4. விருப்பு வெறுப்புகள்

பொதுவாகவே நமது சிந்தனையை நமது விருப்பு வெறுப்புகள் பாதிக்கின்றன. இதை நாம் தவிர்க்கவேண்டும்.

[illegible] பொருளாதார அமைப்பில் [illegible] தால் முதலாளித்துவ அமைப்பும் சமதர்ம அமைப்பும் தவருனவை என நாம் கருதலாம். இது கூடாது

5. நல்லதே நடக்கும்

1970களில் அமெரிக்காவில் பண வீக்கம் கடுமையாகியது. பண வீக்கத்தைக் கட்டுப்படுத்திஞல் வேலையின்மை அதிகமாகலாம்.

இந்த இரண்டு தீமைகளில் பண வீக்கம் எவ்வளவோ தேவலை என்று அமெரிக்க அரசு கருதியது.

ஆனல் சில பொருளாதார அறிஞர்கள் வேறு கருத்தை வலியுறுத்திஞர்கள். அரசு துணிச்சலுடன் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்திஞல் வேலையின்மை கூடாமலேயே விலைகளைக் குறைக்கலாம். அது முடியும், எல்லாம் நல்லபடியாகவே நடக்கும் இது அவர்களின் வாதம்.

இருந்தும் அமெரிக்க அரசு தயக்கம் காட்டியது. ஆனல் இக்கருத்தை இங்கிலாந்து அரசு ஏற்று 1979 இல் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கையை எடுத்தது.

விலைகள் வீழ்ந்தது என்னவோ உண்மைதான்.

ஆனல் அவ்வாண்டு வரலாறு காணுத அளவிற்கு வேலையின்மை அதிகரித்தது.

எனவே எப்போதும் நல்லதே நடக்கும் என்று அசட்டு நம்பிக்கையில் நாம் செயல்பட முடியாது, கூடாது. ★

பலாமரம் போன்று சேவை செய்பவர்களே இன்று தேவை

ஒரு நாட்டுக்கு நீர் வளம், நிலவளம் கூடத் தேவையில்லை. அறிவு வளம், இருந்தால் அனைத்து வளத்தையும் பெறலாம்.

எடுத்துக்காட்டாக ஜப்பான், இஸ்ரவேல் போன்ற நாட்டில் எந்தக் கனிவளமும் இல்லை. அந்நாட்டவர்கள் தம் அறிவைக்கொண்டு வியக்கத்தகும் அளவுக்கு முன்னேறியிருக்கிருர்கள்.

அதுபோல நாமும் நம் அறிவை வளர்த்து தொழில்களைப் பெருக்கும் போது, கைத்தொழிலாயினும் பொறி இயந்திரத்தொழிலாயினும் அதன் வழி தாழ்ந்து கிடக்கும் மக்களை மேம்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளோடு செய்வதுதான் முழுமையான நாட்டுப்பற்று ஆகும்.

மனிதர்களில் மூன்று பிரிவினர் உண்டு.

சிலர் பாதிரி மரம் போன்றவர்கள் ஆவர். பாதிரி மரம் மரம் நிறைய மலர்களைப் பூக்கும். ஆனல் காய் கனிகள் எதையும் உருவாக்காமல் உதிர்ந்து விடும்.

இன்னும் சிலர் ஓரளவு பேசுவார்கள் பேசியவற்றுள் நாலில் ஒரு கூருகிலும் சமுதாயத்திற்கு செய்வார்கள். இவர்கள் மாமரம் போன்றவர்கள். மாமரம் ஓரளவு பூக்கும்; அப்பூக்களில் நாலில் ஒரு பங்காவது காயாகிக் கனியாகும்;

மூன்ருமவர், வெளியாகக் கூருமல் சமுதாயத்திற்குப் பலவகை நன்மைகளைச் செய்வார்கள். அவர்கள் பலா மரம் போல்வர். பலா மரம் பூக்களைப் பூவாது. ஆனல் பிஞ்சும், காயும், கனியும் சமுதாயத்திற்கு வழங்கும்.

அதுபோல இளைஞர்கள் சமுதாயத்திற்கு ஏற்ற பணிகளைச் செய்துவர வேண்டுமென நினைவுபடுத்துகின்றேன்.

அறிவு வளத்திற்கு உடல் வளமாக இருக்கவேண்டும். அதற்கான சில கருத்துக்களைக் கூறல்நன்று. பிறந்த மனிதர் இறப்பது உறுதி. இது இயற்கையின் ஒருங்கு.

ஆனல் நாம் பழக்கவழக்கங்களால் வாழ்நாளில் முப்பது ஆண்டுகளைக் கூட்டவோ, குறைக்கவோ முடியும் என்பது இன்றைய அறிவியல் காட்டும் முடிபு ஆகும்.

வாழ்நாளைக் கூட்டுதற்கும், குறைத்தற்கும், நம்பழக்கவழக்கங்களே அடிப்படையாகும். நாம் நன்கு பசியெடுத்தபின் உணவுகொள்வது சிறப்பு. அதனல் நோயற்றவாழ்வு ஒருவருக்கு வந்துசேரும்.

தொகுப்பு:-

- க. கனகராசா -

உணவாகக் காய், இரைகளைச் சேர்த்து உண்பது உடலுக்கு நல்லது. உண்பதற்காக வாழாமல் வாழ்வதற்காக உண்பதுதான் நல்லது.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்தியது அற்றது போற்றி உணின்'

942 என்ற திருக்குறள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இக்கால இளைஞர்கள் கவர்ச்சியான பேச்சைக் குறைத்துச் சமுதாயத்திற்கு தேவையான பணிகளைச் செய்ய முன்வருமாறு கூறப்படுகிறது.

— ஆக்கம்: குறளியம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வறுமையில் சிக்கிய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி

புகழ்பெற்ற விஞ்ஞானிகளில் பலர் தங்கள் வாழ்நாளில் வறுமையின் துணையுடனேயே இருந்து வந்திருக்கின்றனர்.

ஆராய்ச்சி செய்வதற்குக் கூட அவர்களிடத்தில் போதிய கருவிகள் கிடையாது. அந்த நேரங்களிலெல்லாம் மிகவும் சோர்ந்துவிடாமல் இருக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு தங்கள் முயற்சியைத் தொடர்ந்தனர்.

டாவன் போர்ட் என்ற அறிவியல் அறிஞருக்கு மின்காந்த சாதனமொன்றை அமைக்கும்போது பட்டுத் துணி ஒன்று தேவைப்பட்டது.

கையில் காசு இல்லை. உடனே தன் மனைவியைத் தாய்வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு, வீட்டில் இருந்த மனைவியின் பட்டாடை ஒன்றை எடுத்து மின்காந்தத்தின் தாமிர கம்பிச் சுருள்மீது சுற்றி ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

பிராணவாயுவைக் கண்டுபிடித்த பிரீஸ்ட்லி என்ற அறிஞர் பொருட்களை சூடேற்றுவதற்கான சாதன வசதிகள் தம்மிடம் இல்லாத காரணத்தால் இருபுறமும் குவிந்த கண்ணாடி லென்ஸை சூரிய ஒளியில் வைத்து அதில் ஊடுருவும் சூரியஒளியைக் கொண்டு பொறுமையாக பொருட்களைச் சூடேற்றி ஆராய்ச்சி செய்தார்.

லவாய்சர் என்ற பிரெஞ்சு விஞ்ஞானியிடம் இரசாயனப் பொருட்களைக் காய்ச்சுவதற்காக வாயு மற்றும் மின்சக்தி ஏதும் இல்லை. அவற்றை தமது ஆராய்ச்சிக்கூடத்தில் அமைத்துக் கொள்வதற்கான பொருளாதார வசதி கிடையாது. ஆகவே தாம் இரசாயனப் பொருட்களைக் காய்ச்சும்போது மரக்கட்டைகளை எரியவிட்டு அந்தத் தீயில் காய்ச்சினார். ★

44 ஆண்டுகளாக நடந்த அணு பரிசோதனைகள்

1945 ஆம் ஆண்டில் இருந்து உலகில் 1,798 அணு ஆயுதங்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

இதில் அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது. மொத்தம் 932 அணு ஆயுத பரிசோதனைகளை அமெரிக்கா நடத்தியுள்ளது.

638 பரிசோதனை நடத்தி இரண்டாவது இடத்தை சோவியத் யூனியன் பெற்றிருக்கிறது.

மூன்றாவது இடத்தைப் பெற்ற பிரான்ஸ் 172 பரிசோதனைகளையும் நான்காவது இடத்தைப்பெற்ற பிரிட்டன் 41 பரிசோதனைகளையும் நடத்தின.

சீனா 34 பரிசோதனைகளையும் இந்தியா ஒன்றையும் நடத்தி உள்ளன.

அமெரிக்காவில் இன்று 13 ஆயிரத்துக்கு அதிகமான அணுப்போர்க்கருவிகள் உள்ளன. இவை நீண்டதூர ஏவுகணைகளாகும்.

சோவியத் யூனியனிடம் 11 ஆயிரத்துக்கு அதிகமான அணுப்போர்க் கருவிகள் உள்ளன. ★

நிம்மதியான உறக்கத்திற்கு உதவும் 'தலையணை'

உடல் நலத்திற்கு எத்தனைமணி நேரம் தூங்கவேண்டும்?

இது ஒவ்வொருவருக்கும் வேறுபடுறது.

விஞ்ஞானி தோமஸ் எடிஸன் தினமும் ஐந்து மணி நேரமே தூங்கினார்.

கலிபோனியோ பல்கலைக் கழகத்தில் நடத்திய ஓர் ஆராய்ச்சியி ஒரு மாணவன் தினமும் நான்கு மணி நேரம் (காலை 4-6; மாலை4-6) மட்டுமே உறங்கியபோதிலும், நல்ல உடல்நலத்துடன் இருந்ததைக் கண்டனர்.

உறக்கம் இல்லாமல் இருப்பது உடல் நலத்திற்குத் தீமை அளிக்கும் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

படுக்கைக்கு போகும்முன்னர் மன அமைதியோடும் உணர்ச்சிவசப்படாமலும் இருக்கவேண்டும்.

உறக்கத்தை வரவழைக்க ஒவ்வொருவரும் ஒரேவழியைக் கையாண்டு வெற்றிகண்டுள்ளனர்.

சார்ள்ஸ் டார்வின் தூங்கச் செல்லும்போது ஒரு 'கொம்பஸ்'ஐ (Gompass) எடுத்துச் சென்று வடக்குத் திசையில் தலையை வைத்துப் படுப்பாராம்.

இங்கிலாந்தின் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சலுக்கு இரண்டு படுக்கைகள் வேண்டும்.

ஒன்றில் படுத்து படுக்கைத் துணிகள் கசங்கிய பின்னர் மற்றப் படுக்கையில் துயில் கொள்வாராம்.

லூயி கரோல் (Louis Carroll) என்ற கணிதமேதை சிறு கணக்குகளுக்கு விடையை எண்ணிக்கொண்டே தூங்குவாராம்.

உறங்குதலை துயில் நிலை, தூக்கம் என்றழைக்கிறோம்.

உறங்குதலைப்பற்றி கணக்கிலா இலக்கியங்கள் உள்ளன.

இருப்பினும், இதுவரை சரியான வரையறை (Definition) நமக்குக் கிடைக்கவில்லை.

ஜோன் ஸ்டீன்பெக் என்ற அறிஞர் சொன்னார்; 'கள்ளமற்ற மனமே நிம்மதியான உறக்கத்திற்கு தலையணை' —என்று.

ஷேக்ஸ்பியர் 'இறத்தல் என்பது தூங்குவதுபோன்றே! ஒருக்கால் அத்தூக்கத்தில் கனவுகளும் வரலாம்' என்றார்.

வள்ளுவர், 'உறங்குவது போலும் சாக்காடு' — என்கிறார்.

எனவே நல்ல உறக்கம் உங்களைப்பொறுத்தது; குறட்டை மட்டும் விடாமல் தூங்குங்கள். ★

'தாஜ்மஹால்' அமைப்பில் 'தாஜ்கசினோ' ஹோட்டல்

நவீன தாஜ்மஹால் கட்டப்படுகிறது.

அமெரிக்காவில் நியூஜெர்ஸி மாநிலத்தில் அட்லாண்டிக் நகரில் கடற்கரை அருகே 17 ஏக்கர் நிலத்தில் நவீன தாஜ்மஹால் கட்டப்படவுள்ளது.

அமெரிக்காவின் பிரபல கோடீஸ்வரரான டொனால்ட் ட்ரம்ப் இதைக் கட்டுகிறார்.

தாஜ்மஹால் போன்று வடிவமைக்கப்பட்டு கட்டப்படுகிறது.

42 மாடிகளைக்கொண்டதாக இக்கட்டடம் அமையும். கட்டடப்பணி ஓர் ஆண்டுக்குள் முடிவடைந்துவிடும்.

இலங்கைப்பணத்தில் 3 ஆயிரத்து 500 கோடி ரூபா இதற்குச் செலவிடப்படவுள்ளது.

சூதாட்டம் உட்பட அனைத்துக் களியாட்டங்களுடன் கூடிய நவீன ஹோட்டலாக உருவாகும் இதற்கு 'தாஜ்கசினோ' என்று பெயரிடப்படும். ★

பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

மனம் புண்பட நடந்தவை பற்றி சட்டசபை பொன்விழாவில் கலைஞர்

முதலமைச்சர் எம். ஜி. ஆர். காலமானபின்னர் அ.தி.மு.க. இரண்டானது.

அதன்பின்னர் 1988 ஜனவரியில் நடந்த தமிழக சட்டசபைக் கூட்டம் பெரியஅமளி துமளியில் முடிந்தது.

பின்னர் ஆளுநர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

ஓராண்டுகாலத்தின் பின்னர் இவ்வாண்டு கடந்த ஜனவரி 21இல் சட்டசபைக்கு தேர்தல் நடத்தப்பட்டது.

கடந்த மார்ச் 25இல் மீண்டும் தமிழக சட்டசபை போர்க்களமானது.

மைக்குகள் பிடுங்கி எறியப்பட்டன. கலைஞரின் கண்ணாடி நொருக்கப்பட்டது. ஜெயலலிதாவின் துகில் உரியப்பட்டது.

இதற்குப்பின்னர் தமிழக சட்டசபைப் பொன்விழா கொண்டாடப்பட்டது.

பொன்விழா நிகழ்ச்சியில் கலைஞர் கலந்துகொண்டு பேசினார்.

அவர் சொன்னார்:

மாச்சரியங்களை மறந்து பொன்மனம் படைத்தவர்களாக இருக்கிறோம்.

எங்கும் நல்லதும் கெட்டதும் உண்டு.

மனம் புண்படும் வகையில் நிகழ்ச்சிகள் எப்போதாவது நடப்பதும் உண்டு.

வானத்தில் இருந்து எப்போதாவது மின்னல் கீற்று விழுந்து ஆபத்து விளைவதால் வானத்தை வெறுக்கமுடியாதே!

கடலில் அமுக்கம் ஏற்பட்டு புயல் உருவாகிறது என்பதற்காக கடலை வெறுக்கமுடியாதே!

அதுபோல சில நேரங்களில் மின்னல், புயல் ஏற்படுவதற்காக சட்டசபையை வெறுத்துவிடமுடியுமா?

அப்படி வெறுப்பது ஜனநாயகத்தை உதாசீனப்படுத்துவது ஆகாதா?

இப்படி கலைஞர் கேட்டார். காரணங்களைக் காட்டிப்பேசுவது கலைஞருக்கு கைவந்த கலையல்லவா! ★

அக்குபங்சர் மூலம்...

அக்குபங்சர் சிகிச்சை மூலம் குழந்தைப் பேறு கிடைக்க வாய்ப்பு உருவாகி உள்ளது.

பெண்கள் உடலில் உள்ள சில சுரப்பிகள் சரியாக வேலை செய்யாததால் நீண்ட காலமாக குழந்தைப்பேறு கிடைப்பதில்லை.

இப்படிப்பட்ட பெண்களுக்கு அக்குபங்சர் சிகிச்சை மூலம் அந்தச் சுரப்பிகளை இயங்கச்செய்து, அவர்கள் கருத்தரிக்க வைக்க முடியும் என்பது மேற்கு ஜேர்மனியில் உள்ள ஹைடல்பேர்க் பல்கலைக் கழகத்தில் நிரூபிக்கப்பட்டு உள்ளது.

24 வயதில் இருந்து 38 வயதுக்குட்பட்ட 27 பெண்கள் இந்தச் சிகிச்சை மூலம் கருத்தரித்து உள்ளதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

பொய் சிறகு கட்டிப் பறக்கும் போது 'உண்மை' என்ன செய்யும்?

பாவேந்தர் பாரதிதாஸனை மட்டம்தட்டி கவிஞர் வைரமுத்து பேசிவிட்டதாக தமிழகப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன.

அதுவும் பாரதிதாஸனின் நூற்றாண்டுவிழா ஆண்டில் பேசினால்...

தான் அப்படி பேசவில்லை என்று கவிஞர் வைரமுத்து மறுப்பு அறிக்கை ஒன்றை விடவேண்டியதாயிற்று.

'பாவேந்தரை நான்குறைத்துப் பேசியதாகச் சிலர் குறை கூறிவருகிறார்கள்.

'எந்த மேடையிலும் நான் அவரைக் குறைத்துப்பேசவே இல்லை.

'காழ்ப்புணர்ச்சி காரணமாக இல்லாத யுத்தத்தை ஏற்படுத்தப்பார்க்கிறார்கள்.

'வாழ்ந்த கவிஞனுக்குப் பெருமை சேர்ப்பதற்காக வாழும் கவிஞனுக்குச் சிறுமை சேர்க்கலாமா?

பொய்கள் செயற்கைச் சிறகு கட்டிப் பறக்கும்போது 'உண்மை' என்ன செய்யமுடியும்?

'உண்மை' நடந்து வந்துதான் தன்னை நிரூபிக்க வேண்டியிருக்கிறது—

இப்படி கவிஞர் வைரமுத்து அழாக்குறையாகக் கூறி இருக்கிறார். ★

சந்தன மரமான பாரதியார்!

பாரதிதாசன் நூற்றாண்டு விழா தற்சமயம் கொண்டாடப்படுகிறது.

பாவேந்தர் வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்கள் சில இங்கு தரப்படுகிறது.

பாரதிதாசன்

இனி வாசியுங்கள்:-

பாவேந்தர் பாரதிதாசனுக்கு பாரதியாரோடு நேர்முக அறிமுகம் ஏற்படுவதற்கு முன்பே அவ்வப்போது பாண்டிச்சேரியில் ஏதாவது இடங்களில் அவரைப் பார்த்திருக்கிறார்.

அந்த இளம் வயதில் பாரதிதாசனுக்கு பாரதியார் பற்றி முதன்முதலாக ஏற்பட்ட அபிப்பிராயம் என்ன தெரியுமா?

இவர் ரவிவர்மா வரைந்த சிவன் மாதிரி இருக்கிறார் என்பதேயாகும்.

ஃ ஃ ஃ

பாரதியார் மகாகவி என்றாலும் அவரால் நிறைய கவிஞர்கள் தோற்றுவிக்கப்படவில்லை.

அதே சமயம் பாரதிதாசன் வழிநின்று உருவான கவிஞர்கள் ஏராளம்...

இதைப்பற்றி பாரதிதாசனிடம் ஒருசமயம் கேட்டபோது அவர் தந்த பதில்:

''பாரதியார் சந்தனமரம். சுகமான மணம்தரும் அம்மரம், தன்னிலிருந்து விழுது விடுவதோடு தன்னைச் சுற்றி வேறு தருக்கள் வளர்த்திடவோ செய்வதில்லை.

''நான் ஆலமரம்... விழுதுகளும் விடுவேன். வேறுவகை தருக்களும் வளர்ந்திடச் செய்வேன்'' என்று கூறினார்.

ஃ ஃ ஃ

ஒரு சமயம் தமிழ் வார பத்திரிகை ஒன்றில் ''பாரதியாரைவிட பாரதிதாசனே சிறந்தவர்'' என்ற பொருள்பட ஒரு கட்டுரை வெளியானது.

அதை பாரதிதாசனின் அன்புக்குரி கவிஞர் ஒருவர் பார்த்து மகிழ்ந்தவராய் நேராக அவரிடம் கொண்டு காட்டியிருக்கிறார்...

பாரதியார்

அதைப் பார்த்த பாரதிதாசனோ பதறிப்போனாராம்.

''அட! இப்படியெல்லாம் எழுதக்கூடாதப்பா... பாரதினா அவர் ரொம்பப் பெரியவர்'' எனக் கூறி நெகிழ்ந்தார். ★

பூமியை விட்டு விலகிச் செல்லும் சந்திரன்

68 கோடி ஆண்டுகளுக்கு முன்னர்.........

ஒருநாள் என்பது 22 மணித்தியாலங்கள்— ஒரு வருடம் என்பது 400 நாட்களைக் கொண்டது— ஆக இருந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அரிசோனாவின் மூன்று விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியில் இது தெரியவந்துள்ளது.

அன்றில் இருந்து சந்திரன் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு சென்றி மீற்றர் என்ற வீதத்தில் பூமியைவிட்டு விலகிப் போய்க் கொண்டிருக்கிறதாம்.

தெற்கு ஆஸ்திரேலியாவில் எலாடினா உருவாக்கம் (Elatuia Fomation) எனப்படுகிற சந்தனக் கற்பாறைகளைப் பகுப்பாய்வு செய்ததன் மூலம் பூமியில் முதன்முதலாக உயிரினம் தோன்றிய காலத்தில் சூரிய மண்டலம் இருந்த நிலைமைகளைப் பற்றி அந்த விஞ்ஞானிகள் துல்லியமான ஊக முடிவுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

அடிலெய்டுக்கு அருகில் உள்ள பிளின்டர்ஸ் மலைத் தொடரில் (Flindes Range) உள்ள பிச்சிரிச்சி (Pichi Richi) கணவாயில் இந்தப் பாறைகள் துருத்திக்கொண்டு வெளித்தெரிகின்றன.

இப்பாறைகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்து பல கோடி ஆண்டுகளாக சந்திரன் பூமியில் இருந்து எந்த அளவில் விலகி வந்துள்ளது என்பதை கணக்கிட்டுள்ளனர்.

லேஸர் ஒரு 'சகலகலாவல்லவன்'

லேஸர் என்பது குறுகிய அலைநீளம் இடப்பட்ட ஒளிதான்.

ஒரேநிறமும் அலை நீளமும் கொண்ட அலைகள் ஒரேவேகத்தில் ஒரேதிசையில் ஒரே அளவுக் கட்டத்தில் (Phase) ஒன்று சேர்ந்து செறிவுமிக்க கற்றையாகப் பரவுவதுதான் லேசர்.

ஆனால் அத்தகைய ஒரு கற்றையை உண்டாக்குவது லேசான காரியமல்ல.

கைவிரல் ரேகைகளைப் படம் பிடிக்க, உலோகத் துண்டுகளைப் பற்றவைக்க, கட்டலையின் தோலை உரிக்க டெலிபோன் செய்திகளை அனுப்பவும் உதவக்கூடியது எது?

அதுதான் லேசர்.

அதுமட்டுமல்ல, பிய்ந்துபோன விழித்திரைகளை திரும்பஒட்ட, ஓர் அணுவைப் பிடித்து அசையாமல் நிறுத்த, ஏவுகணைகளைச் சுட்டுவீழ்த்த, அடைபட்ட இரத்தக் குழாய்களில் இருந்து கொழுப்புச் சிதல்களை உரித்தெடுக்கவும் லேசர் உதவுகிறது.

கடையில் வாங்கும் சாமான்களின் பட்டியலைச் சரிபார்க்கவும், ஆவணங்களை அச்சிடவும் சட்டை தைப்பதற்காகத் துணியை வெட்டித் தரவும் சுரங்கப்பாதைகள் நேர்கோட்டில் வெட்டப்படுகிறதா என்று சோதித்துக் காட்டவும் லேசர் கைகொடுக்கிறது.

ஒரு சிற்பத்தையோ ஓவியத்தையோ உருவாக்கவும் இன்னும் பற்பல சம்பந்தமில்லாத காரியங்களைச் செய்யவும் லேசரால்முடியும்.

லேசர் ஒரு 'சகல கலாவல்லவன்'— ★

கரப்பான் பூச்சியைக் கொல்ல மின்னணுப்பொறி

கரப்பான் பூச்சியைக் கொல்ல புதியவழி ஒன்றை ஆஸ்திரேலிய விவசாயி ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார்.

பிரிஸ்பேன் நகரைச்சேர்ந்த கிரேக் ஜெஃபிரேஸ் என்பவர் 5 ஆண்டுகாலம் பாடுபட்டு கரப்பான்பூச்சியைக் கொல்வதற்கு எலிப்பொறிப் பாணியில் மின்னணுப்பொறிஒன்றை உருவாக்கியுள்ளார்.

இது பார்வைக்கு காலி விடியோ கஸட் போன்று உள்ளது. இதனுடன் மின்சார புளொக்கில் செருகுவதற்கான மின்சார வயர் இணைப்பு உள்ளது.

எலியைப் பிடிக்க மசால் வடை வைப்பதுபோல இப்பொறியின் உள்ளே கரப்பான்பூச்சிகளைக் கவர்வதற்கு அவற்றுக்குப் பிடித்தமான பொருள்கள் அடங்கிய உணவு வில்லை (Tablet) ஒன்று வைக்கப்படுகிறது.

இப்பொறியில் உணவு வில்லை வைக்கப்பட்டுள்ள சிறிய பகுதியின் தரையும் கூரையும் உலோகத்தால் ஆனது.

கரப்பான் பூச்சி உணவு வில்லையைச் சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது இந்த உலோகப் பகுதியில் 11 மில்லி ஆம்ஸ் அளவில் 2,800 வோல்ட் மின்சாரம் பாய்கிறது.

இந்த மின்சார அதிர்ச்சியானது கரப்பான் பூச்சிகளைக் கொன்றுவிடும். ஆனால் இந்த மின்சார அளவு மனிதருக்கு ஆபத்தை ஏற்படுத்தாது.

உலகில் துரதிஷ்டவசமாக அணுகுண்டுப் போர் நடந்து மனித இனம் அழிந்தாலும் கரப்பான்பூச்சிகள் அழியாது ஜீவித்திருக்கும். ★

பாதாளம் வரை செல்லும் பாக்டீரியாக்கள்

தாவரங்களின் வேர்கள் பரவியிருக்கிற ஆழம்வரைதான் உயிரினங்கள் வசிக்க முடியும் என இதுவரை விஞ்ஞானிகள் கூறி வந்தனர்.

அதற்கு அவர்கள் சொன்ன காரணமும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகத் தான் இருந்தது.

சாப்பிட ஒன்றும் கிடைக்காத ஆழங்களில் உயிரினங்கள் ஏன் போய்க் குடியேற வேண்டும் என்று அவர்கள் கேட்ட கேள்வியும் நியாயமானதுதான்.

ஆனால், அமெரிக்க ஆற்றல் துறையின் சவன்னா நதி ஆய்வகத்தில் நான்கு ஆழ்துளைகள் குடையப்பட்டபோது தரைப்பரப்பில் இருந்து ஆயிரம் அடிக்குக் கீழேயும் ஏராளமான பக்டீரியா இனங்கள் வசித்து வருவதாகத் தெரிய வந்திருக்கிறது.

இவ்வாறு தரைப்பரப்பில் இருந்து ஆயிரம் அடி ஆழம் வரையில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இனங்களைச் சேர்ந்த பக்டீரியாக்களை ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட அவை எல்லாமே அறிவியல் உலகுக்கு இதுவரை அறிமுகமாகாதவையாக இருக்கின்றன.

இத்திட்டத்தின் தலைமை விஞ்ஞானியான சார்ல் பிளையர்மன்ஸ் (Car l Fliermans) என்பவர் சுமார் 1,500 இனங்களைச் சேர்ந்த பக்டீரியாக்கள் இதுவரை விவரமாகப் பரிசீலிக்கப்பட்டிருப்பதாயும்—

ஆனாலும் அவற்றில் மூன்றுதான் தெரிந்த இனங்களைச் சேர்ந்தவையாகக் காணப்படுவதாயும் கூறியிருக்கிறார். ★

44 ஆண்டுகள் 'சிறை' இருந்த கைதியின் கடிதம்

சிறையில் இருந்து ஒரு கைதி அனுப்பிய கடிதம் 44 ஆண்டுகளுக்குப் பின்னர் முகவரியாளருக்குக் கிடைத்தது.

சைபிரய்ட் என்பவர் ஜேர்மன் போர்க் கைதி. ரஷ்யாவில் மாஸ்கோ நகர சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் பொமரேனியாவில் தங்கி இருந்த தன் மனைவி ரத்தரினாவுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

ஜேர்மனியின் ஒரு மாகாணமாக இருந்த பொமரேனியாவை 1945 ஆம் ஆண்டு துவக்கத்தில் ரஷ்ய ராணுவம் ஆக்கிரமித்தது.

இதை அடுத்து நோர்டேனுக்கு குடிபெயர்ந்தார் ரத்தரினா. எனவே கடிதம் அவருக்கு போய்ச் சேரவில்லை.

காணாமற் போனவர்கள் பட்டியலில் ரத்தரினா சேர்க்கப்பட்டு அவருக்கு வந்த கடிதம், தபால்நிலையத்தில் வைக்கப்பட்டது.

கடந்த மாதம் கடைசி வாரம் பொமரேனிய அகதிகளுக்காக நடத்தப்படும் பத்திரிகையில் சைபிரய்ட்-ரத்தரினா தம்பதிகளின் 50 ஆவது திருமண ஆண்டு விழா பற்றிய செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இதைப் பார்த்த தபால் அலுவலக ஊழியர் ஒருவர் ரத்தரினாவுக்கு 44 ஆண்டுகளுக்கு முன் வந்த கடிதத்தை புதிய முகவரிக்கு அனுப்பி வைத்தார். ★

கம்பியூட்டர் நீர்ப்பாசன முறை

கால்வாய்கள் மூலமாக கம்பியூட்டர் நீர்ப்பாசன முறை தற்போது பிரான்ஸ் அமெரிக்கா ஆகிய நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் பயில்வோம்

(க. பொ. த. சாதாரண தரத்திற்குரியது)

இந்து நாகரிகம்

பல்லவப் பேரரசர் காலத்து இந்துநாகரிக வளர்ச்சி

பல்லவ மன்னர்கள் காஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டு தென்னிந்தியாவிலுள்ள தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்தனர். வலிமை மிக்க காலத்தில் அவர்களது ஆட்சி தெற்கே காவிரி நதியின் வடகரையிலிருந்து, வடக்கே ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நெல்லூர் வரை பரந்திருந்தது. கி. பி. 600 ஆம் ஆண்டிற்கும்900 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட முந்நூறு ஆண்டுகளே பொதுவாகப் பல்லவர் ஆட்சிக் காலம் என்று அழைக்கப்படுகின்றது.

சிறப்பு

தென்னக வரலாற்றில் பல்லவர்கள் பலவழிகளிலும் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர். தமிழகத்தில் முதன் முதலாக ஒரு பெரிய பேரரசை நிறுவிய பெருமை பல்லவ மரபினரையே சாரும். முதன் முதலாக அழியாத பொருள்களைக் கொண்டு இந்துக் கோவில்களை அமைத்து அவற்றில் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வித்தவர்களும் பல்லவர்களே!

மற்றும் சிற்பம், சித்திரம், இசை, நடனம் போன்ற கவின் கலைகளும் மன்னரது ஆதரவு பெற்றுச் செழித்து வளர்ந்தமையை முதன் முதலாகப் பல்லவப் பேரரசர் காலச் சான்றுகளே எமக்கு எடுத்தியம்புகின்றன.

தமிழ் மொழியில் முதன் முதலாகப் பெருந்தொகையான பக்திப்பாடல்கள் பாடப்பட்டதும் பல்லவர் காலத்தில்தான். இந்திய உபகண்டம் முழுவதிலுமே, வைதிக மதங்களுக்காக ஒரு பக்தி இயக்கம் தோன்றி தீவிரமாகச் செயற்பட்ட சிறப்பும் பல்லவர் காலத்திற்கே உரியது!

சமயநிலை

சைவசமயம் சங்ககாலம் தொடக்கம் தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றது. சங்க மருவிய காலத்தில் வடநாட்டில் இருந்து வந்து சமணரும் பௌத்தரும் தங்கள் மதங்களைத் தமிழ்நாட்டில் பரப்பத் தொடங்கினர்; அவ் அவைதிக மதங்கள் உலகியலை வெறுத்து, ஒழுக்கத்தையும் துறவறத்தையுமே வலியுறுத்தின சமண பௌத்தத்துறவிகள் நூல்கள் எழுதியும் கல்வி போதித்தும் பிரசாரம் செய்தும் மன்னரையும் மக்களையும் தம்பால் ஈர்த்தனர். மக்கள் பெருந்தொகையினராக அவைதிக மதங்களைத் தழுவத் தொடங்கினர்.

இந்த நேரத்தில் சைவசமயத்தைக் காப்பதற்குப் பெரியதொரு இயக்கம் தேவைப்பட்டது.

சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் அந்த இயக்கத்தைச் சைவ உலகுக்கு அளித்தனர். இவர்களில் குறிப்பாக நாயன்மார்கள், பக்திப்பாடல்கள், அற்புதங்கள், பக்தி இயக்கம் என்பவற்றால் மக்கள் மனதைக் கவர்ந்து, அவர்களை மீண்டும் பழைய சமயத்திற்குக் கொண்டு வந்தனர்.

பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மனைத் திருநாவுக்கரசரும், பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை ஞானசம்பந்தரும் மதம் மாற்றியதுடன்சைவம் செழித்தோங்கத்தொடங்கியது.

பக்தி இயக்கம்
பக்திப் பாடல்கள்

தமிழகத்தில் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் ஊற்றெடுக்கத் தொடங்கிய பக்தி நெறியானது, அதைத் தொடர்ந்து வந்த நூற்றுண்டுகளில் சைவம், வைஷ்ணவம் என்றும் இரு நதிகளாகப் பிரவாகித்துப் பாய்ந்தது.

தமிழ்நாட்டில் பக்தி நெறியைக் காரைக்காலம்மையாரும், முதலாழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோரும் ஆரம்பித்து வைத்தனர்.

காரைக்காலம்மையார் சிவனையும் முதலாழ்வார்கள் திருமாலையும் பாடிப் பரவினர். ஆனால் இவர்களது காலத்தில் பக்தி நெறியானது ஓர் இயக்கமாக உருவாகவில்லை. இறைவனது திருமேனியழகில் லயித்தல், அவன் புகழ் பாடுதல், அவனது திருவருளை வேண்டிப் பாடுதல் என்ற அளவில் அந்த அடியார்கள் நின்றுவிட்டனர்.

சுருக்கமாகக் கூறினல் தத்தமது வீடுபேறு கருதி இறைவனை வழிபடுவதுடன், அவர்கள் திருப்திப்பட்டுக்கொண்டனர்.

பல்லவப் பேரரசர்கள் தமிழ்நாட்டை ஆண்ட காலத்தில்தான், தமிழ்நாட்டில் பக்திப் பெருவெள்ளம் கரைபுரண்டோடத் தொடங்கியது. 6 ஆம் நூற்றுண்டின் இறுதியில் இருந்து 9 ஆம் நூற்றுண்டின் இறுதி வரையிலான காலப்பகுதியைப் 'பக்தி இலக்கியக்காலம்' என தமிழிலக்கிய வரலாற்றுசிரியர்கள் குறிப்பதிலிருந்தே இந்த உண்மையை அறியலாம்.

- அராலியூர். ந. சுந்தரம்பிள்ளை -

[பி. ஏ. (இலங்கை) கல்வியில் டிப்ளோமா]

சைவ நாயன்மார்களில் தலையாயவர்களும் 'சமயகுரவர் நால்வர்' எனப் பெருமைப்படுத்தப்பட்டவர்களுமான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் வாழ்ந்தது இக்காலப் பகுதியிலாகும்.

இவர்கள் மட்டுமல்லாது, இன்னும் பல சிவனடியார்களும் முதலாழ்வார் மூவர் தவிர்ந்த ஏனைய ஒன்பது ஆழ்வார்களும் வாழ்ந்து பக்திப் பாசுரங்கள் பாடியது இக்காலப் பகுதியிலாகும்.

காரைக்காலம்மையாருக்குப் பின் தமிழ்நாட்டில் பல நாயன்மார்களும் வைஷ்ணவ ஆழ்வார்களும் தோன்றினர். அவர்களெல்லாம் தம் இறை அனுபவங்களைப் பக்திச்சுவை தனி சொட்டச் சொட்டப் பாக்களாகப் பாடினர்.

பக்திப் பாசுரங்களைப் பாடுவதுடன் மட்டும் அவர்கள் நின்றுவிடவில்லை. ஊர்கள் தோறும் சென்று அங்கங்குள்ள கோயில்கள் மீதெல்லாம் பதிகங்கள் பாடினர்; அங்கு திருத்தொண்டு செய்தனர். இந்த நாயன்மாருடன் சென்ற மற்றச் சிவனடியார்களும் பொதுமக்களும் நாயன்மார்கள் பாடிய பாடலைத் தாமும் பாடி ஆடி இறை அனுபவத்தில் திளைத்தனர்.

இப்படியாக இந்தப் பக்தி இயக்கமானது ஒரு பொது மக்கள் தழுவிய இயக்கமாக வளரத்தொடங்கியது. இதன் ஆற்றலுக்கு முன்னிற்கமாட்டாது பௌத்த சமண மதங்கள் ஒதுங்கிக்கொண்டன. இந்தப்பக்தி இயக்கத்தினால் தமிழ்நாட்டில் வைதிக மதங்கள் மட்டுமல்லாது, மக்களது பண்பாட்டு வாழ்க்கையே ஒரு புதிய மாறுதலைக் கண்டது.

பக்தி இலக்கிய வளம் தமிழ் மொழிக்கும் பெருஞ் சிறப்பாகும். இத்துணைக் குறுகிய காலத்தில் இத்துணைப் பெருந்தொகையாக பக்தி இலக்கியங்கள் இலக்கிய வளமுள்ள வேறு எம்மொழியிலும் எழவில்லை.

இக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்களை இரண்டாக வகுக்கலாம். ஒன்று தனித் தனிப் பாடல்களில் பக்தி அனுபவங்களைக் கூறுவது. மற்றது அவற்றைப் பிரபந்தங்களிலே அமைத்துக் கூறுவது அடியார்கள், பிரபந்தங்களிலே பாத்திரங்களை அமைத்து, அப்பாத்திரங்களின் மனோபாவங்களை எடுத்துக் கூறும் வயிலாக தம்முடைய பக்தி அனுபவங்களைப் புலப்படுத்தியுள்ளனர்.

சங்ககாலத்தில் காதல் அனுபவத்தை வெளியிடப் பயன்படுத்திய அகத்திணையை இக்காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தங்கள் பக்தி அனுபவங்களை வெளியிடப் பயன்படுத்தினர்.

மனித உறவுகளை இறைவனுக்குஏற்றி அவனை அம்மையாக, அப்பனாக, காதலனாக, கணவனாக, தோழனாக, பிள்ளையாக எல்லாம் பாவனைசெய்து பாடினர்.

பதிகம்

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம் உணர்ச்சி அனுபவங்களைப் பெரும்பாலும் பதிகங்கள் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளனர். பதிகம் என்பது பத்துப் பாக்களைக் கொண்டுள்ளது. இப்பதிக அமைப்பை முதன் முதலாகக் கையாண்டவர்கள் காரைக் காலம்மையாராகும்.

அதற்குப் பின்வந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் அந்த அமைப்பை வேண்டியவாறு செப்பஞ்செய்து தம் உள்ளக் கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் தெளிவாகப் புலப்படுத்தற்குரிய கருவியாக ஆக்கிக்கொண்டனர்.

அடியார்கள் தாம் புலப்படுத்துவதற்கு எடுத்துக் கொண்ட பொருளையும் அதனோடு தொடர்புடைய உணர்ச்சி முதலியவற்றையும் வகுத்து, அவற்றை வளர்ச்சிக் கிரமத்தில் அமைத்துக் காட்டுவதற்குப் பதிகமுறையை பெரிதும் பொருத்தமுடைய தொன்றாகக் கருதினர்.

ஒருபதிகத்திலுள்ள செய்யுள்கள் யாவும் ஒரே ஓசை உடையன. அந்த ஓசை படிப்படியாக வளர்ந்து செல்லும். அதுபோலவே முதலாவது செய்யுளில் ஆரம்பிக்கும் உணர்ச்சி இன்பம் சிறிது சிறிதாக வளர்ந்து, ஏழாவது அல்லது எட்டாவது செய்யுளில் உச்சநிலை அடைந்து, அதன்பின் அது குறையத் தொடங்கிப் பத்தாவது செய்யுளில் முடிவடைகிறது.

பதிகம் பக்தி அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற கருவியாக அமைந்ததுடன், அக்கால மக்களைப் பக்தி வாழ்க்கையில் ஈடுபடுத்துவதற்கும் ஏற்ற கருவியாக அமைந்தது.

மக்கள் ஒருங்குகூடி ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் திருக்கோயிலை வலம்வருதல் அக்காலத்துக் கோயில் வழிபாட்டுமுறையாக இருந்தது. அங்ஙனம் மக்கள் வலம்வரும் பொழுது பாடுவதற்கேற்ற அளவு, பொருள் உணர்ச்சி, முதலியவற்றைக்கொண்டுள்ளதாகவும் பதிகம் அமைந்திருந்தது.

இறைவன்

சாதாரண மக்கள் இறைவனை இலகுவாக மனதில் இருத்தித் தியானிக்க வசதியாக, நாயன்மார்களும் ஆழ்வார்களும் குணம்குறி இல்லாத இறைவனுக்கு குணங்குறிகள் கொடுத்துப் பாடத் தொடங்கினர்.

'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்' என்று தொடங்கும் அப்பரது திருத்தாண்டகமும் 'தோடுடையசெவியன்' என்ற சம்பந்தரது தேவாரமும் 'பச்சை மாமலை போல் மேனி, பவளவாய் கமலச் செங்கண்' என்று திருமாலின் மேனி அழகினைப் பாடும் பெரியாழ்வார் பாடலும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

இறைவனுக்கு உருவம் கற்பித்துப் பாடும் பொழுது, வேதபுராண இதிகாசங்களில் வருகின்ற கருத்துக்கள் கதைகளைத் தழுவியே பாடல்களைப் பாடினர். பாசுரங்களைப் பாடுவதோடு அமையாது, இறைவன் திருமேனி அழகில் தாமும் லயித்து நின்று, அந்த அழகினைக் காண்பவற்காகவே தாம் உயிர் வாழ்ந்திருப்பது என்று கூறியுள்ளனர். மக்கள் மனதை இறைவன்பால் ஈர்ப்பதற்கும், வைதிக மதங்களின் வளர்ச்சிக்கும் இது பெரிதும் உதவிற்று.

(வளரும்)

மகப்பேறு மருத்துவம்

முதன் முதலில் கர்ப்பமாகியுள்ள பெண்கள், பிரசவ வலியைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம்.

உண்மையான பிரசவவலி அரைமணி நேரத்துக்கு ஒரு முறையோ அல்லது சற்றுக் கூடுதல், குறைவான அளவுப் படியோ இருக்கும்.

வலிதொடர்ந்து இருக்காது என்பது நினைவில்கொள்ள வேண்டிய முக்கியமான விஷயமாகும்.

வலி விட்டுவிட்டு தோன்றும். வலி ஏற்படும்போது, வயிறு இறுகியநிலையில் கெட்டிப்பட்டதுபோல காட்சி தரும்.

வலி நின்றதும், வயிறு தளர்ச்சி பெற்று, சௌகரியமாக இருப்பதுபோலத்தோன்றும்.

இந்தமாதிரியான அறிகுறிகளுக்கு முரண்பட்டுத் தோன்றுவதுதான் பொய்வலியாகும்.

பொய்வலியானது உரிய பிரசவ காலத்துக்கு முன்னதாகத் தோன்றும். இம் மாதிரியான வலிக்குப் பொதுவாக மலச்சிக்கல் காரணமாக இருப்பதுண்டு.

கர்பிணி மருத்துவ மனையில் இருந்தால்'எனிமா'கொடுத்து வலியை சமப்படுத்துவார்கள்.

உண்மையான பிரசவ வலி, இடுப்புப் பகுதியில்தான் தோன்றும்; பொய்வலியோ, வயிற்றுப் பகுதியில் ஏற்படும். பொய் வலி குறிப்பிட்டகாலப் பகுதியில் இல்லாமல் தாறுமாருக இருக்கும்.

வலி ஏற்படும்போது வயிறு இறுக்கம் அடைவது உண்மை வலியின் நியதி, பொய் வலியின்போது இந்த அறிகுறி தோன்றுது.

இம்மாதிரியான அறிகுறிகளைக் கவனத்தில்கொண்டு, உண்மையான வலியை நிச்சயமாக நிர்ணயித்து தக்க நேரத்தில் கர்ப்பிணிகளுக்கு மருத்துவ வசதி கிடைக்குமாறு ஏற்பாடுசெய்யவேண்டும்.

பிரசவத்திற்குப்பிறகு அவசரப்பட்டு, உடனே கெட்டியான உணவு வகைகளைக் கொடுத்துவிடக்கூடாது. திரவ ஆகாரம் கொடுப்பதுதான் நலம்.

பிரசவத்திற்குபிறகு தாயின் உடலில் ஜீரணசக்தி மிகவும் பலவீனமானநிலையில் இருக்கும்.

அந்தநிலையில் கடுமையான உணவுவகைகளைக் கொடுத்தால் அது அவளுடைய உடல்நிலையை மிகமோசமாக்கிவிடும்.

பிரசவமான சிலநாட்கள் வரை தாயின் வயிறு எந்த அளவுக்கு மென்மையாகவும், கனமில்லாமலும் இருக்கின்றதோ அந்த அளவுக்கு தாய்க்கு உடல்நலம் மிகவும் சரியாக இருக்கும். எந்த நோயும் அவளை அண்டாது.

பிரசவத்திற்குப் பிறகு சிறுநீர் தாராளமாக இறங்க வேண்டும். இவ்விஷயத்தில் எவ்விதச் சிக்கலும் இன்றி பார்த்துக்கொள்ளவேண்டும்.

தாயின் உடலுக்குள் பல்வேறு வகையிலும் தேங்கியிருக்கும் அசுத்தநச்சுப் பொருள்கள் சிறுநீர் மூலமாகத்தான் வெளியேறவேண்டும்.

தவிர இரத்தம் வளம்பெறவும், சுத்தமடையவும், சிறுநீர் தாராளமாகக் கழிவது அவசியமாகும்.

எனவே, டாக்டர் அனுமதிக்கும் திரவ உணவுப் பொருள்களையே தாய்க்கு அளிக்கவேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் இருப்பது முக்கியம். பிரசவித்த பெண்ணுக்கு நீர்ச்சத்து மிகவும் அவசியம்.

— லதா வசந்தமூர்த்தி

அன்றாட வாழ்வில்....

வாழைத் தண்டுப் பொரியல்

வாழைத்தண்டை மெல்லிய வளையமாக நறுக்கி உப்புப் போட்ட மோரில் ஊற வைக்கவும்.

பிறகு வெயிலில் காய வைத்து, எண்ணெயில் பொரித்தால் நன்ருக இருக்கும். உடம்புக்கும் மிகவும் நல்லது.

- லட்சுமி -

கீரையின் மகத்துவம்

ஆரஞ்சு, மஞ்சள், பச்சை நிறத் தழைகள் கொண்ட காய்கறிகளை உண்பவர்களுக்கு நுரையீரல் புற்றுநோய் பெருமளவில் வருவதில்லை.

இப்படி அமெரிக்காவில் உள்ள ஹாப்கின்ஸ் ஆராய்ச்சி நிலையம் செய்தி வெளியிட்டுள்ளது. கீரையின் மகத்துவம் புரிகிறதா...?

- ருக்மணி -

விஷம் இறங்க . . .

வீட்டில் யாருமே இல்லத நேரம் உங்களுக்கோ அல்லது உங்கள் குழந்தை, கணவருக்கு தேள் கொட்டிவிட்டால் அழுது ஒப்பாரி வைத்து நேரத்தைக் கடத்தாதீர்கள்.

துளசி இலையில் ஒரு பிடி எடுத்து மென்று சாப்பிடக் கொடுத்தால் தேள் கொட்டிய விஷம் இறங்கிவிடும்.

கழுத்து அழகு பெற

குறுகலான கழுத்தை உடைய பெண்கள் வட்ட வடிவமான கழுத்து உள்ள பிளவுசை அணிந்தால் அழகாக இருக்காது. 'வி' கழுத்து பிளவுஸ் அணிந்தால் தான் அழகாக இருக்கும்.

கழுத்து பிளவுசின் பட்டை அகலமாக இல்லாமல் மெல்லியதாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

- சுமங்கலா -

மஞ்சள் காமாலைக்கு

நெல்லிக்காய்ச் சாறுடன் தேன்கலந்து மஞ்சள் காமாலை நோய்க்குக் கொடுக்கலாம்.

பால் சுரக்க . . .

பால் வற்றிய தாய்மார்கள் பசளிக்கீரையைத் தொடர்ந்து உணவுடன் சேர்த்து உண்ண மீண்டும் பால் சுரக்கும்.

களிம்பைப் போக்க

செப்புப் பாத்திரத்தில் ஏறிய களிம்பைப் போக்க ஒரு துண்டு எலுமிச்சம் கீற்றில் உப்பைத் தொட்டுத் தேய்க்க வேண்டும்.

- சபிதா ஜோசப் -

பெண்ணே . . .

பெண்ணே...! உன்னால் உலகத்துக்கு நன்மை உண்டாக வேண்டுமானால் நீ ஆண் செய்யும் காரியங்களைச் செய்யாமல், ஆண் செய்ய முடியாத காரியங்களையே செய்ய வேண்டும்.

தெய்வ பக்தியில் பெண்ணே ஆணைவிட உயர்ந்தவள். பொறுமையாகவும், கம்பீரமாகவும் துன்பங்களைச் சகிப்பது பெண் குலத்தின் தனிக் குணமாகும்.

- மகாத்மா காந்தி -

எனக்கு இப்படியொரு நல்ல மகனா?

ரகுவின் அம்மாவும் அப்பாவும், ரொம்பவும் கவலைப் பட்டார்கள். கொஞ்ச நாளாகத்தான் ரகு இப்படி நடந்து கொள்கிருன். ரகுவிற்குப் பிறகு இன்னும் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். குடும்பத்தை மிகவும் கஷ்டப்பட்டு ஓட்டிக்கொண்டிருந்தார் அவனது அப்பா. ரகுவை சிரமப்பட்டு ஏழாம் வகுப்பு வரை படிக்க வைத்துவிட்டார் இப்பொழுது எட்டாம் வகுப்பிலும் அங்கு இங்கு என்று கடனை வாங்கிச் சேர்த்து விட்டார்.

ஆனல் கடந்த ஒரு மாதமாகவே தினமும் விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் 'படிப்பதற்கு நண்பன் வீட்டுக்குப் போகிறேன்' என்று சொல்லி ஒரு புத்தகத்துடன் கிளம்பி விடுகிருன். பிறகு ஏழு மணிக்குத்தான் வீட்டுக்குத்திரும்புகிருன். உடனே குளித்து முழுகி விட்டு பள்ளிக்குக் கிளம்பி விடுகிருன். மாலை நேரத்திலும் இரவிலும் படிப்பதோடு சரி!

நண்பன் வீட்டுக்கு படிக்கத்தான் போகிருனு? இல்லை வேறு ஏதாவது தப்புத் தண்டா... இல்லை காலையிலேயே ஊர் சுற்றப் போகிருனு?

தினமும் மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தார் அவன் அப்பா.

அவன் நன்ருகப் படித்துத் தனக்குச் சம்பாதித்துப் போடுவான் என்று மிகவும் நம்பியிருக்கிருர். ஆனல் அவன் இப்படி நடந்து கொள்வது...?

அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒரு தடவை குமார் வீட்டிலேயும் போய் கேட்டார். ஆனல் அவன் அங்கு வரவே இல்லை என்றதும் இவருக்கு இன்னும் கவலை அதிகமாயிற்று.

மற்றும் இதைப் பற்றி விசாரித்தில் ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லி மழுப்பி விட்டான்.

வழக்கம்போல் அதிகாலை ஐந்து மணிக்கு வெளியே போன ரகு ஏழு மணிக்கு வீட்டுக்குள் வந்தான். அவனைத் தொடர்ந்தே ஒரு பெரிய வரும் உள்ளே நுழைந்தார்.

வந்தவர் பதற்றமாகக் கத்தினுர்.

'உங்க பையன் என்ன காரியம் பண்ணிட்டு வந்திக்கான்னு தெரியுமா?'

சத்தத்தைக் கேட்டு ரகுவின் அம்மா, அப்பா குழந்தைகள் அனைவரும் போய் பெரியவரைச் சூழ்ந்து கொண்டனர்.

ரகு அதிர்ந்தான்!

'என்னய்யா சொல்றீங்க?' ரகு அப்பா கேட்டார்.

'என் கடிகாரத்தை இந்தப் பயல் திருடிக்கிட்டு வந்துட்டான்' என்று பெரியவர் சொன்னதும் ரொம்பவும் பதறிப் போனான் ரகு.

'ஐய்யய்யோ...! இவரை எனக்குத் தெரியவே தெரியாது. கடிகாரத்தைப்பத்தியும் எனக்கு எதுவும் தெரியாது!'

'ஸார்... உங்க பையன் பொய் சொல்றுன்...! பின்னே இந்தக் காலை நேரத்துல என் வீட்டுப் பக்கமா இவனுக்கு என்ன வேலை...?'

'சொல்லேண்டா'

அவன் அப்பா.

அ...ப்...பா அது... வ...ந்து நா... ஆ..ஆ...ன்... இவரோட கடிகாரத்தை ...'

'ம் சொல்லு...'

'எடுக்கலைப்பா!'

'பின்னே இந்த அதிகாலை வேளையிலே உனக்கு என்ன அங்கே வேலை...?' பெரியவர்.

திருதிருவென்று விழித்த ரகு மெல்லக் கண்கலங்கினுன்.

'நம்ம குடும்பம் ரொம்பக் கஷ்டப்படுது. அதோட எனக்கு நோட்டு, புத்தகம் வாங்கப் பணத்துக்கு நீங்க ரொம்பவும் சிரமப்படுறீங்க! அதனுலதான் நான் யாருக்கும் தெரியாம ஒரு பேப்பர் ஏஜெண்டைப் போய்ப் பார்த்து விவரத்தைச் சொல்லி வேலை கேட்டேன். அவரும் இரக்கப்பட்டு வேலை கொடுத்தார். காலையிலே 5 மணியிலிருந்து 7 மணிக்குள்ள எல்லா வீட்டுக்கும் பேப்பர் போட்டா மாதம் 150 ரூபாய் தர்றேன்னுரு! கம்பெனி சைக்கிளையும் கொடுத்தாரு...! இதெல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சா திட்டுவீங்களோன்னுதான் நான் வேற ஏரியா போய் பேப்பர் போட்டேன்...! தப்புன்னு என்னை மன்னிச்சிடுங்கப்பா' என்று அழுது கொண்டே அப்பா காலில் விழுந்தான் ரகு.



அவன் சொன்னதைக் கேட்டு ஒரு நிமிடம் அனைவருமே ஸ்தம்பித்துப் போனுர்கள். அதன் பிறகு அவன் அப்பா கேட்டார்.

'அது சரி சைக்கிள் எங்கே?,

'அதை கம்பெனியிலேயே வெச்சுடணும்! மறு நாள் போகும்போது எடுத்துக்கணும்! அதோட அவர் உங்க பழைய நண்பராம். அதான் வேலைக்குச் சேர்த்துக்கிட்டேன்னு சொன்னுருப்பா!'

'எனக்கு இப்படியொரு நல்ல மகனு? ஒவ்வொரு குடும்பத்திலும் இப்படி மகன்கள் பிறந்தால்... எல்லோர் வீடும் இல்லை! நாடே முன்னுக்கு வந்துடும்...! இதற்கெல்லாம் ரொம்பவும் கொடுத்து வைக்க வேண்டும்!

நான் கொடுத்து வைத்தவன்தான்!'

பயந்து கொண்டே காலின் அருகே இருந்தவனை மெல்லத் தூக்கி அன்புடன் அணைத்து அவன் அப்பா விஷயத்தைச் சொன்னுர்.

'உன்னைப் பற்றி உண்மையைத் தெரிஞ்சுக்கத்தான் நான் இந்தப் பெரியவரை வெச்சு ஒரு நாடகம் ஆடினேன்! பயப்படாதே! ★

நீ நடந்து காட்டு

நாளைவரும் பொன்னுலகம்
நமதெனவே பாட்டிசைக்கும்
வேளையிது ஏற்றிடுநற் செய்கை — தீரர்
வேண்டுவதோ அன்புலவும் பொய்கை.

பொய்களவு தீமையொழி
பொன்குவியும் புகழ்சிறக்கும்
துய்யவழி நாடிநடை போடு — வாழ்வு
துலங்கிடவே நல்லறங்கள் தேடு.

வஞ்சகமும் அர்த்தமற்ற
வார்த்தைகளும் நீயகற்று
நெஞ்சினிக்க நேர்மையறி ஆற்று — இறை
நினைவோங்கத் தூயபணி ஆற்று.

உன்னடிகள் பின்தொடரும்
உன்னுதிரப் பூமழலை
மன்னுலகை ஆளவழி காட்டு — வாழும்
மகிமையருள் தியாகவொளி கூட்டு.

முன்நடக்கும் நீபிசகின்
முழுஉலகும் பாழ்படுமே
மின்விளக்கு நீநடந்து காட்டு — இந்த
மேதினியே பின்வரக்கை கூட்டு.

—செ. மகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாசம் என்ருல் இந்தியாவில்இரண்டுதான்–இராமாயணம், மகாபாரதம்.

காப்பியம் என்ருல் தமிழில் ஐந்துதான்– ஐம்பெரும்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை,சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி.

இதிகாசங்கள் இரண்டைத் தவிர வேறு கிடையாது. காப்பியங்கள் ஐந்தைத் தவிர வேறு இருந்தாலும் ஐந்தின் அந்தஸ்து பிறவற்றிற்கு கிடையாது.

அப்படி இதுவரை உலகில் வெளிவந்துள்ள எல்லா மொழித் திரைப்படங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, ஒரே ஒரு திரைப்படத்தை மட்டும் தனிப்படுத்தி உயர்த்திச்சொல்ல வேண்டுமானுல்?

இதோ அப்படி ஒருதிரைப்படம் வந்திருக்கிறது. அது தான் 'மகாத்மா' என்கிற படம்.

இந்திய சுதந்திரப்போராட்டமே இதன் கதை. மகாத்மாவே இதன் கதாநாயகர்!

இந்தப் படத்திலும் டிஷ்யூம் டிஷ்யூம் சண்டைகள் உண்டு. ஆனுல் இதில் வில்லன்கள்தான் அடிப்பார்கள். கதாநாயகர் திருப்பி அடிக்க மாட்டார்.

ஆனுலும் கதாநாயகர் கடைசியில் ஜெயித்துவிடுவார். எனினும் இது கதை அல்ல, உண்மை.

'மகாத்மா'வின் திரைப்படம் தயாரிக்க உதவிய பிரிட்டிஷ் ரகசிய உளவாளிகள்

இற்றைக்குச் சரியாக 59 ஆண்டுகளுக்கு முன்பு— 12 – 03 – 1930 அன்று காலை 10 மணிக்கு மகாத்மா காந்தி தண்டி யாத்திரையைத் தொடங்கினுர்.

அந்த நிகழ்ச்சியைப் பிரதானத் தொடக்க அம்சமாகக்கொண்டு 'மகாத்மா' என்ற திரைப்படம் ஆரம்பமாகிறது.

இதுபற்றிய சிறப்புக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

படம் டிராஜடியா, காமடியா?' டிராஜடிதான். கோட்ஸேயின் துப்பாக்கியால் சுடப்பட்டுக் கதாநாயகர் கடைசியில் இறந்துவிடுகிருரே?

காந்தியே நடிக்கிருர்

அதுசரி, உலகின் எல்லாத் திரைப்படங்களையும் விடத் தனிமைப்படுத்தி உயர்த்திச் சொல்லும்படியாக இதில் அப்படி என்ன சிறப்பு?

காந்தியாக பென் கிங்ஸ்லி அல்ல, காந்தியாக காந்தியே இதில் நடித்திருக்கிருர்.

'காந்தி நடித்திருக்கிருர்' என்று சொல்லலாமோ? தப்பு. அப்படிச் சொல்லலாகாது. எது குறித்தும் நடிப்பதும் வேஷம் போடுவதும் காந்திக்குப் பிடிக்காத செயல்களல்லவா? 'காந்தியாக காந்தியே வாழ்ந்திருக்கிருர்' என்றே சொல்லவேண்டும்.

'புத்தருக்கும், யேசுநாதருக்கும், நபிகள் நாயகத்திற்கும் கிடைக்காத பெருமை காந்திக்குக் கிடைத்துவிட்டது. அந்த மகான்கள் வாழ்ந்த காலத்தில் இந்த அரிய திரைப்படக்கலையும் இந்தப் படத்தை உருவாக்கிய கலைஞர்களும் இல்லாமல் போய்விட்டார்களே' என்று கே. ஏ. அப்பாஸ் இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு உருகி உருகிச் சொன்னது இதுகுறித்துத்தான்.

பரமஹம்சர்

ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு மகேந்திரர் என்ருெரு சீடர் இருந்தார். பரமஹம்சர் தண்ணீர்ச்செம்பை எடுத்

மகாத்மா காந்தி

துக்கொண்டு சவுக்குத்தோப்புக்குப்போனது முதல் எல்லா விவரங்களையும் அவர் தமது நாட்குறிப்பில் குறித்துவைத்தார்.

பரமஹம்ஸரின் காலம் முடிந்தபிறகு, விவேகானந்தரின் வேண்டுகோளின்படி மகேந்திரர், தம் நாட்குறிப்பை மூன்று வொல்யூம்கள் கொண்டதொரு பெரிய நூலாக உருவாக்கினுர்.

பரமஹம்சரின் அன்பர்களுக்கு அவரது அன்ருட வாழ்க்கைநெறி அந்த நூல் மூலம் தெரியும் வாய்ப்புக் கிடைத்தது.

ஆனுலும் பரமஹம்சரின் புகைப்படம்தான் கிடைத்ததே தவிர, அவர் வாழ்வை அவரின் சமகாலத்தில் யாரும் திரைப்படமாக எடுக்கவில்லை.

எனவே பரமஹம்சரை நேரில் காணும் வாய்ப்பை இழந்த இன்றைய தலைமுறையினருக்குச் சற்றேனும் ஆறுதல் கிட்ட மார்க்கமேதும் இல்லை.

பிரிட்டிஷ் உளவாளிகள்

ஆனுல் காந்தி விஷயம் அப்படியல்ல. பிரிட்டிஷ் ஆட்சியின் ரகசிய உளவாளிகள் தயவால் காந்தி படமாக்கப் பட்டுவிட்டார்.

மக்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏன், காந்தி ஓர் உலகளாவிய மனிதர் என்ற வகையில் இப்படியொரு திரைப்படம் கிடைக்க உலகமே அதிஷ்டம் செய்திருக்கிறது.

காந்தி என்ருெரு மனிதர் வாழ்ந்தார் என்பதற்கு இந்தப்படமே சாட்சி; அத்தாட்சி. இல்லாவிட்டால் அவரின் வாழ்க்கைச் சம்பவங்களைப் பார்த்து மக்கள் காந்தியையும் தெய்வமாக்கிவிடுவார்கள்.

காந்தி வாழ்ந்த வாழ்வைத் திரைப்படமாக் கண்ணுக்குக் கண் காணும்போதுதான், காந்தியைப் போல், காந்தி நெறியில் நாமும் வாழலாம் என்ற வேட்கை தோன்றும்.

வேட்கை 'தோன்றும்' அல்ல; 'தோன்றிவிட்டது'. 1988 மார்ச் 31 ஆம் திகதி மதுரைச் சிறையில் கைதிகளுக்காக இப்படத்தை திரையிட்டபோது, பார்த்து மன முருகிய கைதிகள், ஏப்ரல் 5 ஆம் திகதி தண்டியாத்திரை முடிந்த தினம் உண்ணுவிரதமிருக்க முடிவுசெய்தார்கள்.

பின்னணி என்ன?

இப்படியொரு பாதிப்பை ஏற்படுத்தும் அளவு அபூர்வமான இப்படத்தின் பின்னணி என்ன? இது தயாரிக்கப்பட்ட விதம் எப்படி?

தண்டியாத்திரையின்போது காந்தி ஒரு பெரிய சக்தியாக உருவாகிவிட்டார் என்பதை அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்து கொண்டது.

காந்தி என்கிற மெஸ்மரிஸம் இந்திய உள்ளங்களை ஒட்டு மொத்தமாய் வசிகரிக்கும் அதிசயத்தை இரகசிய உளவாளிகளை வைத்துக் கண்காணித்தது. அந்த உளவாளிகள் பிரிட்டிஷாரின் கட்டளையின்படி கோட்ஸே காந்தியை 'ஷூட்' பண்ணுவதற்கும் முன்பாகவே இப்படிப் படம்படமாக அவரை 'ஷூட்' பண்ணித் தள்ளிவிட்டார்கள்.

இந்தப் படங்களெல்லாம் லண்டனில், யாருமறியாத ஸ்டுடியோ ஒன்றில் கேட்பாரற்றுக் காற்று மேய்ந்து கிடந்தன.

தற்செயலாக அவற்றை ஒருவர் காண நேர்ந்தது. அவர்தான் புகழ்பெற்ற இயக்குநர் டாக்டர் வில் மண்ட் ப்ளு.

டென் கமாண்மென்ட்ஸ், கோவாடிஸ் ஆகிய படங்களை இயக்கியவர் இவர்.

அபூர்வமான புதையல் ஒன்றைக் கண்ட ஆனந்தம் அவருக்கு. மகாத்மாமேல் மிகுந்த மரியாதை கொண்ட அவர் கண்பனிக்க அந்தப் படங்களைச் சேகரித்தார். செம்மைப்படுத்திஞர். எடிட் செய்தார். தொகுத்தார். அளவற்ற சிரத்தையோடு கடும் உழைப்பின் பேரில் டைரக்ட் செய்து மகாத்மா படத்தை உருவாக்கிவிட்டார். (ஜவஹர்லால்நேரு இந்தப் படத் தயாரிப்புக்கு ஆறு கோடி ரூபாய் மானியம் கொடுத்திருக்கிருர்.)

'ரே' யின் பாராட்டு

இந்தப் படத்தின் டைரக்ஷன் எந்த அளவு உயர்வானது என்ருல் 'இது வெறும் டைக்ரஷனல்ல, தம்மைத் தாமே அர்ப்பணித்துக் கொண்டு செய்யப்பட்டுள்ள ஒரு மாபெரும் புனிதப்பணி' என்று சத்யஜித்ரேயே பாராட்டுமளவு சிறந்தது.

படம் அறுபதுகளின் தொடக்கத்தில் தயாரிக்கப் பட்டது.

இப்போதுதான் ஸ்வச்சித் என்னும் நற்சிந்தனை இயக்கத்தின் சார்பில் இப்படத்தைத் தமிழகமெங்கும் காண்பிக்க முயற்சி நடந்து வருகிறது.

சுமார் இரண்டரை மணி நேரம் ஓடும் படத்தில் இது ஓர் உண்மைப் படம் என்பதாலேயே நேர்ந்த சில இயல்புகள் உண்டு.

தண்டி யாத்திரை

அதாவது காந்தியின் தண்டி யாத்திரையின்போது தான் பிரிட்டிஷாரின் கவனம் அவர் மேல் தீவிரம் கொண்டது. ஆகையால் அதற்கு முந்திய காந்தி வாழ்வின் நிகழ்ச்சிகள் எதுவும் இப்படத்தில் கிடையாது. (எனினும் அவைகள் சிற்சில புகைப் படங்களின் உதவியுடன் சுருக்கத் தகவல்களாகச் சொல்லப்படுகின்றன.]

இரகசிய ஏஜென்ட்டுகளே இப்படத்தின் காமிராக்காரர்கள். அவர்கள் எடுத்த படம் தான் வழங்கப்படுகின்றது.

அவர்கள் இன்றைய திரைப் படத்துறையின் கலாநுணுக்கங்களையெல்லாம் கற்றுத் துறை போனவர்களல்ல. அவர்கள் நோக்கம் திரைப் படம் தயாரிப்பதுமல்ல.

எனினும் டென் கமாண்ட்மென்ட்ஸ் டைரக்டரின் மேதாவிக்கை செய்திருக்கும் 'டச்அப்'கள் உண்டே. அது செய்திருக்கும் ஜாலங்கள் அதிகம்.

காந்தி எந்த எளிமையை விரும்பினுரோ அதே எளிமையான முறையில் இந்தப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

வேண்டாத ஆடம்பரங்கள் எதுவுமே படத்தில் இல்லை. மிகுந்த மரியாதையுடனும், பொறுப்புடனும், கண்ணியத்துடனும் எல்லாவற்றையும்விட அதிகமாக சத்தியத் தேடலையே நோக்கமாகக் கொண்டும் டைரக்டர் இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிருர் என்பதை ஒவ்வொரு ஃபிரேமும் சொல்லாமல் சொல்கிறது.

'ஆதன்ட்டிசிடி'யின் பொருட்டு மகாத்மா, சரோஜினிதேவி, ஜவஹர்லால் நேரு போன்ருேரின் ஒரிஜினல் குரல்கள் ஆங்காங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. அல்லாத இடங்களில் பள்ளிப் பிள்ளைகளுக்கும் புரியும்படியான எளிய ஆங்கிலத்தில் பரிவு ததும்பும் கௌரவம் செறிந்த மெல்வில்லி டி

கண்ணதாசன்

மெல்லோவின் இனிய குரலில் பின்னணி வர்ணனை வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழில் கண்ணதாசன் வர்ணனை

(தமிழிலும் கவிஞர் கண்ணதாசன் குரலிலான வர்ணனை ஒன்று தயாராக இருக்கிறதாம். அதை விரைவில் படத்துடன் இணைக்க உடனடி முயற்சி எடுக்கப்படுகிறது.)

காந்தியின் பல்வேறு பண்புகள் இந்தப் படத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு விடுகின்றன. அவரின் ஆன்மீக நாட்டமும் அதன் காரணமாக அவருக்கு மக்களிடையே கிடைத்த செல்வாக்கும் பளிச் சென்று துலங்குகின்றன.

காந்தி கலந்துகொண்ட கூட்டமொன்றில் ஒருவர் பிரார்த்தனை கீதம் பாட, லட்சக்கணக்கான மக்கள் கைகளைத் தலைக்கு மேலே உயர்த்தி அதற்கு ஏற்ப ஒருசேரத் தாளமிடும் அபூர்வக் காட்சி, மதுரை மீனுட்சியம்மன் கோயிலில் ஹரிஜனங்களின் பொருட்டாக மகாத்மா நிகழ்த்திய ஆலயப் பிரவேசம் என்று இப்படிப் பல.

சில காட்சிகளில் மகாத்மா முகத்தில் தென்படும் தெய்வீக சோபை, படம் முடிந்த பின்னரும் கூட மனக்கண்ணில் ஜொலிக்கிறது. ஓரிடத்தில், கைத்தடி, துறவிகள் வைத்திருக்கும் தண்டுபோல் மூலையில் சார்த்தப்பட்டிருக்க மோகன முறுவலுடன் மகாத்மா அமர்ந்திருக்கும் கோலம் முற்றும் துறந்த முனிவர் போல் பரிமாணம் காட்டி பார்ப்பார் விழிகளை அகல வைக்கிறது.

சமஸ்கிருத அறிஞர் பஞ்சுரே சாஸ்திரிக்குத் தொழுநோய் கண்டபோது, தமது இயற்கை வைத்திய நிலையத்தில் மகாத்மாவே அவருக்கு மசாஜ் செய்து வந்தார் என்ற குறிப்பு கல்நெஞ்சையும் கனிவிக்கும்.

சென்னையிலிருந்து தி. மேனகன்

பல கைகள் பசித்த வயிற்றுடன் வேலை தேடித் தவிக்கையில், கைகளுக்குப் பதிலாகக் கருவிகள் ஆக்கிரமிக்கும் அதீத விஞ்ஞானத்தை மகாத்மா ஒதுக்கிஞரேயன்றி, விஞ்ஞானத்தை வெறுத்தவர் அல்லர் அவர்.

அண்ணலின் விஞ்ஞானம்

எந்தப் பிரச்சினையையும் முற்றிலும் விஞ்ஞானக் கண்ணேட்டத்தோடு அணுகும் மகாத்மா, மைக்ரோஸ்கோப்பில் தொழுநோய்க்கிருமிகளை ஆராயும் காட்சியும், கூர்மையாகத் தம் கைராட்டையை நோக்கியபடி, ராட்டையில் இன்னமும் என்னென்ன புதுப் புது வளர்ச்சிகள் சேர்க்கலாம் என ஆராயும் காட்சியும் பார்க்கப் பார்க்கப் படு சுவாரஸ்யமானவை.

லட்சக்கணக்கில் அல்ல. கோடிக்கணக்கில் மாகாத்மாவைக் காண ஓடிவரும் கூட்டம், பார்வைப் பரப்பின் எல்லைக்குள் அடங்க மறுக்கிறது.

ஒரே ஒரு தனி மனிதருக்காகச் சேர்ந்ததென அண்மைக்கால வரலாறு 'கண்ட' கூட்டம். கூட்டமல்ல, கோடிக்கணக்கில் கூடிய ஜன சமுத்திரம்.

வேகவேகமாக நடக்கும், வெளித்தோற்றத்திலும் கூட உயர்ந்தவரான அந்த மாமனிதரின் பின்னுல் தண்டியாத்திரையின்போது தடதடவென ஓடிவரும் மக்கள் வெள்ளம் பிரமிக்க வைக்கும் ஒரு கண்கொள்ளாக்காட்சி.

பாரதம் சுதந்திரம் பெற்ற பிறகு எடுக்கப்பட்ட மிகச் சில காட்சிகளும் படத்தில் உண்டு. திரிவேணிசங்கமத்தில் மகாத்மாவின் அஸ்தியைக் கொண்டு கலக்கும் காட்சியைக் காணக் கூடியிருந்த கோடானுகோடி மக்கள் குழாம், நம் நெஞ்சில் பளாரென்று பெரும் சோகத்தை வாரி அறைகிறது.

'அரை நிர்வாண பக்கிரி' என வின்செண்ட் சர்ச்சிலால் வர்ணிக்கப்பட்ட மனிதரின் பிச்சைப் பாத்திரத்தில் ஹரிஜன நிதிக்காகப் பிச்சையாக வந்துவிழும் தொகைதான் எத்தனை லட்சம்!

பெரும் ஜனத்திரளை அமைதியாக இருக்கும்படி மகாத்மா 'உஷ்' என வாய் மீது விரல்வைத்து எச்சரிக்கும் போது, அப்படியே படத்தை நிறுத்தி, அந்த ஸ்டில்லை. குழந்தைத்தனமான அதன் கம்பீரத்திற்காக நாளெல்லாம் பார்த்து ரசிக்கலாம் என்று தோன்றுகிறது.

காந்திக்கு மகாத்மா என்ற பட்டத்தைக் கொடுத்தவர் தாகூரே அல்லவா! சாந்தி நிகேதனுக்கு காந்தி விஜயம் செய்ய, காந்தியும் தாகூரும் சந்தித்துக்கொள்ளும் அபூர்வக் காட்சி, இந்தப்படத்தின் சிறப்பம்சங்களில் முக்கியமான ஒன்று.

காந்தியும், கஸ்தூரிபாவும் தாகூரிடம் காண்பிக்கும் மரியாதையும் தாகூர் அவர்களிடம் காண்பிக்கும் பிரியமும் பாரதப் பண்பாட்டுக்கு இலக்கணம் வகுப்பவை.

மகாத்மாவை விடத் தாகூர் வயதுமிகுந்தவர் என்ற உண்மையே இந்தப் படத்தைப் பார்த்தபிறகுதான் மனதில் படிகிறது.

இன்றைய அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை இது படம் அல்ல; பாடம். அவர்கள் பார்த்துக் கற்றுக் கொள்ளவேண்டியவிஷயங்கள் இந்தப்படத்தில் ஏராளம்.

படம் முடிந்து வெளியே வரும்போது, திரையரங்கை விட்டு வெளியே வரும் உணர்வல்ல, ஓர் ஆலயத்தைவிட்டு வெளியே வருவது போன்ற உணர்வே ஏற்படுகிறது.

மகாத்மா என்கிற இந்த மகத்தான படம் யாருக்குப் பார்க்கக் கிடைக்கிறதோ அவர்கள் பாக்கியசாலிகள்.★

வெள்ளித்திரையில்

சொற்சிலம்பம்

போட்டி இல: 100



சொற்சிலம்பம் இல: 100
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ....
விலாசம்: ....
....

——— இங்கே வெட்டுக ———

முடிவு திகதி: 31 - 05 - 1989

இடமிருந்து வலம்:

1. பத்துப்பாடல்களைக் கொண்ட பிரபந்தம் 4. முடிவு 6. வஞ்சம் 7. விண்மீன் 8. வரவேற்கும் மங்கள உபகரணம் 10. திக்கை குறிப்பது 12. கறுப்பு நிறத்தைக் காட்டுவது 13. கும்பிடு 16. மனம் 18. இல்லறத்திற்குரிய நற்குணங்கள் 20. உள்ளீடற்ற தானியம் 22. மதிப்பதாக இருப்பது 24. வெடிக்கச்செய் 25. உலகம் 26. விஞவுதல்.

மேலிருந்து கீழ்:

1. காளி 2. தலைகீழாய் நிற்கும் தலைவன் 3. சிறியது காரம் பெரிது 4. காய்ச்சல் 5. விரோதம் 7. தாகம் 9. மயில்துத்தம் 11. சமிக்ஞை 12. சோறு சமைக்கும்போது வடித்து எடுக்கலாம். 14. கன்னி 15. ஊழ் 16. உயரம் 17. தவம் 19. சிலப்பதிகார கதாபாத்திரம் 21. ஒன்றைச் செய்யவிடாமல் தடுப்பது 23. சபதம்.

நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினுல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது அறிவுப்போட்டி இல. 25

1. பாதுகாப்புக்கு வேண்டியது? ... கதவு / பூட்டு
2. தாகத்தைத் தணிப்பது? ... தண்ணீர் / மோர்
3. படைகளில் ஒன்று? ... விமானம் / பீரங்கி
4. வயலுக்குத் தேவை? ... வரம்பு / தண்ணீர்
5. ஸ்ரீ கிருஷ்ணன் அரசாண்ட நகரம்? ... துவாரகை / பிருந்தாவனம்
6. தூய்மையானது? ... மலர்கள் / குழந்தைகள்
7. தூங்கவேண்டியது? ... கண்கள் / துயரங்கள்
8. பாண்டவர் வனவாச ஆண்டுகள்? ... 12 ஆண்டுகள் / 14 ஆண்டுகள்
9. பனிப்பறவை எது? ... சக்கரவாகம் / பெண்குயின்
10. முத்திரை வெளியிட்ட முதல் நாடு? ... இங்கிலாந்து / அமெரிக்கா
11. ராம பக்தையில் சிறந்தவர்? ... சபரி / அகலிகை
12. காதற்ற ஊசியும் வாராது காண்கடைவழிக்கே என்றவர்? ... பட்டினத்தார் / அருணகிரிநாதர்.

பெயர்:- ....
விலாசம்:- ....
....

பொது அறிவுப்போட்டி இல: 24
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

.... இங்கே வெட்டுக ....

நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 24 – 05 – 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு:	100 ரூபா
இரண்டாம் பரிசு:	50 ரூபா
மூன்றும் பரிசு:	25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வெளிப்பாடே அஹிம்சை

ஒரு ஜீவனுக்கு ஊறு செய்யாமல் இருப்பது மாத்திரம் அஹிம்சையாகாது. ஹிம்சை அற்ற நிலையே அஹிம்சையாகும்.

சொல்லால், பார்வையால், சைகையால் கூட பிறருக்குத் துன்பம் விளைவிக்காமையே அஹிம்சை.

பிறர் நமக்குத் துன்பம் விளைவிக்கும்போது நம் மனதில் சினமோ, பகையோ, வெறுப்போ எழுவதற்குப் பதில் அன்பு வெளிப்படுவதே அஹிம்சை.

குழாயில் வரும் நீரை வீணில் திறந்து விடுவது, வழியில் வாழைப்பழத் தோலைப் போடுவது போன்ற பிறருக்கு கேடு வரக்கூடிய செயல்கள் அறியாமையினால் செய்யினும் அது ஹிம்சையே.

இத்தகைய செயல்களைத் தவிர்த்து வாழ்தல் அஹிம்சையை வளர்க்கும்.

நமக்குத் தீயன செய்தாலும், செய்தவர் நாண அவருக்கு நல்லது செய்தல் அஹிம்சை.

'இன்னா செய்தாரை
ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்'
(குறள்)

மரம் தன் கிளைகளை மக்கள் வெட்டினாலும் கிளைகளைத் தருவதை நிறுத்துவதில்லை. அஹிம்சாவாதிகளும் அப்படியே.

'சாந்தனையும் தீயனவே
செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பார்
அறிவுடையோர் மாந்தர்
குறைக்குந் தனையும்
குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

தன்னைச் சிலுவையில் அறைந்து உயிர்போகும் நேரத்திலும் கிறிஸ்து பெருமான் தன்னைக் கொல்பவருக்காகப் பிரார்த்திக்கிறார்.

இறைவா...! அவர்கள் அறியாமையினால் செய்கின்றார்கள் அவர்களை மன்னித்து விடும்' என்று'

தனக்குத் தீங்கு செய்பவர்க்கும் துன்பம் வரக்கூடாது என்று இறக்கும் நிலையிலும் பிறர் நன்மையையே நினைக்கிறார்.

'அன்புடையார், என்பும்
உரியர் பிறர்க்கு'

'ஒருவர் நமக்குத் துன்பம் செய்தால் எத்தனை முறை பொறுக்க வேண்டும்...? ஏழு தரம் பொறுக்கலாமோ...?

இவ்வாறு செயின்ட் பீற்றர் கேட்டபொழுது, யேசுபெருமான்,

'ஏழு தரமென்ன எழுபது தாம் ஏழு முறை பொறு' என்றார்.

'ஒருவன் அறியாமையால் எனக்குத் தீங்கு செய்தால் அவனுக்கு நான் குறையாத அன்பைக் கொடுப்பேன். எவ்வளவு கேடு அவனிடம் இருந்து வந்தாலும், அவ்வளவு நல்லது என்னிடம் இருந்து வரும்.

இது புத்தபெருமான் வாக்காகும். ★

- செ. ஞானசேகரம் -

கேதீச்சரத்தானே போற்றி!

அயனொடு மாலுந் தேடி
அறியொணா அமலா போற்றி
மயனொடு துவஷ்டா போற்றி
மாநிதி பெற்றார் போற்றி
வியலுல கெல்லாம் போற்றும்
விமலனே விகிர்தா போற்றி
கயல்விழி அன்ன கௌரி
காந்தனே போற்றி போற்றி.

மாந்தையின் வாழ்வே போற்றி
மாமதிச் சடையாய் போற்றி
யாந்துணை யென்றே யார்க்கும்
யாவையும் அளிப்பாய் போற்றி
காந்தனைப் பயந்த எங்கள்
கடவுளே போற்றி போற்றி
சாந்துணைப் போதும் நின்னை
சரணென அடைந்தோம் போற்றி.

மாநிலம் காக்க வந்த
மரகத வடிவாள் பாங்கர்
மாநிலம் வணங்க வந்த
நவையறு காட்சீ போற்றி
தூ நிலா மதியஞ் சூடும்
தூயனே துரியாய் போற்றி
வாணிலா போன்றே யார்க்கும்
வரமருள் வள்ளால் போற்றி.

- சிங்கையாழியான் -

மக்களை நேசிப்பவர்களையே இறைவனும் நேசிக்கிறான்

★ உமக்கு அநீதி இழைப்பவரை நீர் மன்னித்துவிடும். உம்முடன் உறவை முறித்துக் கொள்பவருடன் உறவு கொள்ளும். உமக்குத் தீங்கு இழைப்பவருக்கும் நீர் நன்மையே செய்யும். உமக்குத் தீமை பயப்பதாக இருப்பினும் உண்மையே உரையும்.

★ நிச்சயமாக உம்மில் இரு நற்பண்புகள் இருக்கின்றன. அவற்றை அல்லாஹ்வும், அவனது ரசூலும் நேசிக்கின்றனர். அவை; 1. பொறுமையைக் கடைப்பிடிப்பதும். 2. உலக விவகாரங்களில் தாமதிப்பதும்.

அமைதி இழக்கச்செய்யும் கஞ்சத்தனமாகும். மேலும் பதற்றமுள்ள கோழைத்தனமுமாகும்.

★ எவன் மக்களின் மீது அன்பு கொள்ளவில்லையோ அவன் மீது இறைவன் ஒரு போதும் அன்பு கொள்ள மாட்டான்.

★ மூன்று விதமான மக்களை மறுமையில் இறைவன் அருட் கண்கொண்டு பார்க்க மாட்டான்.

1. பெற்றோருக்கு மாறு செய்பவன்.

2. ஆண் உடையை அணியும் பெண்.

3. உரோஷமும் சொரணையும் அற்றவன்.

- நபிநாயகம் (ஸல்) அருள்வாக்கு -

★ பொறுமை, மோசம், கடன் இம்மூன்றை விட்டும் எவர் அப்பாற்பட்டிருக்கிறாரோ அவர் அந்நிலையில் இருக்கும்போது இறந்துவிட்டால் சுவர்க்கம் நுழைந்திடுவார்.

★ மனிதனில் உள்ள (மிகப்) பெரும் தீய குணம் (ஒருகாசு செலவு செய்தால் அதன்காரணமாக) அவனை

★ உண்ணுங்கள். அறம் செய்யுங்கள். வீண் விரயமின்றியும், பெருமையடிக்காமலும் உடை அணியுங்கள்.

★ எந்தக் கூட்டத்திலும் சதிச்செயல் குடிகொண்டிருக்கின்றதோ அவர்களுடைய இதயங்களில் [விரோதிகளின்) திகிலை அல்லாஹ் ஏற்படுத்தி விடுகிறான்.

★ பெண்களுக்குரிய ஆடையை அணியும் ஆண்களையும், ஆண்களுக்குரிய ஆடையை அணியும் பெண்களையும் நபி (ஸல்) அவர்கள் சபித்தனர்.

★ மிகவும் உயர்வான ஆடையையும், மிகவும் கீழ்தரமான (மோசமான) ஆடையையும் அணிவதை தடுத்தார்கள்.

★ இவ்வுலகம் இறை நம்பிக்கையாளனுக்குச் சிறையாகவும், நிராகரிப்போனுக்குச் சுவர்க்கமாகவும் இருக்கின்றது. ★

ஆத்ம பலம் பெருக உதவும் ஜெபமும் உபவாசமும்

'நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்பது நமது ஆண்டவர் தம் சீடருக்குக் கொடுத்த கடைசிக் கட்டளை ஆகும்.

இதன் நிமித்தம் தேவனுடைய பிள்ளைகள் அனேகர், தாங்கள் இவ்வுலகில் அனுபவிக்கக் கூடிய சுகங்களைத் தியாகம் செய்து, வேத புத்தகத்தைக் கையிலேந்தியவர்களாய்த் தூரத்திலும், சமீபத்திலும் அலைந்து திரிந்து சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிறார்கள்.

வயதில் பெரியவரும், மரியாதைக்குரியவருமான தன் மாமனாரோடு இரட்சிப்பைக் குறித்து பேசுவது ஜிப்சிக்குச் சிரமமான ஒரு காரியமாகக் காணப்பட்டது.

அவன் அவருக்காக ஜெபிக்க ஆரம்பித்தான். வெகுநாட்களாக ஒழுங்காய் ஜெபித்தான். அவன் அணிந்திருந்த கால்சட்டையின் முட்டுப் பகுதியில் ஒரு சிறிய துவாரம் உண்டாயிற்று.

கிழிந்த காற்சட்டை அணிய விரும்பாத ஜிப்சி இப்போது கிழிந்த காற்சட்டை அணிந்திருந்தாலும் சந்தோஷமுள்ளவனாயிருந்தான்.

ஜிப்சியின் மாமனார் அவனிடம் அவனுடைய காற்சட்டையில் துாரமிருப்பதைச் சுட்டிக் காண்பித்தார். ஜிப்சி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான். தான் அவருடைய இரட்சிப்புக்காக வாஞ்சித்து, வெகுநாட்களாய் அதற்காக ஜெபித்து வருவதைப்பற்றி அவருக்கு சொன்னான். அவன் அதிகமாகப் பேசவில்லை. அவனுடைய

- வண. சாம். செல்வநாயகம் -

இதன் பிரதிபலனாக இவர்களுக்குச் சிலுவையே கொடுக்கப்படுகிறது. என்றாலும் இயேசு போதும் என்று தீர்மானித்து அவரோடு கூட சாந்தமாய்ப் பாடு சகிக்கிறார்கள்.

நாம் இவர்களுக்காக ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பது ஒப்பற்றசேவை என்பதை நாம் அறிவோம்.

ஆத்தும ஆதாயம் செய்வதற்கு ஜெபம் ஒரு சிறந்த முறை என்பதைப் பின்வரும் சம்பவம் நமக்கு விளக்குகிறதாயிருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள ஒரு கிராமத்தில் ஜிப்சி ஸ்மித் என்று ஒரு சிறுவனிருந்தான். அவன் இரட்சிப்பைச் சுதந்தரித்துக் கொண்டபோது தன் மாமனாரை இந்த இரட்சிப்புக்கு வழி நடத்த வேண்டும் என்று ஏவப்பட்டான்.

கண்களில் நீர் ததும்பியது.

சில விநாடிகள் அமைதிக்குப் பின் ஜிப்சியின் மாமனார் அவனைக் கட்டித் தழுவினார். இருவரும் அங்கேயே முழங்காற்படியிட்டனர்.

ஜிப்சியின் மாமனார் தன்னைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தார். இருவரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

ஆம்! பிரியமானவர்களே ஆத்தும ஆதாயம் செய்வதற்குரிய சிறந்த திட்டமான முறை உபவாசமும், ஜெபமும் கண்ணீருமே. இது ஏராளமான தேவனுடைய பிள்ளைகளின் அனுபவமாகும்.

நாம் ஒவ்வொருவரும் இதை நம்முடைய அனுபவமாக்குவோம். தேவனுடைய நாமம் அதிகமாய் மகிமைப்படும். பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாகும். நாமும் ஆசீர்வதிக்கப்படுவோம். ★

ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

'உங்கள் நிறுவனத்தின் மூலம் பெருமளவு நல்ல பலா பலன்களைப் பெற்றுள்ளேன். ஓர் ஆசிரியர் பக்கத்தில் இருந்து படித்துக் கொடுப்பதிலும் பார்க்க தபால் மூலம் தெளிவாகப் படித்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

செல்வன் ஜி. சத்தியசிவன்,
79/15, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி.

'Well Began is half Done' என்பார்கள். அதேபோல் உங்களது தபால்மூலம் ஆங்கில கல்விச் சேவையும் ஆரம்பமே சிறந்ததாக உள்ளது.

செல்வி மும்தாஸ் முகமட்
பராக்கதெனியா, வாதுவ.

I thank you very much for your useful and nice Training.

செல்வி கலாநிதி பொன்னுத்துரை,
நொச்சிமோட்டை G. M. T. S, ஓமந்தை.

'உங்களிடம் மூன்றுமாதத்தில் ஆங்கிலம் திறம்படக் கற்றுக்கொண்டேன். 75% விளக்கமாகக் கற்றுக்கொண்டேன். உங்கள் நிறுவன தபால்மூலம் கல்விச்சேவை வளர்க. அடுத்த உங்களது கல்விச் சேவையில் தொடர்புகொள்வோம்.

செல்வி சிவகௌரி வேலுப்பிள்ளை,
நுணசை ரோட், மாதகல்.

'தங்கள் நிறுவன ஆங்கிலப் பயிற்சிகள் படிப்பதற்கு மிகவும் இலகுவாக இருக்கின்றது'

செல்வி எஸ். சரோஜினி,
99, சென். பெனடிக் மாவத்தை, கொழும்பு-13

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT TRAINING CENTRE
P. O. Box 162, COLOMBO
(C/2353)

கலங்கும் பெற்ற மனம்

பழஞ்சீலை கிழிஞ்சமாதிரி இரைஞ்சு கொண்டிருந்தார் கந்தவனத்தார். மனதில் குமுறும் வேதனைகளை வாய்மடையால் உடைத்துப் பாயும் வார்த்தைகள் மூலம் கொட்டித் தீர்த்து படிப்படியாக வேதனைகளை குறைத்துக் கொண்டுபோக–

''என்னத்துக்கு உந்த மனிசன் உதிலை இருந்து பொருமுது, குடிகாரனோடை இருக்கலாம். உந்தக் கொதிகாரனோடை இருக்கேலாது''.

குசினியிலிருந்து வெளிவந்த பாக்கியத்தின் வார்த்தைகள் கந்தவனத்துக்கு கோபத்தை அதிகரிக்க வைத்தது.

''போனவளை கூட்டிக் கொண்டு வாறதுக்கு ஒருவழியைப் பார்க்காமல் தொடர்ந்தும் பல்லவியைப் பாடிக் கொண்டிருந்தால் – நாளைக்கு ஊர் உலகம் எங்களைப்பற்றி என்ன கதைக்கும்''.

மகளுக்காகப் பரிந்து முனகிக்கொண்டு கையில் பால் கோப்பியை ஏந்தியவாறு பாக்கியம் கந்தவனத்துக்கருகில் வந்தாள்.

'கதைக்கத் தொடங்கியிட்டுதுகளடி! என்ரை பிள்ளைகள் நான் போட்ட கோட்டைத் தாண்ட மாட்டுதுகள் எண்டு தலை நிமிர்ந்து அண்டைக்கு கனகரிட்டை சொன்னன். ஆனால், இண்டைக்கு அவள் என்னை தலைகுனிய வைச்சிட்டாளேடி!'

கோப்பியை கட்டில் மேல் வைத்த பாக்கியம்.

காலாகாலத்திலை அவளுக்கொரு கல்யாணத்தை செய்து வைச்சிருந்தால் நீங்கள் இண்டைக்கு தலைகுனிஞ்சிருப்பியளே...! பிறேமா பருவமடைஞ்சு பதினைஞ்சு வருசமாகியும் ஒருநாளாவது நீங்கள் கல்யாணம் செய்துவைக்கனும் என நினைத்ததுண்டா?

'ஒருநாள் சமையாட்டி ஒருதருக்கும் தெரியாது. ஆனால், ஒரு பெண் வயதுக்கு வந்து வாழ்க்கைப்படாமல் வீட்டிலை இருந்தால் அது இந்த உலகத்துக்கே தெரியுமென எத்தனை நாள் உங்களுக்கு சொல்லியிருப்பன். இதையும் நீங்கள் காதிலை விழுத்தினனீங்களா?'

'இருபத்தெட்டு வயதிலை முந்தநாள்தான் தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்த பிறேமாவை வீட்டுக்கு கூட்டியந்து கொடுக்கவேண்டியதை கொடுத்து அதுகளை வாழவைக்கிறதுக்கு – உங்கண்டை கௌரவத்தை பாத்து பிறேமாவின்ரை வாழ்க்கையை குட்டிச்சுவராக்கிடாதையுங்கோ.. குட்டிச்சுவராக்கிடாதையுங்கோ'.

அழுதபடி கந்தவனத்தின் இருகால்களையும் தனக்கு இதமாக இறுக அணைத்து மன்றாடினாள்.

உதட்டைக் கடித்து மீசையை முறுக்கிக் கொண்டிருந்த கந்தவனம்.

'அதையிதை சொல்லி என்ரை மனதை மாத்துவன் எண்டு மாத்திரம் நினையாதை! பெத்தவங்களை மதியாமல் வீட்டுப்படலையை தாண்டி அங்காலை போனவள் போன பாதையைப் பார்க்கட்டும்'!

கந்தவனத்தின் அதிகாரப் பேச்சு தொடர்ந்து கொண்டு போகிறதே தவிர குறைவதாக வில்லை.

பாக்கியம் என்ன செய்ய முடியும். சமைச்சுப்போடுறது தானே அவளின் வேலை. மற்றயதெல்லாம் கந்தவனத்தின் கையில்தானே! பாக்கியம் முந்தானையால் கண்ணீரைத் துடைச்சுக் கொண்டு குசினிக்குள் நுழைகின்றாள்.

ஜன்னல் கம்பியோடு முகத்தைப் புதைத்துக் கொண்டு, பாக்கியம் கந்தவனத்தின் கால்களைப் பிடிச்சு மன்றாடியதை நினைத்துக் கண்கலங்கினாள் பாமா.

இவ்வளவு காலமும் பிறேமா வாழ்க்கைப்படாமல் வீட்டுக்குள் இருக்கும்போது [illegible] பணத்தைப் பார்த்து ஒரு

வாழ்க்கையை அமைத்து வையாமல். பிறேமா தானாகத்தேடிய வாழ்க்கைக்கு அந்தஸ்து, கௌரவம் பார்த்துத் தடையாக இருக்கும் கந்தவனத்தின் குணத்தையும் பாக்கியத்தின் இளகிய மனசையும் நினைத்து வேதனைப்பட்டாள் பாமா.

'அக்கா போனதிற்கே அப்பா ஒரு கோட்டை போட்டிட்டார். நான் சாந்தனுடன் போனால்......? பாமாவின் சிந்தனை பலதையும் நினைத்தது.

ஒரு முடிவுக்கு வந்த பாமா குசினிக்குள் நுழைந்து,

'உங்களுக்கேனம்மா தொடர்ந்து துன்பங்களும், கஷ்டங்களும் இண்டைக்கொருநாளாவது நீங்கள் ஓய்வை எடுங்கோவன், நான் சமையலைக் கவனிக்கிறன்.'

தேங்காய் துருவிக் கொண்டிருந்த பாக்கியம் பாமாவைப் பார்த்து,

'வேண்டாமம்மா...உன்ரை பிஞ்சு முகத்திலை புகைபடக் கூடாது.

'விடுங்கம்மா... சிலரது மனங்களே கரும்புகைகளாக இருக்கும் போது இந்த வெறும் புகைமட்டும் என்ரை தேகத்திலை பட்டவுடனை நான் கருகியா போயிடுவன். இண்டைக்கு நான் சமையல் செய்யனும்–என்ரை கையாலை நீங்கள் சாப்பிடனும்.'

★ ★ ★

'இண்டைக்கு என்ரை கையாலேயே நீங்கள் சாப்பிடனும்.'

பாமாவின் வார்த்தைகள் திரும்பத்திரும்பப் பாக்கியத்தின் செவிகளில் எதிரொலித்தன.

'எதுக்காக இப்படிச் சொன்னாள்...? ஒரு வேளை இவளும் அக்காள் பிறேமாவைப் போல......'

பாக்கியத்திற்கு அதற்கு மேல் எதையும் நினைக்கமுடியாமல் உள்ளம் கலங்கியது. தலையைக் கைகளினால் அழுத்தியபடி திண்ணையில் அமர்ந்து கொண்டாள். ★

- மண்டனூரார் ரவிச்சந்திரன் -

கவித்துளிகள்

வெயில் 'குளிருமோ'?

மதிய உணவுச்
சமையலிலிருந்த
அம்மா—
'கண்ணா!
சந்திக்கடைக்கு
ஓடிப்போயொரு
அப்பளக்கட்டு
வாங்கிவாடா!
உனக்குத்தானடா' எனக்
குரல் கொடுத்தாள்!
'நெருப்பாயெரியும்
வெயிலில் என்னைக்
கடைக்குப் போய்வரச்
சொல்லுகிறீர்களே' எனச்
சீறி எழுந்தான்—
சிறுவன் கண்ணன்!

★ ★ ★

சில நிமிடங்களில்
படலைக்கு வெளியே
பலமாயொலித்தன—
சைக்கிள் மணிகள்!
'அம்மா.........!
நானிப்பொழுது
கிரிக்கெட் அடிக்கப்
போகிறேன்' என்று
கூவிக் கொண்டு
கண்ணன் தனது
நண்பர்களுடனே
ஓடிடக் கண்டு—
'கடைக்குப் போகச்
சுடுகின்ற வெயில்
கிரிக்கெட் அடிக்கக்
குளிருமாமோ?' எனக்
கண்ணனின் அம்மா
வியந்து நின்றாள்!

- முருகு -

நினைவுகள்

விரட்டியடிக்க முடியாத
விருந்தாளியாகத்
தினமும் என்
நெஞ்சக் கதவைத் தட்டும்
உன்
நினைவுகள்!

அன்பே!
எனக்கு ஒரு தாள் தா
இந்தக் கடல் நீரை மையாக்கி
உனக்கு ஒரு
காதல் கடிதம் எழுத,
அன்பே!
எனக்கு ஒரு தாள் தா.

- வி. ஜெயந்தினி

க[வி]தை

உனது
கள்ளமில்லாத சிரிப்பும்
களங்கமில்லாத அன்பும்
சந்தேகமில்லாத பார்வையும்
அர்த்தங்கள் நிறைந்த
மௌனமும்
இந்தக் கவிதையோடு
மட்டுமல்ல
என் உயிரோடும் வாழும்!
கடல் கடந்து நீ உன்
வாழ்க்கையைத்
தொடர்ந்தாலும்
என் கண்ணுக்குள்ளே
நீ எழுதிய கவிதைகள்
காவியமாய் வாழ்ந்திருக்கும்!

- நல்லூர் தாஸ் -

புன்னகை

ஆலயத்துள்
தீபம் காட்டப்படவில்லை
அகால வேளை என்பதால்!
ஆனாலும் – ஒருகணம்
அந்த ஒளிக்கீற்று
மழை மந்தாரத்தையே
பிரகாசப்படுத்தியது
முற்றத்தில்!

- மாவை-வரோதயன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலால் உணவு மனிதனுக்கு அவசியந்தானு?

பிற உயிர்களை அழிக்காது எவ்வுயிரும் இவ்வுலகில் வாழ்ந்திருக்கமுடியாது- ஒவ்வொரு உயிரும் தான் பிழைத்திருப்பதற்காக பிற உயிர்களை தெரிந்தோ தெரியாமலோ மாய்த்தாக வேண்டியிருக்கிறது.

நீரிலும், நிலத்திலும், காற்றிலும் மிக நுண்ணிய உயிர் அணுக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. நாம் ஒவ்வொருமுறை சுவாசிக்கும் பொழுதும் பல்லாயிரம் உயிர் அணுக்கள் எமது சுவாசத்தில் அகப்பட்டு அழிந்துவிடுகின்றன. நீரிலுள்ள உயிர்அணுக்களை நாம் பல்லாயிரக் கணக்கில் அன்றுடம் விழுங்கிவருகிறோம்.

நாம் உட்கொள்ளும் காய்கறிகளில் நிறைய நுண்ணுயிர்கள் (Bacteria) இருக்கின்றன.

சிருஷ்டியின் பரிணும வளர்ச்சியின் கீழ்மட்டத்திலுள்ள சீவராசிகள் ஒன்றையொன்று கொன்று தின்று உலகை ஒரு கொலைக் களமாக்கிக் கொண்டு வாழ்கின்றன.

சிலந்தி

சிலந்தி பூச்சியைப்பிடித்துத் தின்பதற்காக வலையை இணக்கி வைத்துக்கொண்டு காத்திருக்கும்பொழுது அச் சிலந்தியை பல்லி பிடித்துத் உண்டுவிடுறது.

நீர்ப்பூச்சி நீரில் மிதக்கும் முட்டைப்புழு (Larva) வை உண்ணுகிறது. தவளை நீர்ப் பூச்சியை உண்ணுகிறது. தவளையை பாம்பு பிடித்து உண்டு விடுகிறது.

இயற்கையால் ஏற்படுத்தப் பட்ட இந்த வல்லனவாழும் மரபு நியதி (Survival of the Fittest) உலக இயக்கத்துக்கு இன்றியமையாதது.

ஆனால், இறைவனின் படைப்பில் தமது உணவுக்காக பிற உயிர்களை மனசறிய இம்சிக்காத ஜீவராசிகளும் ஏராளமாக இருக்கின்றன.

புலால் [உண்]கின்ற மிருகங்களுக்கு உயிர்களைக்கொல்வதற்கான அவயவங்களை இயற்கை கொடுத்திருக்கின்றது. கோரப்பற்கள், கூரிய நகங்கள் போன்ற வசதிகளோடு புலாலின் செரிமானத்துக்கு உகந்த குடலமைப்பும் அவைகளுக்கு உண்டு.

மனிதனிக்கு புலாலை உண்பதற்கான பல் அமைப்பையோ புலாலை இலகுவாக சீரணிப்பதற்கான குடலையோ இயற்கை கொடுத்திருப்பதாக கூறமுடியாது,

ஆனால் பகுத்தறிவுள்ள மனிதனே இயற்கையின் படைப்பிலுள்ள சீவராசிகளெல்லாம் தனக்காகவே படைக்கப்பட்டதென்றெண்ணிக்கொண்டு அவைகளை தன் உணவுக்காகவும் சேளிக்கைக்காகவும் அழித்துவருகின்றுன்.

சில சமய மரபுகளில் புலால் உணவு ஏற்புடையதாயிப்பது அச்சமயங்கள் தோன்றியகால, தேச சூழ்நிலைகளுக்குச் சாத்தியமான நெறிமுறைகளும் பழக்கவழக்கங்களுமே காரணங்களாக இருந்திருக்கின்றன.

தாவர உணவைப் போதிய அளவு பெறமுடியாத வனந்தரப் பிரதேசங்களிலும், மிகுந்த குளிர்ப் பிரதேசங்களிலும் வாழ்ந்த பண்டைக் கால மக்களுக்குப் புலாலை உண்ணவேண்டிய அவசியம் இருந்தது. மேலும், ஆதி மனிதனுல் தான் உண்ணக் கூடிய தாவர வகைகளை இனங்கண்டுகொள்ளவும் அவைகளைப் பயிர்செய்யவும் தெரியாதிருந்தது.

ஆதாம் ஏவள்

ஆதாம் – ஏவாள் வாழ்ந்த பூங்காவில் கடவுள் தோன்றி, 'பூவுலகில் உள்ள கனிகளும் விதைகளும் தரும் தாவரங்கள் அனைத்தையும் உனக்கு உணவாக அளிக்கின்றேன்' என்று ஆதாமுக்கு கூறியதாக கிறிஸ்தவ திருமறை கூறுகிறது.

மிருகங்களும் பறவைகளும் இன்னும் உணவுக்கு உகந்த ஜீவராசிகளும் மனிதனின் உணவுக்காகவே சிருஷ்டிக்கப் பட்டதெனக் கூறப்படவில்லை.

உணவுக்காக உயிரைக் கொல்லவேண்டிய நிர்ப்பந்தம் பண்டைக்கால மனிதருக்கு இருந்திருக்கலாம். ஆனுல் தற்கால மனிதனுக்கு அதற்கான அவசியம் இருப்பதாக எண்ணமுடியவில்லை.

மனித உடலின் ஊட்டத்துக்குப் பிரதானமாகத் தேவைப்படுவது புரதச்சத்து, மாச்சத்து, கொழுப்புச்சத்து, உப்பு ஆகியன.

- அ. குமரகுரு -

இவைகள் இறந்த மிருகங்களினதும் பறவைகளினதும் தசைகளைவிட காய்கறி வகைகளில்தான் கூடுதலாகக் காணப்படுகின்றன.

பால், வெண்ணெய், பாலாடை, கொட்டை வகைகள், பயறு, பருப்பு, பட்டாணி வகைகள், மொச்சை அவரை வகைகளில் நிறையப் புரதச்சத்துக்கள் காணப்படுகின்றன.

அரிசி, கோதுமை, புல்லரிசி ஆகிய தானியங்களிலும் பழ வகைகளிலும் அநேகமான காய்கறிகளிலும் மாச்சத்தும், சர்க்கரையும் காணப்படுகின்றன.

கொழுப்புச்சத்து

கொழுப்புச்சத்து எல்லாவித புரதச் சத்துள்ள உணவுவகைகளிலும் காணப்படுகின்றது. எண்ணெய், நெய் வகைகள் மூலமாக நாம் உட்கொள்ளும் உணவுகளில் கொழுப்புச்சத்து சேர்க்கப்பட்டுவிடுகிறது.

உப்பு எல்லா உணவுகளிலும் கூடவோ குறையவோ இயல்பாகவே [கா]ணப்படுகிறது. மேலதிகமாகவும் ருசிக்காகவும் நாம் உப்பைச் சேர்த்துக்கொள்ளுகிறோம்.

எமக்கு சக்தியை அளிப்பது புரதச்சத்து. புரதச்சத்தின் ஊட்டசக்தி அதிலுள்ள வெடியத்(Nitrogen)தைப் பொறுத்திருக்கிறது.

இறைச்சிவகைகளில் நிறைய வெடியம் இருந்தாலும் அது மிருகங்களின் உடல் மெய்மத்திரிபுகளால் (Tissue-Change) ஓரளவு பாவிக்கப்பட்டுவிடுகிறது. இன்னும் இந்தமாற்றங்களால் உடலில் உருவாக்கப்படும் மூத்திரை (Urea), சிறுநீர் காட்டி (Uric Acid), சதையின் சாற்றில் காணப்படும்மூலப்பொருள்(Creatine) ஆகியனவும் புரதச்சத்து என்றேகொள்ளப்படுகிறது.

தாவரத்திலிருந்து நாம் நேரடியாகப் பெறக்கூடிய புரதச்சத்தை இறைச்சிமூலம் பெறும் பொழுது, சக்தி குறைந்தநிலையிலுள்ள புரதச்சத்தைப் பெறுவதுமாத்திரமன்றி, மிருகங்களின் உடல் கூறுகளில் இருக்கக்கூடிய நச்சுத் தன்மையையும், அவைகளின் நோய்களால் விளையும் தீங்குகளையும் சேர்த்து விலைகொடுத்துவாங்கிவிடுகிறோம்.

கால் நடைகள்

கால்நடைகளின் நச்சுச்சீக் கட்டுக் (Carbuncl, Anthrax etc) களிலிருந்து கசிந்து வெளிப்படும் நச்சுத்தன்மை வாய்ந்த ஊனம் இறைச்சியுடன் சேர்ந்து எம்மை வந்தடையும் பொழுது எமது பெருங்குடல் சிறுகுடல் பகுதிகளில் விஷப்பருக்கள் பரவ நிறைய வாய்ப்பிருக்கின்றது.

நச்சு உயிரணுக்கள் இறைச்சியை வேகவைப்பதால் அழிந்துவிடுவதில்லை. மிருகங்களின் உடல் உள்ளுறுப்புகளால் வெளியேற்றப்படும் அழுக்குகள் இரத்த ஓட்டத்தால் சுத்திகரிக்கப்படுகின்ற போதிலும், அதையும்மீறி சிதிலங்கள் தசைகளுக்குப் பரவி, எம்மிடம் வந்து சேர்ந்துவிடுகின்றன.

புற்றுநோய், கயரோகம், வாதம், குடற்புழுபோன்ற நோய்கள் புலால் உணவால் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் கூடுதலாக உள்ளன. கண்டமாலை] (Scrofula) என்னும் பயங்கர நோய் கூடுதலாக புலால் உண்பதாலேயே சம்பவிக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

புலால் உண்பவர்களிலும் பார்க்க சைவ உணவு உண்பவர்கள்தான் சுகதேகிகளாகவும் பலசாலிகளாகவும் திடகாத்திரம்மிக்கவர்களாகவும் இருக்கிறார்கள் என்று ஆராய்ச்சிகளின் மூலம் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

கிரேக்க பலசாலிகள்

கிரேக்கதேசத்தில் இருந்த ஸ்பாட்டன்ஸ் (Spartans) என்னும் ஆதிவாசிகள் மிகப் பலசாலிகளாக இருந்தார்கள் என்பது உலகறிந்தவிஷயம். அவர்கள் சைவ உணவையே உண்டார்கள்.

ஒலிம்பிக் வீரர்களாகத் திகழ்ந்த கிரேக்கர்களும், பண்டைய ரோமாபுரி காட்சிச் சண்டை வீரர்களும் (Gladiators) சைவ உணவுக் காரர்களே.

மத்திய சிலியின் சுரங்கத் தொழிலாளிகளும் துருக்கிய சுமை தூக்கிகளும் அபரிமிதமான தொழிற் திறமை படைத்தவர்களாகக் காணப் படுகிறுர்கள். அவர்களுடைய தேக பலத்துக்குக் காரணம் அவர்களுடைய சைவஉணவு என்றே கூறப்படுகிறது.

சைவ உணவு உண்பவர்கள் உணர்ச்சிவசப்படாதவர்களாகவும் சாந்தமான நோக்குடையவர்களாகவும் காணப் படுகிறுர்கள். ★

பிரியமான சஞ்சீவியே!

செந்தமிழர் வளர்ச்சிக்குச் சிறந்த நல் உரமாகத் தினகதிரை அள்ளித்தரும் சிறந்த நல் உதயனுடன் பெருமை மிகு சிறுகதையும் பொன்மொழிகள் பலவற்றைப் பிரியமுடன் நாம் படிக்க சனியதனில் ஜனனிக்கும் சஞ்சீவியே! நீ சிரஞ்சீவி!!

— நல்லைமலர்

என்னைத் தொட்டுவிட்ட சஞ்சீவி!

என் அன்புச் சஞ்சீவியே!

ஆதவனைக் கண்ட தாமரைபோல் சந்திரனைக் கண்ட அல்லிபோல் சனியன்று உன்னைக்கண்டவுடன் அப்பப்பா! இன்பத்தில் துள்ளும் என்மனம்,

அதிலும் சென்ற இதழில் வெளியான "என்னைத் தொடாதே" - சிறுகதை என்னைத் தொட்டு விட்டதே!

— ஆர். எஸ்ரெல்லா —

சஞ்சீவி முத்து

சஞ்சீவி என்னும் பெயருடையாள் — மனச்
சஞ்சலம் தீர்த்திடுவாள்
வாரத்தில் ஒருநாள் வருவாள் — தமிழ்
சாரத்திலே பல தருவாள் — மணி
ஆரத்திலே இவளொரு முத்து
இந்த மங்கையின் மீது எனக்கொரு பித்து.

—வேலணையூர் பாக்கியன்

மாணவர் மனம் கவர்ந்த மகத்தான சஞ்சிகை!

22 - 4 - 1989 சஞ்சிகை அரிய ஆக்கங்களைத் தாங்கி வந்தது.

இந்துநாகரிகம் பற்றிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் கட்டுரை அருமை.

சிறுகதை தரமானதாக இல்லை ஏன்? சிறந்த கதைகள் தங்கள் வசம் இல்லையா?

இலக்கியப் படைப்புகள் இதயம் கவர்ந்தன. கவிதைகள் தேன்துளிபோல சிதறிக்கிடந்தன.

உலக உலா 'லெபனுன்' பற்றிய முழு விபரங்களையும் உள்ளடக்கியிருந்தது சிறப்பு.

மொத்தத்தில் எம்போன்ற மாணவர் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட சஞ்சிகை நீடூழி வாழ்க.

—உயர்தர மாணவர்கள்.
யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி

மனித குலத்தின் பிரதான எதிரி வளிமண்டலம் மாசடைவதே!

எம்மைச் சூழ்ந்திருக்கும் நிலம், நீர், வளி என்பவற்றுள் நிலத்தினை நாம் விலை கொடுத்துப் பெற்றுக்கொண்டாலும், நீர் வளி என்பவற்றுக்கு பொதுவில் பணம் கொடுப்பதில்லை.

எனினும் இலவசமான பொருட்கள் என்பதினுல் இவை தரம் குன்றிப் போவதை நாம் அனுமதிக்க முடியாது.

தொழிற்சாலைகள், வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்கள் ஆறுகள், ஏரிகளை சாக்கடைகளாக மாற்றுகின்றன. மோட்டார் வாகனங்கள், தொழிற்சாலைப் புகைக்கூடுகளிலிருந்து வெளியேறும் புகை வளியை மாசு படுத்துகின்றது.

நடைபாதையில் கூவிச் செல்லும் வியாபாரிகள், ஒலி பெருக்கிகள், லொறி, ட்ரக், ஆகாயத்தில் ஊடுருவிச் செல்லும் ஜெட் விமானங்கள் செவிப்பறையை அதிரடைய வைக்கின்றன.

பொதுவில் சூழலின் அமைதி, தூய்மை என்பன மனித நடவடிக்கைகளினுல் சீர்குலைக்கப்படுகின்றது.

நச்சுப்புகை

1930 இல் நச்சுப்புகை மூட்டத்தினு பெல்ஜியம், இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட இறப்புகள்—

1952 இல் லண்டன் நகரில் நான்கு நாட்களுக்கு மேலாக தொடர்ந்த புகைமூட்டத்தினுல் 4,000க்கும் அதிகமானோரின் இறப்பு என்பவற்றின் விளைவாக 1960களின் இறுதிப்பகுதியில் வளி, நீர் தூய்மையாக்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

வளிமாசடைதல் ஆரம்ப காலத்திலிருந்தே தொடரும் செயல்முறையாக உள்ளது. காட்டுத்தீயினுல் புகைமூட்டம் ஏற்படுதல், எரிமலைகள் வெடிக்கும்போது வெளியேறும் தூசி, தூசு என்பன ஆரம்ப காலத்தில் வளியை மாசடையச் செய்தது.

இத்தகைய மாசடைதலை இயற்கையாக மழைபொழிதல் ஈடுசெய்தது. ஆரம்ப காலத்தில் மாசடைதலும் மெதுவான ஒரு செய முறையாகவே இருந்தது.

இன்று முன்னேற்றம் அடைந்த தொழில்நுட்ப முறைகளால் ஏற்படும் விளைவுகள் வளி மாசடைதலை வேகப்படுத்தியுள்ளன.

மனித தொழில் நடவடிக்கைகளினுல் உருவாக்கப்படும் வாயுக்களின் எண்ணிக்கையை அளவிடமுடியாது.

ஆறு அசேதனப் பொருட்கள்

அறிவுக்கு எட்டியவகையில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஆறு அசேதன வாயுக்களும், மேலும் எண்ணற்ற சேதன வாயுக்களும் வளிமண்டலத்துள் உட்பிரவேசிக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

சேதனப் பொருள்கள்

- ஜீவரஞ்ஜினி திசராஜா (பி. ஏ., எம். எஸ்ஸி) -

எரிவதால் காபனீரொட்சைட் உருவாகின்றது. இக் காபனீரொட்சட் படையானது சூரியக்கதிர்களை உட்புக விடுமளவுக்கு வெளியேற விடுவதில்லை. இத்தகைய காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் அளவுக்கு அதிகமாகச் சேருமிடத்து புவிமேற் பரப்பு வெப்பம் அதிகரிக்க வழிவகுக்கின்றது.

இதன்மூலம் [மு]னைவுப்பகுதிகளின் பனிக்கட்டிக் கவிப்புகள் உருகுவதால் கடல்மட்டம் உயர்வடைந்து கரையோரப் பகுதிகள் நீருள் அமிழ்வடையும் சாத்தியக் கூறுகள் உள்ளன. எனினும் வேறு பலரது கருத்துப்படி; காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்த போதிலும் கடந்த 30 வருடங்களில் பூமி படிப்படியாக வெப்பத்தை இழந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இதனைவிட கோளரீதியாக வெப்ப சமநிலையைப் பாதிக்கும் இன்னெரு வாயு ஓசோனுகும். உயர்மட்டத்தில் பறக்கும் விமானங்கள் ஓசோனின் அளவை அதிகரிக்கச்செய்யும் எனக் கருதப்படுகின்றது.

மோட்டார் வாகனப்புகையில் காபன்மொனெக்சைட்' நைதரசன்ஒட்சைட் என்னும் வாயுக்கள் கலந்துள்ளன. இதில் நைதரசன் ஒட்சைட்டில் சூரிய ஒளி படுவதால் ஏற்படும் இரசாயனத்தாக்கம் நகரப்பகுதிகளில் மஞ்சள் கலந்த பிறவுன் நிற வளியை உருவாக்குகின்றது, இது தாவர, மிருக வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய தொன்றுகும்.

தேங்கிநிற்கும் நீர், தொழிற்சாலைக் கழிவுகளில் இருந்து வெளியேறும் நச்சுத் தன்மையான நைதரசன் சல்பைட் ஆகியன சிலசமயம் உயிருக்கு ஆபத்தை விளைவிக்காத போதிலும், பழுதடைந்த முட்டையை ஒத்த இதன் துர்நாற்றமானது மனிதனுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது.

நிலக்கரி, எண்ணெய் எரிவதன் மூலம் ஏற்படும் சல்பூரிக் ஒக்சைட்டே லண்டன் நகரில் 1952 இல் ஏற்பட்ட உயிர் அழிவுக்குக் காரணமாக இருந்தது. புகைநிறைந்த பனிக்காலத்தின்போது ஏற்படும் கண்நோவு, தொண்டை எரிவு என்பவற்றுக்கு வளி மாசடைதலே காரணமாகும்.

இதனைவிட போர்க்காலங்களில், வெடி குண்டுகள் வெடித்தல், ஆகாயமார்க்கமாக ஏற்படும் வெடி தாக்குதல்களின்போது வெடித்துச் சிதறும் உலோகத்துகள்களினுல் கண்ணுக்குப் புலப்படாத கதிரியக்கப்பாதிப்பு ஏற்படுகின்றது. இது மனித, தாவர வாழ்க்கைக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகும்.

இதனைவிட நவீன கிருமிநாசினிகள், ரப்பர் தேய்வுப் பொருட்கள், கடதாசித்தூசுகள், கண்ணுக்குப் புலப்படாத கண்ணுடித்துகள்கள், துருப்பிடித்த உலோகத்துகள்கள் வளிமண்டலத்தில் மிதந்து வளியைத் தூய்மை கெடச் செய்கின்றன.

வளிமாசடைதலால் ஏற்படும் விளைவுகள் உலகம் முழுவதிலும் உணரப்பட்ட போதிலும் இன்னும் சரியான முறையில் ஆய்வு நடைபெறவில்லை என்றே கூறவேண்டும். மாசடைதல் பற்றிய நுட்பமான தரவு பெறப்படுதல், இதனைத் தவிர்க்கும் வழிமுறைகள் என்பன எதிர்வு கூறப்படவேண்டும். இதற்கான ஆய்வுகள் எதிர்காலத்தில் விரிவடையும் என எதிர்பார்க்கலாம். ★

மனிதம்

என்
சிவப்பு ரோஜாவே!
இது
பசுந்தரை தான்
பாலைவனமல்ல!
இருந்தாலும்
எங்கள்
தாகம் தீர்க்க
ஓர் துளி
தண்ணீர் கூடக்
கிடைக்கவில்லையே!
ஊற்றுக்கள்
உருமாறிப் போய்விட்டன!
நல்ல வேலை
[illegible]
- [illegible] -



'ஹேலீஸ் ஸ்னுப் ஷொட்ஸ்'
அதி நவீன புகைப்படத் தொழில்நுட்ப நுணுக்கங்கள் பொருந்திய
கோப்பல் 7050 மினி லாப் முறையும்
போட்டோ பினிசிங் நிலையமும்
கொழும்பு 10. பொஸ்டர் ஒழுங்கை 25 ஆம் இலக்கத்தில் திறந்து வைக்கப்படுவதைப் பெருமையுடன் அறிவிக்கின்றது.

வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன
விசாரிக்க வேண்டிய முகவரி :
திரு. என். எஸ் விஜேரட்ண
ஹேலீஸ் போட்டோ பிரிண்ட் (பிரைவேட்) லிமிடட்
25, பொஸ்டர் ஒழுங்கை,
கொழும்பு 10.
தொலைபேசி: 599087 - 599100

ஹேலீஸ் ஸ்னுப் ஷொட்ஸ்
வாழ்காலம் நிலைத்திருக்கும் தரச்சிறப்புக் கொண்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.C.E. A/L
(விஞ்ஞானம், வர்த்தகம், கலை)
G.C.E. O/L
TYPING, SHORT HAND வகுப்புகள்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
வகுப்புகள் வெகு சிறப்பாக
நடாத்தப்படுகின்றன.
BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
சஞ்சிகை

BOND INSTITUTES
(தனியார் கல்வி நிறுவனங்களின் முன்னோடிகள்)
1983 ஆம் ஆண்டின் பின் மீண்டும் முன்னைய உற்சாகத்துடன் அனைத்து வகுப்புகளிற்கும் தரமான ஆசிரியர்களைக் கொண்டு இயங்குகிறது.

20 - 05 - 1989 சனிக்கிழமை

உலக நீச்சல் போட்டியில்
சாதனை நிகழ்த்திய ஸ்பிட்ஸ்

மார்க் அன்ட்ரு ஸ்பிட்ஸ் என்ற ஒலிம்பிக் வீரருக்கு தங்கப்பதக்கங்கள் என்றால் தண்ணீர்பட்டபாடு.

ஆம்! தண்ணீரில் (நீந்தி) இவர் ஏற்படுத்திய சாதனைகளுக்குக் கிடைத்த வெற்றிச் சின்னங்கள்தான் அந்தத் தங்கப்பதக்கங்கள்.

1972 இல் மேற்கு ஜேர்மனியில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 7 தங்கப்பதக்கங்களை அடுத்தடுத்து வென்றெடுத்த மாபெரும் வீரர்.

மேலும் 26 புதிய உலக சாதனைகளையும் நீச்சல் போட்டிகளில் உருவாக்கிக் காட்டியவர்.

இந்த 26 சாதனைகளும்கூட தனிப்போட்டிகளில் மட்டும் தான்.

அஞ்சல் போட்டிகளில் மேலும் 6 புதிய உலகசாதனைகளைப் படைத்தவர்'

7 தங்கப் பதக்கங்களையும் ஒரே ஒலிம்பிக்கில் குவித்தது மாத்திரமல்ல, அவை ஒவ்வொன்றையும் புதிய உலக சாதனையுடன் வென்றவர் இவர்,

புதிய சரித்திரம் ஒன்றைப் படைக்கும் நம்பிக்கையுடன் 1972 மியூனிச் ஒலிம்பிக்கில் பங்குபற்றினர். அவரின் நம்பிக்கை வீண்போகவில்லை.

அவர் கலந்துகொண்ட முதல் போட்டியான 200 மீற்றர் 'பட்டர்பிளை' நீச்சல் போட்டியில் புதிய உலக சாதனைபடைத்தார்!

இந்த ஒலிம்பிக்கில் 8 நாட்களில் மொத்தம் 13 போட்டிகளில் பங்குபற்றி 7 தங்கப் பதக்கங்களைப்பெற்றார்.

100மீற்றர், 200மீற்றர் 'பிரீஸ்டைல்', 100மீற்றர், 200மீற்றர் 'பட்டர்பிளை', 4×300 மீற்றர் மற்றும் 4×200 மீற்றர் பிரீஸ்டைல் அஞ்சல், 4×100 மீற்றர் அஞ்சல் ஆகியவற்றில் இந்தத் தங்கப் பதக்கங்களை அவர் வென்றார்.

10 வயதிலேயே அமெரிக்க நாட்டில் நீச்சலில் உலக சாதனை ஏற்படுத்திய மார்க் அன்ட்ரு ஸ்பிட்ஸ் கலிபோர்னியோ மாநிலத்தில் மடெஸ்டோ என்ற இடத்தில் 1950 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் சிறுவராக இருந்த போது இயற்கைக் கடல் எழில் சூழ்ந்த உலகப்புகழ் ஹவாய் தீவில் குடியேறியது இவரின் குடும்பம்.

தண்ணீரில் விழுந்தால்தான் நீச்சல் பயிலமுடியும் என்பார்கள்: அதற்கேற்ப மார்க் ஸ்பிட்ஸும் நீச்சலையே பொழுதுபோக்காகக்கொண்டு பிற்காலத்தில் பெரிய நீச்சல் வீரராக தன்னைத் தயார்படுத்திக்கொண்டார்.

அப்போது இவரது தந்தை ஆர்னோல்ட் இவருக்கு ஓர் அறிவுரை சொன்னார்.

'நீச்சல் மட்டுமே அனைத்தும் ஆகிவிடாது. அதில் வெற்றியீட்டியும் காட்ட வேண்டும்' —என்றார் தந்தை.

அதைத்தொடர்ந்து தனது 10 ஆவது வயதில், நீச்சலில் 'பட்டர் பிளை' பிரிவில் அமெரிக்காவின் புதிய சாதனையைப் படைத்தார்.

தனது 15 ஆவது வயதில், முதன் முதலாக சர்வதேசப் போட்டியில் பங்குபற்றினார். ★

யாழ். மென்பந்து கிரிக்கெட் வளர்ச்சிக்கு உதவும் சென்றலேட் விளையாட்டுக் கழகம்

அருகிவரும் போட்டிகளினால் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட்டின் தரம் மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையை மேம்படுத்துவதில் மென்பந்து கிரிக்கெட் போட்டிகளும் ஓரளவு சிறந்த பங்களிப்பினைச் செய்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறான மென்பந்துப் போட்டிகளை இன்னிங்ஸ் போட்டிகளாக லீக்முறையில் நடத்தும் ஒரேயொரு கழகமாக சென்றலேட் விளையாட்டுக் கழகம் திகழ்கின்றது.

வருடா வருடம் இக்கழகத்தினால் நடத்தப்படும் போட்டிகளின் 8 ஆவது வருடப் போட்டிகள் தற்போது யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறுகின்றன.

இம்முறை நடைபெறும் இப்போட்டிகளில் குடநாட்டின் பல பாகங்களிலுமுள்ள 22 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இப்போட்டிகள் முதன்முதலில் 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

1982, 84, 88 ஆகிய ஆண்டுகளில் அரியாலை விளையாட்டுக்கழகமும்—

1983, 85, 86 ஆகிய ஆண்டுகளில் சென்றலேட் விளையாட்டுக்கழகமும்—

1987 ஆம் ஆண்டு ஐடியல் விளையாட்டுக் கழகமும் வெற்றிக் கேடயத்தினைச் சுவீகரித்துக்கொண்டன.

- மணிவண்ணன் -

இப்போட்டித் தொடரில் ஓர் அணிபெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை 187 ஆகும். இதனை 1986 ஆம் ஆண்டு சென்றலேட் விளையாட்டுக்கழகம் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத்திற்கெதிரான போட்டியில் பெற்றது.

தனிப்பட்ட ஒருவரின் ஆகக்கூடிய ஓட்ட எண்ணிக்கை 106. இதனை சென்றலேட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தோமஸ் 1986 ஆம் ஆண்டு ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத்துடனான போட்டியில் பெற்றார்.

ஆகக்கூடிய விக்கெட்டுக்களான 7 விக்கெட்டுக்களை ஒரு ஓட்டத்தில் மட்டும் கொடுத்து றெட்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த ஜெயசங்கர் 1988 ஆம் ஆண்டில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத்திற்கெதிரான போட்டியில் பெற்றார்.

1986 ஆம் ஆண்டு நடந்த போட்டி ஒன்றில் சென்றலேட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க. தோமஸ் ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர்களை அடித்து சாதனையை ஏற்படுத்தினார். ★

யாழ்நகரில் இவ்வாரம்

உதைபந்தாட்டம்

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் அப்போதிக்கரீஸ் சுற்றுக் கிண்ணத்திற்காக நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில்,

20.05.89
பி. ப. 3. 15
கிறீன்பீல்ட் வி. க எதிர் அராலி சில்வஸ்ரார் வி. க
பி. ப. 4. 30
அரியாலை வி. க. எதிர் சென்: அன்ரனிஸ் வி. க.

21.05.89
பி. ப. 3. 15
கலைவாணி வி. க. எதிர் யுத்கார்மேல் வி. க.
பி. ப. 4. 30
சென் நீக்கிலஸ் வி. க. எதிர் பொற்பதி வி. க.

22.05.89
பி. ப. 3. 15 (B பிரிவு)
முஸ்லிம் வி. க. எதிர் சென்மேரீஸ் வி. க.
பி. ப. 4. 30 (A பிரிவு)
முஸ்லிம் வி. க. எதிர் சென்மேரீஸ் வி. க.

26.05.89
பி. ப. 3. 15
கலைவாணி வி. க. எதிர் அல்லைப்பிட்டி வி. க.
பி. ப. 4. 30
முஸ்லிம் வி. க. எதிர் அரியாலை வி. க,

இடம்:- பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானம்.

சொற்சிலம்பம் இல: 99

சரியான விடைகள்:

இடமிருந்துவலம்

1. அமளிதுமளி, 5. பணி, 6. சதி, 7. சப்பரம், 8. தழும்பு, 9. பரி, 10. வளர், 11. பதவுரை, 13. கடம், 14. தலைவன், 16. விலை, 17. பால்.

மேலிருந்து கீழ்

1. அபவாதம், 2. மணி, 3 துருப்பு, 4. ஆதி, 6. கம்பர், 7. சம்மதம், 10. வரைதல், 11. படலை, 12. நான், 13. கவி, 15. வடை.

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் சீனாவுக்கு 5 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி கடந்த திங்கட்கிழமை இவரின் சீன விஜயம் ஆரம்பமானது.

கோர்பச்சேவ் தலைமையில் வெளிவிவகார அமைச்சர் எட்வர்ட் ஷெவநாட்சே (Edward Shevardnadze) உட்பட பல உயர்மட்டத்தலைவர்கள் கொண்டசோவியத்தூதுக் குழுவின் சீன விஜயம் சர்வதேச அரங்கில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தலாம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

கோர்பச்சேவ்

உலகின் பெரும் வல்லரசுகளான சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் நிகராக சீனா தன்னை உயர்த்திக் கொள்ளவும்—

மூன்று வல்லரசுகளுக்கும் இடையே ஆயுத சமநிலை ஏற்படவும்—

சர்வதேச நெருக்கடிகள் தணியவும் தற்போதைய கோர்பச்சேவ்-தெங்சியாஓபிங் சந்திப்பு வாய்ப்பை உருவாக்கும் என்று நம்பப்படுகிறது.

30 வருடகாலத்தின் பின்னர் முதல் தடவையாக சோவியத் சீன உச்சி மாநாடு தற்போது நடைபெற்றுள்ளது.

அதுவும் அதிக ஜனநாயக உரிமைகள் கோரி மாணவர்கள் நடத்தும் போராட்டத்தினால் சீனா குழம்பி உள்ள வேளையில் இந்த உச்சிமாநாடு நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவுக்கு அதிக ஜனநாயக சுதந்திரங்களை வலியுறுத்தி வந்த சீன முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஹூயா பாங்கின் (Huyaq bang) மரணத்தை அடுத்து கடந்த ஒரு மாதகாலமாக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

தற்போது உண்ணாவிரதமும் நடைபெற்று வருகிறது. பீகிங்கின் பிரதான ரியன் அன்மென் சதுக்கம் (Tiananmen) போர்க்களமாக மாறி வருகிறது.

சித்தாந்த ரீதியில் ஏற்பட்ட பிளவு

கடந்த 40 வருட காலத்தில் இல்லாத பெரும் சோதனை சீனாவுக்கு.

கடைசியாக 1959 ஆம் ஆண்டில் அப்போதைய சோவியத் பிரதமர் நிகிட்டா குருஷேவ் (Nikita Khrushchev) சீனத் தலைவர் மாஸேதுங்கை பீகிங்கில் சந்தித்தார். அமெரிக்காவில் அதிபர் ஐசன் ஹோவரைச் சந்தித்துவிட்டு மாஸ்கோ திரும்பும் வழியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச்சந்திப்பு முட்டுக்கட்டையை அகற்ற உதவவில்லை.

சந்திப்பு இடம்பெற்று ஒரு வருடகாலத்தில் சீனாவும் – சோவியத் யூனியனும் சித்தாந்தரீதியில் பிளவுபட்டன.

1970 ஆம் ஆண்டுவரை இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் அணுத்தாக்குதல் நடைபெறக்கூடிய அளவுக்கும் மோசம் அடைந்திருந்தன. [illegible] து மரணமான பின்பு

சீன - சோவியத் உச்சி மாநாடு
சர்வதேச அரங்கில் புதிய திருப்பம்
30 வருடகால கெடுபிடி யுத்தத்துக்கு முடிவு

நெருக்கடிநிலை தளர்ந்தது:

எனினும் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து தேக்க நிலையிலேயே இருந்து வந்தன.

சோவியத் அதிபர் லியோனிட் பிரெஷ்னேவின் காலம் வரை இந்த தேக்க நிலைமை நீடித்தது.

பிரெஷ்னேவின் பின் பதவிக்கு வந்த யூரி அன்ரோபோவ் (Yuri Andropov) கொன்ஸ்ரன்ரின் ஷெர்னென்கோ (Konstantin Chernenko) மிக்கெய்ல் கோர்பச்சேவ் (Mikhail Corbachev) வரிசையில் ஏற்பட்ட படிப்படியான மனமாற்றங்களே சோவியத்-சீன உச்சிமாநாட்டுக்குத் தற்போது வழிவகுத்துள்ளன.

மூன்று நிபந்தனைகள்

சோவியத் யூனியனுடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு 1982 ஆம் ஆண்டு சீனா மூன்று நிபந்தனைகளை விதித்திருந்தது.

1. ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைகள் வெளியேற வேண்டும்.
2. கம்பூச்சியாவில் இருந்து வியட்நாம் படைகள் வெளியேற வேண்டும்.
3. சீன-சோவியத் எல்லையில் குவித்து வைத்துள்ள படைகளை சோவியத் யூனியன் குறைக்க வேண்டும்.

★ ஆப்கானிஸ்தானில் இருந்து கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதியுடன் சோவியத் யூனியன் தனது படைகளை வாபஸ் பெற்றுக்கொண்டது.

★ கம்பூச்சியாவிலிருந்து இந்த ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் படைகளை வாபஸ் பெறுவதற்கு வியட்நாம் இணங்கி இருக்கிறது.

★ 4500 மைல் நீளமுள்ள சீன – சோவியத் எல்லையில் தான் வைத்துள்ள 4 லட்சத்து 50 ஆயிரம் துருப்புகளில் இரண்டரை லட்சம் பேரைக் குறைக்க சோவியத் யூனியன் இணங்கி இருக்கிறது.

அதுமட்டுமல்ல. நல்லுறவின் ஓர் அறிகுறியாக சீனாவுடனான மொங்கோலிய எல்லையில் உள்ள தனது படைகளில் மூன்றில் ஒரு பங்கினரை வாபஸ் பெறும் நடவடிக்கைகளை இம்மாதம் முற்பகுதியில் சோவியத் யூனியன் ஆரம்பித்தது. சீனாவும் மொங்கோலியாவும் 6700 மைல் நீள எல்லையைக் கொண்டவை.

சீனாவின் கம்யூனிஸ்ட் தலைமைப்பீடத்துக்கும் சோவியத் தலைவர்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடு நேற்று இன்று ஆரம்பமானது அல்ல.

சீன உள்நாட்டு யுத்தத்தின் போதே ஆரம்பித்திருந்தது.

1927 ஆம் ஆண்டு அப்போதைய சீன ஜனாதிபதி

தெங் சியா ஓ பிங்

சியாங்கே ஷேக் (Chlangkai-Shek) கம்யூனிஸ்ட் களை எடுப்பு நடத்தி ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட்டுகளைப் படுகொலை செய்தார்.

அப்போதைய 'சோவியத்' அதிபராக இருந்த ஜோஸப் ஸ்ராலின் அதனைக் கண்டிக்கவில்லை.

ஒரே பார்வையில்

★ நீண்ட உள்நாட்டு யுத்தத்தின் பின் 1949 ஆம் ஆண்டு மாஸேதுங் தலைமையில் சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டது. சியாங்கேஷேக் தலைமையிலான கோமிண்டாங் தேசியவாதிகள் தைவானைக் கைப்பற்றி அமெரிக்க உதவியுடன் அங்கு தமது ஆட்சியை ஏற்படுத்தினர்.

★ கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டவுடன் சீனாவை அங்கீகரித்த முதலாவது நாடு சோவியத் யூனியன்.

★ 1950 ஆம் ஆண்டு சீனாவும் சோவியத் யூனியனும் நட்புறவு ஒப்பந்தம் செய்துகொண்டன.

★ 1952 ஆம் ஆண்டு கொரிய யுத்தம்.

★ 1956 ஆம் ஆண்டு ஜோஸப் ஸ்ராலினைக் கண்டித்து அப்போதைய சோவியத் பிரதமர் நிகிட்டாவ் குருஷேவ் ஆற்றிய உரை சீனத்தலைவர் மாஸேதுங்குக்கு சினத்தை ஏற்படுத்தியது.

★ 1959 இல் குருஷேவ் சீனாவுக்கு விஜயம் செய்து சீனத்தலைவர் மாஸேதுங்குடன் உச்சிமாநாடு.

★ 1960 இல் தனது ஆலோசகர்களை சோவியத் யூனியன் சீனாவில் இருந்து வாபஸ் பெற்றுக்கொண்டது. சோவியத் — சீன பிளவு முதல்தடவையாக வெளிப்படையாகத் தெரியவந்தது.

★ 1964 இல் சீனாவின் முதலாவது அணுகுண்டுப் பரிசோதனை.

★ 1966 இல் சீனாவின் கலாசாரப் புரட்சி ஆரம்பம்.

★ 1969 இல் சீன – சோவியத் எல்லையில் இருநாட்டுப்படைகளுக்கும் இடையில் மோதல்.

★ 1971 இல் அப்போதைய அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹென்றிகீஸிஞ்சர் சீனா விஜயம்.

★ 1972 இல் ரிச்சேர்ட் நிக்ஸன் சீனா விஜயம்.

★ அதே ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவுக்கு அங்கத்துவம்.

★ 1976 இல் தலைவர் மாஸேதுங் மரணம். தெங்சியா ஓபிங் புதிய தலைவர்.

★ 1978 இல் சோவியத் ஆதரவுடன் கம்பூச்சியாவுக்குள் வியட்நாம் படையெடுப்பு.

★ 1979 இல் அமெரிக்க — சீன உறவுகள் சுமூக நிலையை அடைந்தன. அப்போதைய அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் சீனாவுடன் முழு அளவிலான ராஜீய உறவுகளை ஏற்படுத்தினார்.

★ 1979 இல் ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் யூனியன் படையெடுப்பு.

★ 1985 இல் சோவியத் அதிபராக மிக்கெய்ல் கோர்பச்சேவ் பதவி ஏற்பு. சீனா அவரைக் குறிப்பிடும்போது 'தோழர்' என்ற பதத்தைப் பாவித்தது.

★ 1986 இல் கோர்பச்சேவ் விளாடிவொஸ்ரொக்கில் உரை நிகழ்த்துகையில் சீனாவுடன் நட்புறவுக்கு அழைப்பு விடுத்தார்.

★ 1988 இல் ஆப்கானிஸ்தான் தொடர்பாக ஜெனிவாவில் சமாதான ஒப்பந்தம்.

★ 1988 இறுதிப் பகுதியில் சீன வெளிவிவகார அமைச்சர் குயான் கிசென் (Qian Qichen) சோவியத் யூனியனுக்கு விஜயம்.

★ 1989 முற்பகுதியில் சோவியத் வெளிவிவகார அமைச்சர் எட்வர்ட் ஷெவநாட்சே சீனா விஜயம்.

★ 1989 மே 15 இல் கோர்பச்சேவ் சீனா விஜயம். ★

உலக உலா
என். பி. சிலன்]

உள்நாட்டு யுத்தத்தில் கம்யூனிஸ்ட்டுகளுக்கு சோவியத் யூனியன் மறைமுகமாக ஆயுதங்களை வழங்கிய போதிலும் சியாங்கே ஷேக்கின் கோமிண்டாங் தேசியவாதிகளின் அரசை கம்யூனிஸ்ட்டுகள் சுலபமாகத் தோற்கடித்து விடுவார்கள் என்று சோவியத் யூனியன் அப்போது நம்பவில்லை.

சீன - அமெரிக்க உறவு

1972 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க அதிபர் றிச்சர்ட் நிக்ஸனின் சீன விஜயத்துடன் சீன அமெரிக்க சகாப்தம் ஆரம்பமான போதிலும் டொனால் றேகனின் பதவிக்காலத்தில் அது குறிப்பிடத்தக்க அளவில் அபிவிருத்தி அடையத் தவறி இருந்தது.

றேகன் நிர்வாகத்தின் தைவான் ஆதரவுப்போக்கே இதற்குப் பிரதான காரணம்.

சீனாவுக்கான உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிக்கும் றேகன் நிர்வாகம் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

எனினும் றேகன் நிர்வாகம் மேற்கொண்ட ஒரு நடவடிக்கை சீனாவுக்கு வாய்ப்பாக அமைந்திருந்தது.

1987 டிசம்பரில் றேகனுக்கும் – கோர்ப்பச்சேவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட நடுத்தர ஏவுகணை ஒழிப்பு ஒப்பந்தத்தின் கீழ் சோவியத் யூனியன் 1752 ஏவுகணைகளை அழித்தது.

இந்த ஏவுகணைகளில் பெரும்பாலானவை சீனாவுக்கே குறி வைக்கப்பட்டிருந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அரங்கில் தற்போது உருவாகிவரும் சுமுக சூழ்நிலையே சீனாவும் சோவியத் யூனியனும் நெருங்கி வர ஓரளவு உதவி உள்ளன.

இந்த நெருக்கம் ஆசியாவில் நெருக்கடியைத் தணிக்க பெரிதும் உதவும் என்று நம்பப்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org